534

...ர் தேச சரித்திரம்



சென்னை

பாலர்

தேச சரித்திரம்

(மூன்றும் புத்தகம்)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 FEB 1942
MADRAS

954

☆

சுந்தர சுப்பிரமணியம்

எழுதியது

2755

☆

ஜயம் கம்பனியார்
புத்தக வியாபாரிகள்
நுங்கம்பாக்கம் :: சென்னை

பதிவு செய்தது] [விலை அணா 7

முதற் பதிப்பு : 1941 — விக்கிரம, தை

சக்தி பிரஸ் லிமிடெட் (சாந்தி பிரஸ்), சென்னை.

முகவுரை

'பாலர் தேச சரித்திர' வரிசையிலே இது மூன்றாவது புத்தகம்; முதல் பாரத்துக்கும் ஆறாவது ஸ்டாண்டர்டுக்கும் உரிய புதிய பாட திட்டத்தைத் தழுவியே எழுதியது.

சுவை மிகுந்த சரித்திர பாடத்தினைக் கதையே போல் கூறின், பாலரும் இளைஞரும் பரிவுடன் படித்து, இன்பமும் ஞானமும் எய்துவர். இம்முறையில் நம் தேச சரித்திரத்தை இளைஞரது பருவ இயல்பை ஒட்டி விளக்கியும் சுருக்கியும் வரைந்துள்ளோம். ஆங்காங்கே பாடந்தோறும் சித்திரப் படங்களும் கேள்விகளும் அமைக்கப் பட்டுள.

நம் செல்வச் சிறுரும் சிறுமியரும் இந் நூலை வாசித்து நம் தேசத்தினிடம் ஆர்வமும், முன்னோரிடம் மதிப்பும், தம்மிடம் நல்லறிவும் கொள்வரென நினைக்கிறோம்.

ஆசிரியர்

பொருளடக்கம்

பாடம்		பக்கம்
1.	முன்னுரை	5
2.	இயற்கை யமைப்பு	6
3.	தேசவளமும் மக்களியல்பும்	8
4.	புராதன மக்கள்	12
5.	ஆரியர்	17
6.	வேதங்களும் வேதகாலமும்	19
7.	வேதகால நாகரிகம்	22
8.	இதிகாச காலமும் வாழ்க்கையும்	24
9.	புதிய மதங்கள்	27
10.	சமண மதம்	29
11.	புத்த மதம்	31
12.	பாரசீகரின் படையெடுப்பு	34
13.	அலெக்சாந்தரின் படையெடுப்பு	35
14.	மகத மன்னர்	37
15.	சந்திரகுப்த மௌரியன்	39
16.	அசோகன்	42
17.	மௌரியரின் வீழ்ச்சி	46
18.	கனிஷ்கன்	48
19.	சந்திரகுப்தன்	51
20.	சமுத்திரகுப்தன்	52
21.	விக்கிரமாதித்தன்	53
22.	குப்தர் குலேதல்	56
23.	ஹர்ஷன்	58
24.	ராஜபுத்திரர்	61
25.	ராஜபுத்திர ராஜயங்கள்	63
26.	தட்சிண ராஜ்யங்கள்	65
27.	ஆந்திரர்	67
28	சாளுக்கியர்	68
29.	ராஷ்டிரகூடர்	71
30.	பல்லவர்கள்	73
31.	தமிழகம்	76
32.	தமிழரின் அரசியல்	78
33.	சோழ ராஜ்யம்	80
34.	கரிகால் பெருவளத்தான்	82
35.	இடைக்காலச் சோழர்	84
36.	பாண்டிய ராஜ்யம்	89
37.	பாண்டிய வேந்தர்	90
38.	சேர ராஜ்யம்	94
39.	சமயாச்சாரியர்	97
40.	பாரத ஜோதி	102

பாலர்

தேச சரித்திரம்

1. முன்னுரை

நாம் பிறந்து வாழும் தேசம் பாரத தேசம். இதற்கு இந்தியா என்னும் பெயரே பிரபலம். பாருக்குள்ளே இது பழமையும் பெருமையும் பொருந்திய தேசமாம்.

ஞானத்திலே பரமோனத்திலே—உயர்
மானத்திலே அன்னதானத்திலே
கானத்திலே அமுதாக நிறைந்த
கவிதையிலே உயர்தேசம்!

தீரத்திலே படைவீரத்திலே—நெஞ்சில்
ஈரத்திலே உபகாரத்திலே
சாரத்திலே மிகுசாத்திரங் கண்டு
தருவதிலே உயர்தேசம்!

என்று பாரதியார் பாடி யிருக்கிருர். நமது தேசத்தின் நீர் நிலவளமும், ஞான நலமும், கலைப் பெருக்கும் அனைவர் உள்ளத்தையும் ஈர்க்கும். இதன் இயற்கை யமைப்பும் சரித்திரமும் நமக்கு அறிவையும் அபிமானத்தையும் வளர்க்கும். ஆதலின் அவற்றை ஆராய்வோம்.

2. இயற்கை அமைப்பு

இந்தியா ஒரு பெரிய தேசம். பரதகண்டம் என்றும் இதனை அழைப்பதுண்டு. பரதன் என்னும் பேரரச னொருவன் முன்னம் மிக்க சிறப்புடன் இங்கு ஆண்டுவந்தான். அதனுல் பரதகண்டம் எனும் பெயர் வழங்கலாயிற்று.

பக்கத்தில் உள்ள படத்தைப் பாருங்கள். வட கோடி முழுவதும் கிழக்கு மேற்காக **இமயமலைத்** தொடர் பெரிய மதில்சுவர்போல் உள்ளது. வட மேற்கிலும் வடகிழக்கிலுங் கூட அம்மலைத்தொடர் பரவியிருக்கிறது. அதன் நீளம் சுமார் 2,000 மைல்; அகலம் சுமார் 200 மைல்; உயரமோ சில இடங்களில் 5 மைல். அதுவே பாருலகில் பெரிய மலை. இத்தேசத்தின் மத்தியிலே கிழ்மேலாக மற்றொரு மலையும் உண்டு. இதற்கு **விந்தியமலை** என்று பெயர். இந்தியாவை இது இரண்டாகப் பிரிக்கும்.

இமயமலைக்கும் விந்தியமலைக்கும் இடையே பற்பல நதிகள் பாய்கின்றன. அவைகளில் பிரமபுத்திரா, கங்கை, யமுனை, சிந்து ஆகிய நான்கும் முக்கியமானவை. முதல் மூன்று நதிகளும் கிழக்குமுகமாக ஓடி, இமயமலைக்குத் தெற்கேயுள்ள பிரதேசங்களை வளம்படுத்தும். சிந்துநதியோ மேற்குமுகமாக ஓடி, அப்பால் தெற்கே திரும்பி, பஞ்சாபையும் சிந்து நாட்டையும் செழிக்கச் செய்யும். இந்நதிகள் பாயும் பிரதேசம் சமவெளியாம். ஆதலின், அதனை **சிந்து கங்கா சமவெளிப் பிரதேசம்** என்பர். அங்கே விளைவு மிகுதி; வர்த்தகம் அதிகம்; செல்வமும் ஏராளம்; ஜன நெருக்கமும் அதிகம்.

விந்தியமலைக்குத் தெற்கே யுள்ள பூமி மேட்டு நிலம். எனவே, அதனைத் **தட்சிண பீடபூமி** என்பர்.


இமயமலை
பிரமபுத்ரா
பஞ்சாப்
சிந்து
கங்கை
மகதம்
விந்தியாமலை
கோதாவரி
சோழம்
வங்காள குடாக்கடல்
① குமரிமுனை
② மதுரை
③ திருச்சி
④ தஞ்சை
⑤ காஞ்சி
⑥ சென்னை
⑦ மைசூர்
⑧ பம்பாய்
⑨ கல்கத்தா
⑩ பாடலிபுரம்
⑪ ஆக்ரா
⑫ டில்லி
⑬ தக்ஷசிலம்
⑭ மகாபலிபுரம்

அங்கே கோதாவரி, கிருஷ்ணா எனும் நதிகள் கிழக்கு நோக்கி ஓடுகின்றன. நருமதை, தபதி என்னும் நதிகள் மேற்கு நோக்கி ஓடும். இப்பாகத்தில் காடும் சுரம்பும் அதிகம். ஆற்றோரங்கள் வளமை வாய்ந்திருக்கும். ஆயினும் சிந்து கங்கா சமவெளியைப் போல் அவ்வளவு செழுமை கொண்டதன்று. இங்கே புன்செய்ப் பயிர்வகைகளே மிகுதி ; ஜனத்தொகை குறைவே.

தட்சிண பீடபூமிக்குத் தெற்கே கன்னியாகுமரி முனைவரையில் உள்ள பிரதேசம் தென்னிந்தியா எனப்படும். தென்னிந்தியாவிலும் காவிரி, வைகை, தாமிரவர்ணி முதலிய நதிகள் பாய்கின்றன. இதன் மேற்கிலும் கிழக்கிலும் தென்வடலாக மலைத்தொடர்களுண்டு. அவை மேற்கு மலைத்தொடர், கிழக்கு மலைத்தொடர் என்பனவாம். மேற்கு மலைகளிலே ஏலம், கிராம்பு, காப்பி, தேயிலைப் பயிர்கள் அதிகம். கன்னியாகுமரி முனையே நமது தேசத்தின் தென்கோடி. அம்முனைக்கு அப்பால், தெற்கிலே சிம்மளம் அல்லது இலங்கைத் தீவு இருக்கிறது.

கேள்விகள் :—1. பரத கண்டம் என்று பெயர் வந்ததேன்? 2. இந்தியாவின் வடக்கே மதில் சுவர்போல் உள்ள மலை எது? 3. இந்தியாவை இரண்டாகப் பிரிப்பது எந்த மலை? 4. சிந்து-கங்கா சமவெளியின் விசேஷம் என்ன? 5. கன்னியாகுமரி எங்குள்ளது?

---

3. தேசவளமும் மக்களியல்பும்

நம் தேசத்தின் வடக்கிலும் வடமேற்கிலும் மதில்சுவர்கள் போல் மலைத்தொடர்கள் அமைந்திருக்கின்றன. ஏனைய மூன்று பக்கங்களிலோ சமுத்திரம் சூழ்ந்துள்ளது. மேற்கே அரபிக்கடல், கிழக்கே வங்காள விரிகுடா ; தெற்கே இந்து மகா சமுத்திரம். எனவே,

அம்மலைகளும் கடல்களுஞ் சேர்ந்து, நம் இந்தியா தேசத்துக்கு இயற்கையான பாதுகாப்பாகும்.

வடக்கே இமயமலையைக் கடத்தல் முடியாது. வடமேற்கில் **கைபர், போலன்** என்னும் இரண்டு கணவாய்கள் உண்டு. அவை மூலம் அப்பாலும் செல்ல



கைபர் கணவாய்

லாம்; இப்பாலும் வரலாம். ஆதிமுதல் அயல்நாடுகளிலிருந்து அவற்றின்மூலம் பலர் இங்கே வரலாயினர்; நமது மூதாதைகளும் அவ்வழியே வெளியில் போய் வந்தனர். இன்றும் அவற்றின் மூலம், மேற்கேயுள்ள ஆப்கானிஸ்தானம் போன்ற நாடுகளுக்கு நாம் போய்வரலாம்.

நிலத்தின் இயல்பேபோல் நீரின் குணமும் அமையும். அங்ஙனமே மாந்தரின் குணமும் அவர்

வசிக்கும் பிரதேசத்துக்கு ஏற்ப மாறுபடும். கடலருகே வசிப்பவர் கப்பலோட்டுவதில் திறமைசாலிகளாக இருப்பர். மலைப் பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் பலவான்களாக இருப்பார்கள். பஞ்சாபிலும் வடமேற்கு எல்லைப்புறத்திலும் உள்ள நம்மவரில் பெரும்பாலார் இன்றும் பிரபல போர்வீரர்.

மேலும் சிந்து கங்கா சமவெளியின் செழுமை மிகப் பிரசித்தம். அங்கே இந்திய சக்கரவர்த்திகள் தோன்றிப் பற்பல பெரிய ராஜ்யங்களை நிறுவிப் பேராண்மையுடன் நல்லரசு செலுத்திவந்தனர். அல்லாமலும் பேராசைக்கும் பொறாமைக்கும் அரசர் பலர் அடிமையாகி, ஒருவரை யொருவர் எதிர்த்து, அங்கே சண்டையிட்டும் நின்றனர். அப் பிரதேசத்திலே மற்ற இடங்களைவிட இன்றும் போர்வீர வகுப்பினர் அதிகம்.

அந்த ஸிந்து கங்கா சமவெளியை வடஇந்தியா என்றும், இந்துஸ்தானம் என்றும் சொல்லுவது உண்டு. பல்லாண்டு பல்லாண்டாகப் பேரரசரும் பெருவீரரும் வாழ்ந்துவந்த இடம் அதுவே. புண்ணிய கங்காநதி பாயும் பூமியும் அதுதான். வேதங்களும் உபநிஷத்துக்களும் தோன்றிய தலமும் அதுவே. பகவத்கீதை உபதேசமான இடமும் அங்கேதான் உள்ளது. ஆப்கானிய அரசர்களும் மொகலாய மன்னர்களும் மொய்ம்புடன் அங்கேதான் அரசாண்டிருந்தனர். புண்ணிய தலங்களும் தீர்த்த விசேஷங்களும் அங்கே மிக அதிகம். எனவே சரித்திரத்தில் இந்துஸ்தானம் தலைசிறந்தது.

விந்தியமலையினாலும் பெருங் காட்டினாலும் இந்துஸ்தானத்தினின்றும் தட்சிண பீடபூமி இயற்கையிலேயே வேறாகப் பிரிந்துள்ளது. இந்துஸ்தானம், தட்சிண பீடபூமி ஆகிய இந்த இரண்டு

இடங்களிலுமுள்ள ஜனங்களின் நடை, உடை, பாஷை, தொழில், உணவு முதலியவற்றில் வேறுபாடுகள் பல காணப்படும். சில சமயங்களிலே இந்துஸ்தான வல்லரசுகளே தட்சிண பீடபூமியின்மீதும் ஆட்சி செலுத்தின. பல சமயங்களிலோ இரண்டு இடங்களிலும் தனித்தனி ராஜ்யங்கள் ஏற்பட்டு விளங்கின; இந்துஸ்தானத்து ஜனங்கள் ஆஜானுபாகுகளாய் அழகும் தோற்றமும் கொண்டிருப்பர். தட்சிண பீட பூமியின் மக்கள் அவ்வளவு உயரமாக இரார். எனினும் அன்னார் அறிவிலும் ஆற்றலிலும் யாருக்கும் குறைந்தோ ரல்லர்.

தென்னிந்தியப் பிரதேசம் விவசாயத்தில் சிறந்தது; சமுத்திரத்தைச் சார்ந்துள்ளதனால் வியாபாரத்திலும் மேம்பட்டது. அதனால் இங்குள்ள ஜனங்கள் ஆதிகாலந் தொட்டு அறிவிலும் நாகரிகத்திலும் சிறந்தோராவர். உலகிலே முதன் முதல் மாந்தர் தோன்றிய இடம் தென்னிந்தியாவே என்பர் சிலர். பண்டைக் கால முதலே அயல் நாடுகளுக்கும் தென்னிந்தியாவுக்கும் கப்பல் வியாபாரத் தொடர்பு உண்டு. அயல் நாட்டவர் அவ் வியாபாரங் கருதி ஆதிமுதல் கடல் வழியே வந்துபோயுளர்.

இந்தியா தேசத்தின் இயற்கை அமைப்பு இப்போது இருப்பதைப் போலவே முன்னம் எக்காலத்திலும் இருந்ததில்லை; அவ்வப்போது மாறுபட்டே வந்துள்ளது. இயற்கை அமைப்பின் மாறுபாட்டினுக்கு ஏற்ப, மக்களின் வாழ்விலும் சரித்திரத்திலும் மாறுபாடு ஏற்படும். இந்தியாவின் புராதன சரிதம் இன்னும் நிச்சயமாகத் தெரியவில்லை. மேதாவிகள் இன்றும் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். அந்த ஆராய்ச்சியிலே புதிய புதிய ஆச்சரியமான செய்திகள் புலப்பட்டு வருகின்றன.

உதாரணமாக, சிந்து நாட்டிலே மோஹன் ஜோ-தாரோ என்னும் இடத்திலும், பஞ்சாபிலே ஹரப்பா என்னு மிடத்திலும் பூமியைச் சரித்திரி ஆராய்ச்சியாளர் தோண்டிப் பார்த்தனர். பார்த்ததில் சிந்து நதிக்கரையிலே ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பெரிய நகரங்கள் இருந்தன என்று புலப்படுகிறது. மேலும், ஆலயங்கள், வீடுகள், ரஸ்தாக்கள், பூமிக்குக் கீழே போகும் சாலகங்கள் இருந்தன என்றும் தெரிகிறது. தவிர, அங்கே அகப்பட்ட ஆயுதங்கள், முத்திரைகள், கருவிகள், நகைகள், பாண்டங்கள் இவற்றை நோக்குகையில், அந்நாளிலே அங்கிருந்த மக்கள் நாகரிக புருஷரெனக் காண்கிறது.

ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன் அங்கே வசித்த மக்கள் திராவிடரைப் போன்றவர்கள் என்பர் சிலர். இது இன்னும் உறுதியாகவில்லை. ஆயினும் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே எத்தனையோ நூற்றாண்டுகளாக இங்கே நாகரிக வாழ்வு தனி சிறந்திருந்த தென்பது நிச்சயம்.

கேள்விகள் :—1. இந்தியாவின் இயற்கைப் பாதுகாப்புக்கள் எவை? 2. கைபர் கணவாயின் பயன் யாது? 3. கடலோர மக்களின் இயற்கைக் குணம் என்ன? 4. சிந்து கங்கா சமவெளியின் செழுமையினாலான பலா பலன்கள் யாவை? 5. இந்துஸ்தானம், தட்சிணபீடபூமி இவ்விரண்டிலும் வசிக்கும் மக்களிடம் என்ன வேற்றுமை உண்டு?

---

4. புராதன மக்கள்

இந்தியாவிலே தற்சமயம் சுமார் நாற்பது கோடி மக்கள் வசிக்கிறார்கள். ஏழு லட்சம் கிராமங்களும் ஏறக்குறைய இருநூறு பட்டணங்களும் இருக்கின்றன. அம்மக்களில் பலர் ஆரியரின் சந்ததியார், சிலர் திராவிடரின் சந்ததியார் என்பர். அந்த ஆரி

யருக்கும் திராவிடருக்கும் முந்தி இங்கே புராதன மாக இருந்த மக்கள் யாவர் என்று திட்டமாகத் தெரியவில்லை. ஆங்காங்கே மலைப் பிராந்தியங்களில் நாகரிகமற்ற மக்கள் பலர் வசித்து வருகின்றனர். அன்னாரே புராதன மக்களின் சந்ததியாம்.

'தென்னிந்தியாவிலே அனாதிகாலமாக இருப் போர் திராவிடர், இவர்களே இந்தியா வெங்கும் பரவினர்' என்று சரித்திர ஆசிரியரில் சிலர் கருது கின்றனர். மனிதன் முதன் முதலாகத் தோன் றிய இடம் தென்னிந்தியாவே என்பதும் சிலர் கூற்று. புராதனமான நூல்களும் சரித்திரங்களும் ஆதாரங்களும் இதற்குக் கிடைக்கவில்லை. ஆயினும் பண்டைக் காலந்தொட்டு, நமது பாரத பூமி பல வகையிலும் சிறந்து நின்றதென நமது புராண, இதி காசங்கள் கூறுகின்றன.

இந்நிலையில் பூர்வீக ஜனங்கள் யாவர் என ஓர் உறுதியுடன் உரைத்தல் கஷ்டம். இந்தியாவின் இயற்கை அமைப்போ அவ்வப்போது மாறிவந் துளது. என்றாலும், சில மேதாவிகளின் ஆராய்ச்சி யைக்கொண்டு சிலவற்றை நிர்ணயிக்கலாம். ஆதியில் அதாவது மிகப் புராதன காலத்தில் இந்தியாவிலே நகரங்களும் கிராமங்களும் அதிமாக இல்லை. காடுக ளும் கரம்புகளுமே மிகுந்திருந்தன.

அக்காலத்திலே ஒருவகையான முரட்டு ஜாதி யார் மிகுதியாக இருந்தனர். அவர்களின் வாசஸ்த லமோ மலைக்குகைகள்; அல்லது கானகத்திலுள்ள புதர்கள்; இன்றேல் மரஉச்சிகள். காய் கனி கிழங் குகளும் விலங்குகளின் மாமிசமுமே அவர்களின் ஆகாரமாம். அவர்களின் ஆடையோ இலை தழை களாலும் மிருகங்களின் தோல்களினாலும் ஆனது. ஆயுதங்களோ கல்லினாலான கத்தி, அம்பு முதலிய

னவாம். ஆகையால் அவர்களைக் கற்கால மனிதர் என்றழைப்பர் சரித்திர ஆராய்ச்சி நிபுணர்.



கற்கால ஆயுதங்கள்

அம்மக்களின் சந்ததியார் நாளடைவில் நாகரிகம் அடைந்தனர். அடையவே அவர்கள் செம்பு,



உலோக கால ஆயுதங்கள்

இரும்பு முதலிய உலோகங்களினால் ஆயுதங்கள் செய்யத் தலைப்பட்டனர்; ஆபரணங்களும் செய்து பூண்டுகொண்டனர். இக்காலத்தை உலோக காலம்

என்பர். அவர்களில் சிலர் தம்மில் இறந்தோரை ஆழ்ந்த குழிகளில் புதைத்தனர். வேறு சிலரோ தாழிகளில் இட்டுப் பூமியில் புதைத்தனர். மற்றுஞ் சிலரோ பிணங்களைச் சுட்டெரித்து எலும்புகளை மட்டும் தாழியிலிட்டுப் பூமியில் புதைத்தனர். அத்தகைய தாழிகள் நமது தென்னிந்தியாவிலே சிற்சில இடங்களில் அகப்பட்டுள. வட இந்தியாவிலே மலைப் பிரதேசங்களில் வசிக்கும் சாந்தலர், கோலர் இவர்களும், நம் தென்னிந்தியாவி லுள்ள தோடர், இருளர், ஏனாதியர் இவர்களும் பூர்வீக மக்களின் சந்ததியார் ஆவர்.

இன்றும் காடுகளிலும் மலைகளிலும் வசிக்கும் அம்மக்களின் தொகை சுமார் முப்பது லட்சம். அவர்களின் நிறம் மிகவும் கறுப்பு. நாகரிகம் என்பது அவர்களிடம் இல்லை என்னலாம். தங்கள் உடலை நன்கு மூடிக்கொள்ளவும் அவர்கள் அறியார். அவர்களின் நடை உடை பாவனைகளெல்லாம் விசித்திரமாக இருக்கும். அவர்களை மலைநாட்டு மக்கள் என்றும், காட்டு மனிதர் என்றும் அழைப்பர். பிற இடங்களிலிருந்து வந்த திராவிடரும் ஆரியரும் அம்மக்களை அடக்கி யொடுக்கி வெருட்டி ஓட்டிவிடவே, அவர்கள் அங்ஙனம் வசிக்க நேர்ந்த தென்பது பலருடைய கொள்கை.

திராவிடர் பூர்வீக காலத்திலே இந்தியாவில் வந்து குடியேறியவர் என்பர் சிலர். வடமேற்குக் கணவாய் வழியே அவர்கள் இங்கே வந்தனராம். இந்தியாவின் தெற்கே கடல்கொண்டுவிட்ட தேசத்திலிருந்து அன்னார் வந்தவர்கள் என்றும் கருதுவர் வேறு சிலர். அவர்களே பூர்வீக மக்கள் என்பர் இன்னுஞ் சிலர். எனவே அன்னவர் எங்கிருந்து வந்தனர் என்று நிச்சயமாக உரைப்பதற்கில்லை.

திராவிடர் கறுப்பு நிறமுடையவர்; சுருண்ட மயிரும் பரந்த முகமும் வாய்ந்தவர்; கூரிய விழிகள் படைத்தவர்; ஆரம்பத்திலே ஆற்றோரத்திலும் கடற்கரையிலும் குடியிருந்தனர்; அப்பால் காடு திருத்தி நாடு ஆக்கிக்கொண்டனர்; பின்னர் நிலத்தைப் பண்படுத்தி வேளாண்மையில் இறங்கினர்.

விளைபொருள் மிகவே அன்னவர் வாணிபத்தில் முனைந்தனர்; அதுபற்றி ஆறுகளையும் கடலையும் கடப்பதற்கு மரக்கலங்கள் கட்டினர்; தேக்கு, சந்தனம், அரிசி, மயில் இவற்றை அயலகங்களுக்குக் கொண்டு சென்று, திரவியந் தேடிவந்தனர். இதனுல் பொருள் திரண்டது. நகரங்களும் கிராமங்களும் அழகிய மண்டபங்களும் அன்னவர் அமைக்கலாயினர். நாளடைவில் கல்வியிலும் நாகரிகத்திலும் அவர்கள் மேம்பட்டனர்.

திராவிடரின் பாஷை தமிழ். தமிழ் என்ருல் இனிமை என்று பொருள். தெலுங்கு, கன்னடம், மலையாளம், கொங்கணம் ஆகிய மொழிகள் அத்தமிழின் கிளைகள். தமிழில் உயர்ந்த நூல்களும் காவியங்களும் ஏராளமாக இருந்தன.

ஆடுமாடுகளையும் கோழிகளையும் தெய்வத்துக்கு அவர்கள் பலியிடுவது வழக்கம். இறந்தவர்களை அன்ஞர் சுட்டெரிப்பதில்லை; ஆனல் தாழியில் வைத்துப் பூமிக்குள்ளே புதைத்து வந்தனர். ஆரியரின் தொடர்பு ஏற்பட்டபின்பே, சுட்டெரிக்கும் வழக்கம் தோன்றலாயிற்று என்பர்.

சரீரக் கட்டிலும் வீர தீரத்திலும் அவர்கள் சிறந்தவர்கள். அவர்கள் பல குலங்களாக இருந்தனர். ஒவ்வொரு குலத்திற்கும் ஒரொரு தலைவன் உண்டு. குலத்திற்குரிய பொதுவிஷயங்களை அத்தலைவன் முன்னிலையில் அவர்கள் முடிவுகட்டுவர்.

பின்னர் அவர்களது ராஜ்யங்கள் பல ஏற்பட்டன. அனைவரும் தம் தம் அரசனுக்கும் குலத் தலைவனுக்கும் அடங்கி வாழ்ந்து வந்தனர். அவர்களின் கிராம பரிபாலனம் வெகு நேர்மையாக இருந்தது. அக்காலத்திலே நிலத்தீர்வை தானியமாகவே வசூலிக்கப்பட்டு வந்தது. அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என அவர்களுக்குள்ளே பிரிவுகள் உண்டு. ஆயினும் அவர்களுக்குள்ளே வேற்றுமை கிடையாது. ஒற்றுமையும் உயர்வுங்கொண்டே அவர்கள் வாழ்ந்து வந்தனர்.

கேள்விகள் :—1. கற்கால மனிதரின் குடியிருப்பு இடங்கள் எவை? 2. தென்னிந்தியாவிலுள்ள பூர்வீக மக்களின் சந்ததியார் யாவர்? 3. திராவிடரின் குணவிசேஷங்களில் மூன்று சொல்லுக. 4. நிலத் தீர்வையை இப்போது எவ்விதம் வசூல் செய்கின்றனர்? 5. முன்னம் எவ்விதம் வசூல் செய்தனர்?

---

5. ஆரியர்

திராவிடருக்குப் பின் இந்தியாவுக்கு வந்தோர் ஆரியர். ஆரியர் என்றால் கண்ணியர் என்பது பொருள். ஆரியர் மத்திய ஆசியாவிலிருந்து கைபர் கணவாய் வழியே இந்தியாவில் புகுந்தார்கள் என்பர். அவர்கள் ஆர்க்டிக் மகா சமுத்திரக் கரையிலிருந்து வந்தார்கள் என்பர் வேறு சிலர்.

'ஆரியர் இருந்த நாடு மிகவும் குளிர்பொருந்திய பூமி. அது வாசத்துக்கு ஏற்றதாக இல்லை. அவர்களின் ஆடு மாடுகளுக்கும் அங்கு மேய்ச்சல் கிடைக்கவில்லை. பயிர் பச்சைகள் பண்ணுவதற்கும் அவ்விடம் தகுதியாக இல்லை. ஆதலின் சுகமே வசிப்பதற்குரிய நாடு தேடி, இந்தியாவுக்கு அன்னவர் வரலாயினர்' என்பதே பலருடைய கருத்தாம்.

'ஆரியர் என்றும் திராவிடர் என்றும் வேறு வேறு ஜாதியார் கிடையாது. பாரத பூமியில் இருந்த அனைவரும் ஆரியரே' என்பார் விவேகாநந்தர். 'வட இந்தியாவிலுள்ள பாரத மக்களையே மேனாட்டினர் ஆரியரென வழங்கலாயினர், அதுவே பிரபல மாயிற்று' என்பர் இன்னும் சிலர்.

கால்நடை வளர்ப்பும் வேளாண்மையுமே அவர்களின் தொழில். அவர்கள் வளமையான இடத்தை நாடி முதன்முதலாக ஆப்கானிஸ்தானம் சேர்ந்து, அங்கே சிறிது காலம் தங்கியிருந்து, அப்பால் கைபர் கணவாயின் வழியே பஞ்சாப் நாட்டில் வந்து தங்கினார்கள். அங்ஙனம் தங்கின கூட்டத்தாரின் இன்ப நிலையைக் கேள்வியுற்று, மேலும் பல ஆரியர் இங்கே வரலாயினர். ஆரியரின் கூட்டம் அவ்விதம் பெருகிவரவே, பஞ்சாப் நாட்டில் அவர்களுக்கு இடம் போதவில்லை. ஆதலின் இன்னும் கிழக்கு நோக்கி கங்காநதி தீரத்தில் பரவலாயினர். இந்தியாவுக்கு வந்த ஆரியருக்கு இந்து ஆரியர் என்று பெயர். பாரசீக தேசம், ஐரோப்பாவில் மத்தியதரைக்கடல் பிரதேசம் இவற்றிலும் ஆரியர் சென்று குடியேறினர்.

ஆரியர் அழகு மிக வாய்ந்தோர். கம்பீரமான தோற்றமும் உற்சாக உணர்ச்சியும் அவர்களின் குண விசேஷம். சரீரபலமும் மனவலியும் அவர்களுக்கு மிகுதியு முண்டு. நீண்ட தலையும், அகன்ற நெற்றியும், அழகிய முகமும் ஆரியரின் இலட்சணமாம். சுயேச்சையாக வாழ்வதில் அவர்களுக்குப் பிரியம் அதிகம். அஞ்சாது போர் புரிவதில் அவர்களுக்கு நிரம்ப ஆவல். அவர்களின் பாஷை ஸம்ஸ்கிருதம். அதன் பொருள் சீர் மிகுந்த பாஷை என்பதாம். அதில் அரிய பெரிய நூல்கள் உள.

ஆதிகாலத்திலே ஆரியர் இங்கிருந்த மக்களுடன் போர்புரிய நேர்ந்தது. அதில் ஆரியரே ஜயம் அடைந்தனர். அதனால் பூர்வீக மக்கள் விந்திய மலையை நோக்கி ஓடி ஒதுங்கி, அங்கே வாழ நேர்ந்தது. ஆரியர் பின்பு தக்காணத்திலும் புகுந்தனர். அப்போது ஆரிய திராவிடக் கலப்பு ஏற்பட்டது; ஆரிய நாகரிகமும் பரவத் தொடங்கிற்று.

முதலில் ஆரியர் கூரைவீடுகளில் வசித்தனர்; அப்பால் கல்வீடுகள் கட்டிக் கொள்ளலாயினர். கோதுமை, யவை முதலிய தானியங்களே அவர்களின் ஆகாரம். நெய், பால், தயிர் இவையும் உணவுக்கு உதவின. கீரை, காய், கனி, கிழங்குகளையும் மாமிசத்தையும் அவர்கள் புசிப்பதுண்டு.

ஆரியர் குடும்பம் குடும்பமாக வசித்து வந்தனர். குடும்பத்தின் தலைவன் தகப்பனே. அவனும் அவன் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் சேர்ந்ததே குடும்பம். குடும்பத்தாரனைவரும் தலைவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பர். ஸ்திரீகளிடம் ஆரியருக்கு அன்பும் மதிப்பும் அதிகம்.

கேள்விகள்:—1. ஆரியரின் ஆதி வாசஸ்தலம் யாது? 2. இந்து-ஆரியர் என்பவர் யார்? 3. ஆரியரின் தோற்றம் எவ்வாறிருக்கும்? 4. ஆரியரின் குணகுணங்கள் எவை? 5. ஆரியரைக் குறித்து விவேகானந்தரின் கருத்து யாது?

---

6. வேதங்களும் வேதகாலமும்

பேச்சைக் கொண்டு ஒருவனது குணத்தையும் நலத்தையும் மதிக்கலாம். அவ்விதமே ஆரியரின் பழக்க வழக்கங்களை வேதங்களினின்று அறிதல் கூடும். ஆரியர் பாடிய பாமாலைகளின் தொகுதியே வேதம் எனப்படும். அப்பாக்களெல்லாம் தெய்

வங்களைக் குறித்த ஸ்தோத்திரங்களாம். பாமாலை தொடுத்தவர்களுக்கு ரிஷிகள் என்று பெயர். இந்த ரிஷிகளில், ஸ்திரீகளும் சிலர் உண்டு. வேதங்களோ நான்காம். அவை, ருக், யஜுர், சாமம், அதர்வணம் என்பன. அவை மிகவும் பழமையானவை; தலைமுறை தலைமுறையாக வாய்மொழிப் பாடமாகவே வந்தவை. ஏட்டிலும் சுவடியிலும் அவை எழுதிவைக்கப்படவில்லை.

அந்நான்கு வேதங்களிலும் முந்தியது ருக் வேதம். அதுவே மிகவும் முக்கியமானது. அதில் 1,024 பாசுரங்கள் உண்டு. ஆரியர் வணங்கின தெய்வங்கள், போட்ட சண்டைகள், இவைபற்றி அப்பாசுரங்களில் காணலாம். ஆரியரின் ஆதிக்கிரந்தம் அதுவே. உலகின் ஆதிக்கிரந்தமும் அது என்பர். ஆரியரின் வரலாறும், வாழ்க்கை விவரங்களும் அவ்வேதங்களில் காணப்படும்.

உலகத்து ஜனங்கள் அனைவரும் சூரியனைப் போற்றுவர். சூரியன் புறப்படாவிடின், உயிர்கள் வாழ்வதெப்படி? ஆரியர் முதன்முதலாக அச்சூரியனை ருக் வேதத்தில் துதித்துளர். அது காரணமாகவே சூரியனை வணங்கி வரலாயினர். இன்றும் சூரியநமஸ்காரம் தெய்வப்பிரார்த்தனை ஆவதுடன், உடம்புக்கும் நல்லது என்பது பலர் கருத்து.

சூரியனுக்கு அடுத்தபடி மனித வாழ்வுக்குத் தேவையானது மழை. 'மழை யின்றி மாநிலத்தார்க்கில்லை.' மழைக்குரிய தேவன் வருணன். அவ் வருணனையும் ஆரியர் வணங்கலாயினர். காற்று உயிர்களுக்கு இன்றியமையாதது. இதற்கு அதிதேவதை வாயுபகவான். ஆகவே வாயுவையும் அவர்கள் வணங்கினர். மின்னலுக்கும் இடிக்கும் தேவன் இந்திரன். இவனையும் அன்னார் போற்றி

யுளர். இவ்விதம் உலகுக்கும் உயிர்களுக்கும் அனு கூலமானவற்றை யெல்லாம் தெய்வங்கள் என ஆரியர் மதித்து வேதத்தில் தோத்திரம் செய்துளர்.

நெருப்பும் மக்களுக்கு மிக அவசியம். அது குளிரைப் போக்கும்; அசுத்தங்களை யெல்லாம் அகற்றும்; பரிசுத்தமும் உண்டாக்கும். ஆதலின் அக்கினியையும் ஆரியர் வணங்கலாயினர்; எல்லாத் தெய்வங்களுக்கும் தூதன் அக்கினி எனக்கருதினர்; தேவர்களைக் களிப்பிக்கவேண்டி, அரிசி, பொரி, நெய் இவற்றை அக்கினியில் இட்டுப் பூஜித்து வந்த னர். ஆரியரின் வீடுகளிலே சதா அக்கினி எரிந்து கொண்டே யிருக்கும். ஆடு மாடுகளை யாகத்தில் பலி கொடுப்பதும் அன்னார் வழக்கம். மாமிசத்தை அவர்கள் புசிப்பர். ஸோமபானம் என்னும் ஒரு வகைப் பானத்தில் அவர்கட்குப் பிரியம் அதிகம்.

இந்தியாவுக்கு வந்ததும், இங்குள்ளாருடன் சதா ஆரியர் சண்டை செய்ய நேர்ந்தது. அவர்களில் தேகபலமும் மனபலமும் உள்ளவர்கள் சண்டையில் ஈடுபட்டனர். இவர்களே க்ஷத்திரியர் ஆயினர். சண் டையிலே ஜயமும் குடும்பத்திலே நலபலமும் உண் டாவதற்குத் தேவர்களை வணங்கவேண்டு மென்று அவர்களுக்குத் தோன்றியது. இதில் ஒரு சிலர் ஈடுபட்டனர். இவர்களே வேதியர் அல்லது பிரா மணர். வேதமோதி வேள்விபுரிதலும் புரிவித்தலும் இவர்களின் கடமைகள் ஆயின.

இனி, வாழ்வுக்குரிய வேளாண்மை, வர்த்தகம், நெசவு முதலிய தொழில்களைச் செய்துவரலாயினர் ஒரு சிலர். இவர்களே வைசியர். மேலே சொன்ன மூன்று வகுப்பாருக்கும் ஏவின வேலை செய்யச் சிலர் அமர்ந்தனர். இவர்களே சூத்திரர். வேதகா லத்திலே நாளாவட்டத்தில் ஆரிய சமூகத்துக்குள்

அங்ஙனம் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்னும் நான்கு பாகுபாடுகள் உண்டாயின.

சமூகவேலை சரிவர நடைபெறவே அவ்விதம் பாகுபாடுகள் தோன்றின. அவர்களுக் குள்ளே ஏற்றத் தாழ்வு என்பது அப்போது கிடையாது. 'எல்லாரும் ஓர் குலம்! எல்லோரும் ஓர் இனம்!' என்றே ஆரியர் வாழ்ந்து வரலாயினர்.

கேள்விகள் :—1. வேதங்கள் என்றால் என்ன? 2. ருக் வேதத்தின் சிறப்பு யாது? 3. ஆரியர் எதை எதை வணங்கினர்? 4. க்ஷத்திரியரின் வேலை யாது? 5. வைசியர் என்போர் யார்?

---

7. வேதகால நாகரிகம்

வேதகாலத்திலே ஆரியர் கூட்டம் கூட்டமாக வசித்து வந்தார்கள். ஒவ்வொரு கூட்டத்திலும் பல குடும்பங்கள் சேர்ந்திருக்கும். குடும்பத்துக்குத் தகப்பனே தலைவன். கூட்டம் ஒவ்வொன்றுக்கும் ஓரொரு தலைவன் உண்டு. அத்தலைவனே அரசன். தலைவனை அக்கூட்டத்தார் நியமித்துக் கொள்வர். கூட்டத்தின் நலத்தைக் குறித்த காரியங்களை அத் தலைவனே நடத்துவான்.

சண்டைக்குச் செல்லுகையில், ஆரியர் தேரின் மீது செல்வர். அத்தேர்களில் குதிரை பூட்டியிருக்கும். அம்பும் வில்லுமே அவர்களின் முக்கிய ஆயுதங்கள். ஈட்டி, கோடரி, வேல், வாள் இவற்றையும் அன்னார் உபயோகிப்பர். பொழுது போக்கினுக்காகவும் தேகப் பயிற்சிக்காகவும் அவர்கள் பந்தயம் நடத்துவதும் உண்டு.

இல்வாழ்க்கையை ஆரியர் சிறப்பாக மதித்தனர். ஒரு தாரமே கொள்ளுதல் ஆரியரது பொதுவான வழக்கம். சிலர் பல மாதரை மணப்பதும்

உண்டு. வயது வந்தபின்பே மாதருக்கு விவாகம் ஆகும். இருபத்தைந்து வயதுவரையில் கல்விகற்று அறிவு நிரம்பியபின்பே ஆடவர் மணவினை கொள்வர். குடும்பத்துக்குத் தலைவன் தகப்பனேயானாலும் மனையாளே வீட்டரசியாக விளங்குவாள். அவள் துணையில்லாமல் கணவன் எக்காரியமும் செய்யான்.

பல குடும்பங்கள் சேர்ந்து வசித்த இடம் கிராமமாயிற்று. ஒவ்வொரு கிராமத்திலும் கருமார், தச்சர், தட்டார், குயவர் முதலிய வெவ்வேறு தொழிலாளரும் இருந்தனர். கருமார் தச்சர் என்பன வெல்லாம் தொழிலைப்பற்றி வந்த பெயர்களேயாம். நாளடைவிலே அன்னார் அனைவரும் வெவ்வேறு ஜாதியினராக எண்ணி நடக்கலாயினர்.

வேதியரிலே கல்விகேள்விகளில் மிகவும் நிரம்பியவர்கள் அரசருக்குப் புரோகிதர் ஆயினர். இவர்களில் பலரும் கானகஞ் சென்று, அங்கே ஆசிரமம் கட்டி வசித்து, வந்த மாணவருக்கு நீதிநூல்களையும் காவியங்களையும் போதித்து வந்தார்கள். இவர்களுக்கு ரிஷிகள் என்று பெயர். ரிஷிகளின் ஆசிரமங்கள் குருகுலங்களாக விளங்கின. கலைகள் பலவும் அங்கிருந்து கிளைத்து, எங்கும் தழைத்தன.

வேதகாலத்தில் ஆரியர் தூய நினைவும், எளிய வாழ்க்கையும், பரஸ்பர ஒற்றுமையும் கொண்டிருந்தனர். ஆதலின் சிந்துநதி தீரமான பஞ்சாபில் வேதங்கள் உதித்தன என்றால், கங்காநதி தீரத்திலோ கலைகளும் உபநிஷத்துக்களும் பிறவும் பிறந்து பெருகி வரலாயின.

கேள்விகள் :—1. யுத்த காலத்தில் ஆரியர் ஏறிச் சென்ற வாகனம் யாது? 2. பந்தயத்தின் நோக்கம் என்ன? 3. ரிஷிகள் என்போர் யார்? 4. குரு குலங்கள் என்றால் என்ன? 5. வேத காலத்திலே ஆரியரின் சிறப்புக்குக் காரணம் யாது?

8. இதிகாச காலமும் வாழ்க்கையும்

முதன்முதல் ஆரியர் குடியேறிய இடம் பஞ்சாப் தேசம். ஐந்து நதிகள் ஓடுவதால் அதற்குப் பஞ்சாப் என்று பெயர் வந்தது. மேலும் மேலும் ஆரியர் வந்து குவிய, அவ்விடம் போதவில்லை. அதனால் கிழக்குநோக்கி அவர்கள் சென்று, கங்காதீரத்தில் அமர்ந்தனர். நாளடைவிலே சிந்து கங்கா சமவெளிப் பிரதேசம் அனைத்தும் ஆரியமக்களின் வாசஸ்தலமாயிற்று.

பின்னர் ஆரியர்களுள் கௌரவர், கோசலர், பாஞ்சாலர், விதேகர் என்ற பற்பல பிரிவார் ஏற்படலாயினர். அக் கூட்டத்தார் ஒவ்வொருவரும் ஆங்காங்கே தனித்தனி ராஜ்யங்கள் அமைத்துக் கொண்டனர். ராஜ்யங்களின் பெயர்கள் அப்பிரிவினரின் பெயரைத் தழுவியே அமைந்தன. இராமாயணம், பாரதம் முதலிய இதிகாசங்கள் ஏற்பட்டன. இதிகாசம் என்றால் 'இப்படி நிகழ்ந்தது' என்பது பொருள்.

மகா பாரதத்திலே வரும் துரியோதனாதியர் கௌரவ குலம் அல்லது குருகுலம். அவர்களின் தலைநகரம் அஸ்தினாபுரி. அந்த நகரம் டில்லி நகருக்கு அருகே இருந்தது. கோசலர் என்போர் கங்கை நதிக்குக் கிழக்கில் வசித்து வந்தனர். இவர்களின் தலை நகரம் அயோத்தி. ஸ்ரீ ராமபிரான் இருந்து ஆண்ட இடம் இதுவே.

விதேகர் என்போர் கோசலத்துக்குக் கிழக்கேயுள்ள பிரதேசத்தில் இருந்தனர். ஸ்ரீ ராமனது மாமனாரான ஜனகர் விதேக நாட்டரசர். இதன் தலை நகர் மிதிலை. சீதா தேவி வாழ்ந்து வந்த இடம் இதுவே. இவ்விதம் ஆரியருக்குள்ளே பற்பல குலங்

களும் ராஜ்யங்களும் உண்டாகித் தனித்தனியே விளங்கி நின்றன. அக்குலத்தார் ஒரோரு சமயம் தங்களுக்குள் மாறுபட்டுப் போர்புரிந்து வந்தனர்.



நாளுக்கு நாள் கலைகளும் ஆராய்ச்சிகளும் பெருகின. தத்துவ ஆராய்ச்சி வளர்ந்தது. பல உபநிஷத்துக்கள் தோன்றின. உபநிஷத்துக்களை

வேதசாரம் என்பர். குல நலத்தையும் குடும்ப நலத்தையும் அரச நலத்தையும் கருதி, யாகங்களும் யக்ஞங்களும் ஆரியர் செய்துவந்தனர். அச்சடங்கு களை விவரிக்கும் **பிராமணங்கள்** என்னும் நூல் களும் எழுந்தன.

இதிகாச காலத்திலே யாக யக்ஞங்கள் நிரம் பின; வேட்டையாடுதலும் பிரபலமாக இருந்தது. யுத்தத்தில் வெற்றி பூண்டதும், அசுவமேதம் போன்ற யாகங்களை அரசர் இயற்றினர். தேசத் திலே கலைகளும் நாகரிகமும் தலை சிறந்துநின்ற காலம் இதுவே. இதிகாச காலத்தை ஆரியர் ஏற்றம் படைத்த காலம் எனல்வேண்டும்.

ஆரியர் பற்பல குலத்தினராகி அரசுகொள்ளத் தலைப்பட்டதும் பெரிய நகரங்கள் தோன்றலாயின. நகரங்கள் நாமகளின் நல்லிடமாகவும், பூமகளின் உறைவிடமாகவும் துலங்கின. ஆற்றோரங்களிலும் நீர் நிலைகளின் அருகிலும் ஆங்காங்கே கிராமங்கள் பெருகின. காடுகள் பலவும் நாடாகி வந்தன.

கிராமங்களை அடுத்தும், அவைகளுக்கு அப்பா லும், காடுகள் நிரம்பி யிருந்தன. காடுகளில் துஷ்ட மிருகங்கள் மிகுதி. அவை வந்து பயிர் பச்சைகளை அழிக்கும். அதற்காக அவற்றை வேட்டையாட மக்கள் முனைந்தனர். இவ்விதம் வேட்டை பிரபலம் ஆயிற்று. வேட்டையில் சிக்கிய மிருகங்களைப் பல ரும் பட்சித்து வந்தனர். வேட்டையாடுதல் க்ஷத்திரி யரின் தொழிலாகவும் கடமையாகவும் முடிந்தது.

பொழுது போக்கினுக்குச் சூதாடுதலும் ஒரு சாதனமாயிற்று. **நள** மகாராஜன் சூதாடி நாடிழந் தான் என்னும் கதை பிரசித்தம். பாண்டவரும் சூதாடி நாடிழந்து வனவாசம் செய்ததும், அப்பால் **மகா பாரத யுத்தம்** மூண்டதும் பிரசித்தமே. சூதும்

வேட்டமும் ஆரிய சமூகத்தினிடையே பெரிதும் தலைமிஞ்சிவிட்டன என்றே சொல்லவேண்டும்.

அரசரும் ராஜ்யங்களும் தோன்றப் படைகள் பெருகின. அவை காலாட்படை என்றும், குதிரைப் படை என்றும், தேர்ப்படை என்றும், யானைப்படை என்றும் நான்கு வகைப்படும். சுருக்கமாக அவற்றை **ரத, கஜ, துரக, பதாதி** என்பர். கங்கா நதிப் பிரதேசத்திலே யானைகள் அதிகம். ஆதலின் யானைப்படை தோன்றியது. உலகிலே வேறு எத் தேசத்திலும் யானைப்படை இருந்ததில்லை.

நாட்டிலே எங்கும் கலாசாலைகளும் கல்விக் கழகங்களும் குருகுலங்களும் நிரம்பி நின்றன. அரசரும் தனிகரும் வித்தியாசாலைகளுக்குப் பொருளுதவி புரிந்து வந்தனர். வித்தியாதானம் சிறந்த தானமாக விளங்கலாயிற்று. வித்வான்களும் குருமார்களும் மானியங்கள் பெற்று, எங்கும் கல்வியையும் கலைகளையும் பெருக்கி வந்தனர். மக்களிடம் கல்வியறிவும், கேள்விநலமும், குணவிசேஷங்களும் தலைசிறந்து நின்றன.

கேள்விகள்.—1. துரியோதனன் எக்குலத்தவன்? 2. கோசலரின் ராஜதானி எது? 3. அசுவமேதம் என்றால் என்ன? 4. இதிகாச காலம் ஏற்றங்கொண்டது எப்படி? 5. நால்வகைப் படைகள் யாவை? 6. இந்தியாவைத் தவிர வேறெங்கும் இல்லாத படை எது?

---

9. புதிய மதங்கள்

கலையிலும் கல்வியிலும் ஒழுக்கத்திலும் உண்மையிலும் பல்லாண்டு பல்லாண்டாக ஆரியர் மேம்பட்டு விளங்கினர். அவர்கள் கண்ட வேதமார்க்கம் இமய முதல் குமரிவரையில் பரவி நின்றது. ஆத்மஞானத்தில் அவர்கள் அடைந்த தேர்ச்சி அதிகம்.

'உலகிலே மனிதர் பிறக்கின்றனர்; திடீரென்று இறக்கின்றனர். ஒருவன் செல்வச்சீமானாக வாழ்கின்றான்; ஒருவன் பரம தரித்திரனாக வருந்துகின்றான். ஒருவன், கண்ணைக் கவரும் வனப்புடையவனாக விளங்குகிறான்; மற்றொருவன் மகா குரூபியாகத் திகழ்கிறான். எனவே வாழ்வென்பது மாயம்; பிறவியும் துன்பம். பிறவாதிருக்க வழிதேடவேண்டும். இதற்கு ஜப தபம் செய்தல் வேண்டும்; பூஜை புனஸ்காரம் பண்ணுதல் வேண்டும்; யாக யக்ஞம் இயற்றுதல் வேண்டும்; கானகஞ் சென்று கடுந்தவம் புரியவேண்டும்' என்று ஆரிய மேதாவிகள் அறிவுறுத்தி வந்தனர். சமூகமும் நல்லதெனத் தலை சாய்த்து அங்ஙனமே நடந்துவந்தது.

நாளடைவிலே, பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்னும் பாகுபாடுகள் ஜாதிப் பிரிவுகளாக மாறின. எல்லாரும் ஓர் இனம் என்பது மறைந்து, அந்த ஜாதிப் பிரிவுகளுக்குள்ளே ஏற்றத் தாழ்வுகளும் ஏற்படலாயின. ஜப தபம், யாக யக்ஞம் இவற்றின் விதிமுறைகள் மிகவும் சிக்கலாயின. அவற்றின் உட்கருத்தை மக்களில் பலரும் அறியாது போயினர். எனவே, கண்மூடித்தனமாக அவற்றை மேற்கொண்டு நடக்க நேர்ந்தது. பிறவித் துன்பத்திற்கு மருந்து கானகஞ் சென்று தவம் புரிதலே என்பதைப் பலரும் மேற்கொள்ள இயலவில்லை. மேலும், வேதியருக்கே தவநிலை உரித்தாகும் எனும் கோட்பாடு சீறி நின்றது.

யாக யக்ஞங்கள் செய்வதில் ஆடு, மாடு, குதிரை இவற்றைப் பலியிட்டுவந்தனர். அத்துடன் அரசரும் பிறரும் வேட்டையாடியும் பல உயிர்களை வதைத்து நின்றனர். எனவே மாமிச போஜனமும் சோம பானமும் எங்கும் பிரபலமாயின. அங்ஙனம் உயிர்க்

கொலை அபரிமிதமாக நேர்வதைக் கண்டு, மக்களிலே பலர் மனநடுங்கினர். வேதத்தின் மெய்ப்பொருளும் உபநிஷதங்களின் உயர்கருத்துக்களும் விளங்காமல் பலர் தடுமாறித் தயங்கினர். சிக்கலென்பதில்லாமல் இனிமையான சீரிய வாழ்வுக்குரிய வகை தெரிய வில்லையே யெனப் பலருக்கும் ஏக்கம் பிடித்தது. இந்நிலையில் வழிகாட்டுவார் வேண்டுமெனப் பாமர மக்கள் பலரும் அண்ணாந்து நின்றனர்.

அப்போது இரண்டு மகான்கள் தோன்றினர். அவர்கள் **மகாவீரரும் கௌதம புத்தருமாம்.** இகபர வாழ்க்கைக்கு உரிய இலகுவான சாதனங்களை அவர்கள் கண்டுணர்ந்தனர்; அவ்விருவரும் முறையே **சமணமதம், புத்தமதம்** எனும் மதங்களைக் கண்டனர்.

கேள்விகள் :—1. பிறவித் துன்பம் என்றால் என்ன? 2. வேட்டையாடுவதால் நேர்ந்த விபரீதம் யாது? 3. புதிய மதங்கள் தோன்றுவதற்கான காரணங்களில் இரண்டு சொல்லுக.

10. சமண மதம்

இந்துஸ்தானத்து நாடுகளில் ஒன்று விதேகம். அதன் தலை நகரம் வைசாலி. அதனை ஆண்டுவந்த ராஜ வமிசத்தாரில் ஒருவர் **வர்த்தமானர்.** அவர் கி. மு. 599-ல் பிறந்தவர். முப்பதாண்டு வரையில் வாழ்விலே அவர் மூழ்கிக் கிடந்தார். அப்போது, 'உயர்ந்த ஆரிய வேதமார்க்கம் மாசடைவதோ? அர்த்தமறியாமல் சடங்கிலும் வேள்வியிலும் ஜனங்களில் பலரும் மயங்கிக் கிடப்பதோ? பாமரர் என்போரும் உய்ய நாம் வழி தேடவேண்டும்' என்று அவருக்குச் சிந்தனை பிறந்தது.

உடனே அவர் கானகஞ் சென்று, கந்த மூலங்களே புசித்து, மக்களின் துக்க நிவாரணத்துக்கு

வழி யாதென ஆராயலானார். ஆராயவே, 'மனம், வாக்கு, காயம் மூன்றிலும் பரிசுத்தமாயிருந்தால் வாழ்விலே துக்கங்கள் நேரா ; சாந்தி பிறக்கும் ; இறப்பும் பிறப்பும் ஒழியும். மனைவி மக்களுடன் வாழ்வதினும், எல்லாம் துறந்த சந்நியாசியாக வாழ்தல் மேலாம்,' என்று அவருக்குத் தோன்றியது.

அப்பால் அவர் காட்டைவிட்டு, நாட்டினில் புகுந்து, அந்த உண்மைகளை அனைவருக்கும் உரைக்கலானார். எந்த உயிருக்கும் துன்பம் செய்யக் கூடாது என்பதே அவரது போதத்தில் முக்கிய அம்சம். வடமொழியிலே அதனை அஹிம்ஸா தர்மம் என்பர். மக்களுக்குள்ளே ஜாதியில் ஏற்றத்தாழ்வு கிடையாது ; உயர்வும் தாழ்வும் குணத்தினால் ஏற்படலாம். இதுவே அவரது போதத்தின் மற்றொரு முக்கிய அம்சமாகும்.

வர்த்தமானர் தம்மளவில் அவ்விதமே நடந்து வந்தார் ; சுக துக்கங்களை அவர் ஜயித்தார். ஆதலின் அவருக்கு மகாவீரர், ஜினர் என்னும் திருநாமங்கள் வழங்கலாயின. அவரது போதங்களைப் பின்பற்றின மக்கள் ஜயினர் என்னப்பட்டனர். அப்போதங்களைக் கொண்ட மதமும் ஜயினமதம் அல்லது சமண மதம் எனப்படும்.

ஜயினருக்கு மற்றொரு பெயர் சமணர் ; மதத்திற்கும் அப்படியே. அஹிம்ஸையை மேற்கொண்ட ஜயினர், ஈ எறும்புக்கும் ஊறு செய்யார் ; நடக்கும் பொழுதும் மயில் விசிறியால் பூமியை நீவி நடப்பதுண்டு. பெருந் துறவிகளான சிலர் பூமியின்மீது வாழாமல் மரங்களிலே உறிகட்டிக்கொண்டு வசித்ததுண்டென நூல்கள் கூறுநிற்கும்.

சமண மதம் புதிய மதம்அன்று. சேதனம், அசேதனமாகிய எல்லாப் பொருள்களும் பரம்

பொருளின் அம்சம் என்பது உபநிஷதங்களின் உயர்ந்த சாரம். எல்லாம் ஈசுவர அம்சம் ஆதலின், எதற்கும் துன்பம் செய்யக்கூடாது என்பதே கருத்தாம். ஆரிய வேத மார்க்கத்தில் அந்தத் தத்துவம் உண்டு. ஆயினும் உயிர்க்கொலை மலிந்த காலத்திலே, அஹிம்ஸை பரமதர்மம் என்று வற்புறுத்திய பெருமை மகாவீரரைச் சாரும்.

ஜயினமதம் ஒரு காலத்திலே நம் தேசத்தில் மிகவும் பிரபலமாக இருந்தது. வடஇந்தியாவிலே ராஜபுதனம், கூர்ஜரம், மாளவம் இந்த இடங்களில் இப்போதும் ஜயினர் மிகுதி. நம் தமிழகத்திலும் ஜயினர் உளர். தமிழ் மொழியிலே அவர்கள் இயற்றிய நூல்கள் பலவாம். சிந்தாமணி, சூளாமணி, நாலடியார், நன்னூல் முதலியன ஜயினர் இயற்றியனவே. தமிழ்மொழிக்கு அன்னார் செய்துள்ள தொண்டு அருமையானது.

எழுபத்திரண்டு வருஷம் மகாவீரர் வாழ்ந்து, கி. மு. 527-ஸு பரமபதஞ் சேர்ந்தார். அவருக்குப் பன்னிரு சீடர்கள் இருந்தனர். அவர்களில் முக்கியமானவர் கோசாலா.

கேள்விகள் :—1. வர்த்தமானர் கொண்ட சிந்தனை யாது? 2. வர்த்தமானர் வாழ்ந்த நூற்றாண்டு யாது? 3. ஜினர் என்று வர்த்தமானர் பெயர் பெற்றதேன்? 4. சமண மதத்தின் சாரம் யாது? 5. சமணர் தமிழுக்குச் செய்த பேருதவி என்ன?

---

11. புத்த மதம்

ஆரிய வேதமார்க்க வாழ்வின் சிக்கல்களைப் போக்க முன்வந்த மற்றொரு மகான் கௌதம புத்தர். இமயமலைப் பிரதேசத்திலே சாக்கிய நாடு என ஒரு நாடு உண்டு. அதன் அரசன் பெயர் சுத்தோதனன். அவன் மனைவி பெயர் மாயாதேவி.

அத் தம்பதிகளுக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. அக்குழந்தையின் பெயர் சித்தார்த்தன். நாளடைவில் அவன் பெரியவனாகி, யசோதரை என்பாளை மணந்தான். கொஞ்சநாள் ஆனதும், இந்த இருவருக்கும் ராகுலன் என்னும் ஒரு குழந்தை பிறந்தது. மனைவியிடத்தும் மகனிடத்தும் சித்தார்த்தனுக்கு அன்பு அதிகம். சுகபோகமாக அவன் சின்னாள் வாழ்ந்து வந்தான்.



ஆயினும் சமூகத்தில் மக்களிடையே தோன்றியுள்ள ஏக்கத்தை அவன் உணர்ந்தான்; உலக வாழ்வின் கஷ்டங்களையும் கண்ணால் கண்டான்; அனைவரும் துக்கம் இன்றிச் சுகமே வாழ ஒரு வழி காண அவனுக்கு ஆவல் பிறந்தது. உடனே அவன் கானகஞ் சென்று கடுந்தவம் செய்தான்; பல பெரியோர்களைக் கண்டும் கேட்டும் அதற்கு வழிதேட விரும்பினான்.

முடிவிலே, 'உயிர்களிடம் அன்பு பூணவேண்டும்; போதுமென்ற மனங் கொள்ளவேண்டும்; ஆசையை அறவே ஒழித்தல் வேண்டும்; உயிர்களுக்குத் துன்பம் செய்தல் கூடாது; பாபம் பண்ணாது வாழவேண்டும்; அப்போது துக்கம் நேராது; பேரின்பமும் கிட்டும்,' என்று அவருக்கு ஞானோதயம் உண்டாயிற்று. உடனே அவர் நாடுதிரும்பி, அந்த உண்மைகளைப் போதிக்கலானார். அவரது போதனை எங்கும் பரவியது. கௌதமபுத்தர், புத்த பகவான் என்று அனைவரும் அவரை அழைத்தனர். அவர் கண்ட மதம் பௌத்த மதம்.

அம்மதத்தின் முக்கிய கொள்கைகளாவன :— "உயிர்க்கொலை கூடாது ; எனவே யாகயக்ஞங்கள் அவசியமில்லை. சிந்தை, செயல், யாக்கை மூன்றும் பரிசுத்தமாக இருக்கவேண்டும். எல்லாரும் துறவு பூண்டு சித்தி எய்தலாம். மனிதருக்குள்ளே ஜாதி வித்தியாசமும் ஏற்றத் தாழ்வும் கிடையா. மனிதன் புரியும் நல்வினை தீவினைக்கு ஏற்றவாறே பலாபலன் கிட்டும். ஆதலின் நல்வினையே புரிதல் வேண்டும்."

கயா நகரிலே அரச மரத்தடியில் அவருக்கு ஞானோதயம் உண்டாயிற்று. ஆதலின் அம்மரத்தை **மகாபோதி** விருட்சம் என்பர். அங்கே புத்தராலய மொன்று நாளடைவில் ஏற்பட்டது. முதன் முதல் புத்தர் காசிக்குச் சென்று, **சாரநாதம்** எனுமிடத்தில் போதம் புரிந்தார். எனவே, அந்த இடம் மகா புண்ணிய ஸ்தலமாகும்.

மக்களில் பலர் அவர் போதத்தில் ஈடுபட்டனர். அரசர் பலரும் அவர் மதத்தை மேற்கொண்டனர். ஆதலினால் அம்மதம் இன்னும் பரவியது. ஒரு காலத்திலே நம் தேசத்தில் அம்மதம் மிகவும் பரவியிருந்தது. இப்போதும் பர்மா, சீனா, ஜப்பான், இலங்கை முதலிய இடங்களில்தான் புத்த மதம் மிகவும் பிரபலமாயுள்ளது.

புத்தரும் சரி, மகாவீரரும் சரி, புதிய மதம் எதுவும் காணவில்லை. அவ்விருவரின் போதங்கள் ஆரிய வேத மார்க்கத்தில் பொதிந்து கிடக்கின்றன. காலத்துக்கு ஏற்றவாறு மனித தர்மத்தை இருவரும் ஓங்கச்செய்து, சமூகத்திலே ஒரு சீர்திருத்தம் உண்டு பண்ணினர். அதன் பின்னர் ஆரிய வேத மார்க்கமும் திருந்தி, வளமை கொண்டது. புத்த பகவான் கி. மு. 567ஆம் முதல் 487ஆம் வரையில் வாழ்ந்திருந்து அப்பால் பரமபதம் சேர்ந்தார்.

கேள்விகள் :—1. யசோதரை என்பாள் யார்? 2. சித்தார்த்தன் கானகஞ் சென்றதேன்? 3. மகா போதி விருட்சத்தின் மகிமை யாது? 4. புத்த மதத்தின் உயர்ந்த கொள்கைகளில் இரண்டு கூறுக. 5. புத்த மதம் இன்றும் பிரபலமாயுள்ள தேசங்கள் எவை?

12. பாரசீகரின் படையெடுப்பு

ஆதியிலே ஆரியரில் ஒரு கூட்டத்தார் பஞ்சாப் நாட்டில் தங்கிவாழ, மற்றொரு கூட்டத்தாரோ பாரசீக தேசஞ் சென்று வசிக்கலாயினர். பாரசீகம் என்பது இந்தியாவின் மேற்கேயுள்ள ஒரு தேசம். அங்கே குடியேறிய ஆரியர் நாளடைவில் பேரரசு கொண்டனர். மேற்கே நெடுந்தூரம் வரையில் அந்த அரசு பரவியிருந்தது.

ஐரோப்பாவின் கீழ்க்கோடியிலுள்ள கிரீஸ் நாட்டினருக்கும் பாரசீகருக்கும் அடிக்கடி சண்டை நிகழ்ந்துவந்தது. அதில் வெற்றியும் தோல்வியும் மாறிமாறி வந்தன. ஆயினும் அக்காலத்திலே பாரசீக வல்லரசு உன்னத நிலை எய்தியிருந்தது. சற்றேறக்குறைய புத்தரின் காலத்திலே பாரசீக வேந்தனாக விளங்கியவன் டேரியஸ்.

அந்நாளில் இந்தியாவின் செல்வச் சிறப்பு உலகப் பிரசித்தம். பஞ்சாப் நாட்டைச் செல்வமகளின் இருப்பிடம் என்னலாம். இது கேட்ட டேரியஸ் (சுமார் கி. மு. 500-ஷு), படையுடன் இங்கு வந்து, பஞ்சாபை வசப்படுத்திக் கொண்டான். சிறிது காலம் பஞ்சாப் மக்கள் பாரசீக ஆட்சிக்கு உட்பட்டு வாழ்ந்திருந்தனர்.

அப்போது பாரசீகப் பார்த்திபன் விடுத்த ஒரு கவர்னரே பஞ்சாபின் பரிபாலனத்தைக் கவனித்து வந்தான். பாரசீக சாம்ராஜ்யத்துக்குள் அன்று செல்வத்திலே சிறந்தது பஞ்சாப்தான்.

ஆண்டுதோறும் 150 கோடி ரூபாய் அது கப்பமாகக் கட்டிவந்தது. அந்நாளில் இந்தியாவிலிருந்து எஃகினுலான ஈட்டியும் பட்டாக்கத்திகளும் பாரசீகத்துக்குப் போயின. பாரசீகத்து வீரர் இந்திய ஆயுதங்கொண்டு பற்பல போர்முனைகளிலே ஆண்மை செலுத்தி வாகை சூடினர்.

நாளடைவிலே கிரீஸில் பெருவீர னொருவன் தோன்றினன். அவன் பெயர் மகா அலெக்சாந்தர். உலகனைத்தையும் ஜயிக்க அவன் ஆசைகொண்டான். உடனே அவன் படைகள் கிளம்பின. எகிப்து, சின்ன ஆசியா முதலிய தேசங்கள் அவனுக்கு அடிப்பட்டன. பழம்பகையை முடிக்க அவன் பாரசீகத்தின்மீது பாய்ந்தான். அப்போது பாரசீக வேந்தன் இந்தியாவின் துணையை நாடினன்.

சண்டையிலே பாரசீகம் தோற்றுப்போயிற்று. பல நகரங்களைப் பாழாக்கி அலெக்சாந்தர் ஆறுதல் கொண்டான். பாரசீகம் வசமானதும், சீரும் செல்வமும் நிறைந்த நமது இந்தியாவின்மீதும் அவன் கண் வைத்தான்.

கேள்விகள் :—1. டேரியஸ் யாவன்? 2. இந்தியாவிலிருந்து பாரசீகத்துக்கு ஆயுதங்கள் போனதிலிருந்து என்ன தெரிகிறது? 3. அலெக்சாந்தர் எந்நாட்டினன்? 4. பாரசீகத்தின் மீது அலெக்சாந்தர் பாய்ந்ததேன்?

13. அலெக்சாந்தரின் படையெடுப்பு

கைபர் கணவாயின் வழியாகவே மகா அலெக்சாந்தர் நம் தேசத்தில் புகுந்தான். முதன்முதல் இந்தியாவின்மீது படைகொண்டு வந்த ஐரோப்பியன் அவனே. பஞ்சாபிலே தட்சசீலம் என்று ஒரு சிறு நாடிருந்தது. இதன் அரசன் அம்பி என்பவன். அச்சம் மிகுந்து, ஆண்மை இழந்து, காணிக்கை

யுடன் சென்று, அலெக்சாந்தரை அவன் வரவேற்றனன். அது கண்டு அலெக்சாந்தருக்கு ஊக்கம் மிகுந்தது. உடனே தட்சசீலத்தைத் தாண்டி இன்னும் கிழக்கே வந்தான் அலெக்சாந்தர்.

அது சமயம் அங்கு ஒரு சின்ன தேசத்தின் அரசனுன போரஸ் (புருஷோத்தமன்) என்பான் தன் படைகளுடன் கிளம்பினுன். அலெக்சாந்தரின் படைப் பெருக்கையும் வெற்றியையும் கண்டும் கேட்டும் புருஷோத்தமன் தயங்கவில்லை; அம்பியின் துரோகங் கண்டு கொதித்து, இந்தியாவின் மானத்தைக் காக்கவே முனைந்து நின்ருன். ஜீலம் நதிக் கரையில் இரு பக்கத்துச் சேனைகளும் சந்தித்தன.

கிரேக்க வீரர் எங்கும் வெற்றி பெற்று வந்தும் என்ன? புருஷோத்தமனது யானைப் படையைக் கண்டு அஞ்சியோடினர். அலெக்சாந்தரும் முதலில் வேசாறிப்போனுன். கிரேக்க வீரர்கள் தீரமுடன் போர் புரிந்தார்கள். புருஷோத்தமன் வெற்றி பெறும் சமயத்தில் காயமுண்டு கீழே விழுந்தான். அவன் ஏறி நின்ற யானையும் படுகாயங்கொண்டு நின்றது. அது சமயம் கிரேக்கர் வந்து புருஷோத்தமனைச் சூழ்ந்துகொண்டனர்.

புருஷோத்தமனது வீரங்கண்டு அலெக்சாந்தர் ஆச்சரியம் கொண்டான். அவ்வேந்தனுடன் நேசங் கொள்ளவே அலெக்சாந்தர் விரும்பினன். உடனே இருவரும் நேசர் ஆயினர். கற்ருரைக் கற்ருரே காமுறுவர் என்பதுபோல் வீரரை வீரரே வியப்பர் அல்லவா?

ஜீலம் நதியைத் தாண்டி, கிழக்கே வரவும், இன்னும் மகதராஜ்யத்தை ஜயிக்கவும் அலெக்சாந்தர் விரும்பினுன். அவனது வீரரோ சொந்த ஊருக்குப் போக எண்ணினர். ஆதலின் கிழக்கு நோக்கி

வரும் விருப்பை அவன் கைவிட நேர்ந்தது. பின்பு அலெக்சாந்தர் சிந்துநதிக்கரை யோரமாகத் தெற்கு நோக்கிச் சென்று, வழியில் உள்ள பற்பல நகரங்களையும் கைப்பற்றிக் கொண்டான். அப்பால் அவனும் அவன் சேனையும் முல்லா கணவாய் வழியே பெலுசிஸ்தானம் சேர்ந்து, சொந்த ஊருக்குத் திரும்பினர். போகும் வழியில் கி. மு. 323 ஷ பாபிலோன் நகரில் அவனுக்குக் காலகதி நேர்ந்தது.

கேள்விகள் :—1. அம்பி என்பான் யாவன்? 2. போரஸுக்கும் அலெக்சாந்தருக்கும் சண்டை எங்கே நடந்தது? 3. அம்பி, புருஷோத்தமன் இந்த இருவரில் யாரை நீ போற்றுவாய்? 4. இந்தியாவிலிருந்து அலெக்சாந்தர் திரும்பிப்போன மார்க்கம் யாது?

---

14. மகத மன்னர்

முன்னம் வட இந்தியாவிலே கோசலம், விதேகம், மகதம் முதலிய பற்பல ராஜ்யங்கள் சிறந்து விளங்கின. அலெக்சாந்தரின் காலத்திலும் அதற்கு முன்பும் தலைசிறந்து நின்றது மகத ராஜ்யம். ஆதியிலே அந்த ராஜ்யத்தைக் கண்டவன் பெயர் பிருகத்திரதன். பன்னெடுங் காலம் மகத சாம்ராஜ்யத்தை அவன் வமிசத்தார் ஆண்டுவந்தனர்.

அப்பால் சிசுநாகர் என்னும் ஒரு வமிசத்தரசர் ஆளத் தொடங்கினர். இவர்களில் ஒருவன் பிம்பஸாரன் எனப்படுவான். இவன் தலைநகரம் ராஜக்கிரகம். புத்த பகவானது போதனை கேட்டு இவன் புத்த மதத்தைப் போற்றத் தலைப்பட்டான். அதனால் அம்மதத்தினுக்குச் செல்வாக்கு மிகுந்தது.

பிம்பஸாரன் மைந்தன் அஜாதசத்ரு. இவனும் புத்த மதத்தில் பெரும்பற்றுக் கொண்டவன்; மகா பராக்கிரமசாலி; பல நாடுகளை வென்று மகத

ராஜ்யத்தைப் பெருக்கினன். இவன் காலத்திலே **பாடலிபுரம்** தலைநகரமாயிற்று. கங்கையும் சோணை நதியும் கூடுமிடத்தில் அந்நகரம் உளது.

சிசுநாக வமிசம் முடியுங்காலையில் மன்னவனாக இருந்தவன் பெயர் **மகாநந்தி.** இவனது சோரமகன் **மகா பத்ம நந்தன்** தன் தந்தையைக் கொன்று பட்டத்துக்கு வந்தான். இந்த நந்த வமிசத்து அரசர் ஓர் ஐம்பது வருஷம் ஆண்டுவந்தனர். இவ் வமிசத்தார்கள் மகா பராக்கிரமசாலிகள். இவர்களிடம் பெருஞ்சேனை யிருந்தது; செல்வமும் குவிந்து கிடந்தது. பேராண்மையும் பேரரசும் படைத்திருந்தும், அலெக்சாந்தரை எதிர்க்க இவர்கள் எழவில்லை.

நந்தராஜ வமிசத்தாரில் **சந்திரகுப்தன்** என்பவன் ஒருவன். இவனுக்கும் நந்தராஜருக்கும் பகை மூண்டது. அதனல் இவன் நாடுகடத்தப்பெற்றான். பின்பு இவன் பஞ்சாப் சென்று, பகை முடிக்கச் சமயம் பார்த்திருந்தான். அன்னிய அலெக்சாந்தரை அண்டிநின்றான் என்பர் சிலர். வேறு சிலரோ அன்னிய கிரேக்கரை முதலில் அங்கிருந்து வெருட்டியோட்ட இவன் முயன்று நின்றான் என்பர். பகை முடிக்கவும் பாராளவும் பஞ்சாபை விடுவிக்கவும் இவன் காலங் கருதியிருந்தான்.

அந் நிலையில் நந்தருக்கு இன்னொரு பகைவன் தோன்றலானன். இவன் பெயர் **சாணக்கியன்;** பிராமண குலத்தில் வந்தவன்; கல்வி கேள்விகளில் சிறந்தவன். இவனை நந்தர் பெரிதும் அவமதித்தனர். அதனல் நந்தரை வேரறுப்பதாக இவனும் சபதம் செய்து புறப்பட்டான். முடிவில் சந்திரகுப்தனும் சாணக்கியனும் பஞ்சாபில் சந்தித்தனர். இருவர் கருத்தும் ஒன்றாயிருந்தது. இருவரும் பஞ்சாபில் பெரும்படை திரட்டி, கிரேக்கரை முதலில்

போரில் வென்றனர். பின்பு பாடலிபுரம் நோக்கிச் சென்று, நந்தரையும் படுகளத்தில் மாய்த்தனர். உடனே மகத ராஜ்யத்துக்கு மன்னவன் ஆனான் சந்திரகுப்தன். சாணக்கியன் மதிமந்திரியாக உடனிருந்து உதவிபுரிந்து வந்தான்.

சந்திரகுப்தன் தாயாரின் பெயர் முரை. அது பற்றி இவன் வமிசத்துக்கு மௌரிய வமிசம் எனும் பெயர் வந்தது. மௌரியரின் காலத்திலே மகத ராஜ்யம் மகோன்னத நிலை எய்தியது.

கேள்விகள் :—1. ஆதியிலே மகத ராஜ்யத்தைக் கண்டவன் யார்? 2. ராஜக்கிரகம் என்பது என்ன? 3. பாடலிபுரத்தைத் தலை நகராக ஆக்கியவன் யாவன்? 4. சந்திரகுப்தன் பஞ்சாப் சென்றதேன்? 5. சாணக்கியனது யோக்கியதை யாது? 6. மௌரிய வம்சம் என்று பெயர் வந்ததேன்?

15. சந்திரகுப்த மௌரியன்

சந்திரகுப்தன் சிம்மாசனத்தில் அமர்ந்ததும், அரசைப் பெருக்க முயன்றான். எல்லைப்புறத்தில் சிறிய சிறிய தனியரசுகளே இருந்தன. கிரேக்கரை எதிர்த்து மறித்துப் போராட அவற்றால் முடியாமல் போயிற்று. இனியும் அங்ஙனம் நேராவண்ணம் சிறிய அரசுகளையெல்லாம் அணைத்து ஆதரிக்கும் பெரிய வல்லரசு காணவேண்டும் என்பதே சந்திர குப்தன் கருத்தாயிற்று.

அலெக்சாந்தர் வென்ற நாடுகளை அவனது சேனைத் தலைவர்கள் பங்கிட்டுக்கொண்டனர். இந்தியாவுக்குமேற்கே யுள்ள பிரதேசங்கட்கு ஸெலுகஸ் நிகேடார் என்னும் கிரேக்கன் அரசன் ஆனான். பஞ்சாபிலே அலெக்சாந்தரின் வசமான பாகங்களைச் சந்திரகுப்தன் பிடித்துக்கொண்டது கேட்டு அவன் சகிக்கவில்லை. அப்பிரதேசங்களை மீட்கவும்,

அலெக்சாந்தரைப் பின்பற்றி இந்தியாவை ஜயிக்கவும், அவன் ஒரு பெரும் படையுடன் இந்தியாவில் புகுந்தான். (கி. மு. 305)

அது கேட்ட சந்திரகுப்தன் சீறி எழுந்தான். மகதப் படைகளும் புறப்பட்டன. சண்டையிலே ஸெலுகஸ் தோற்றனன். உடனே இருவருக்கும் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி, ஆப்கானிஸ்தானம், பெலுசிஸ்தானம் இரண்டையும் சந்திரகுப்தனுக்குக் கொடுத்தான் ஸெலுகஸ்; தன் மகளையும் அம் மன்னவனுக்கு மனைவியாக வழங்கினான்; **மகஸ்தினஸ்** என்பானைத் தனது தூதுவனாகவும் அனுப்பி, சந்திரகுப்தனது அரசவையில் இருக்கச் செய்தான். சந்திரகுப்தனும் நேசப்பான்மையில் 500 யானைகளைப் பரிசாக வழங்கினான்.

சந்திரகுப்தனது பெருமை எங்கும் பரவியது. வட இந்தியா முழுவதும் அவன் ஆளுகைக்கு உட்பட்டது. அக்காலத்தே நேரில் தான் கண்டறிந்ததை யெல்லாம் **மகஸ்தினஸ்** இங்ஙனம் சிறப்பாக எழுதிவைத்துள்ளான் :—

'சந்திரகுப்தனது ஆட்சியிலே மக்கள் சுகமே வாழ்ந்து வந்தனர்; எல்லாரும் சத்திய சந்தராகத் துலங்கினர்; நாட்டிலே மக்களுக்குள் சண்டையும் பூசலும் வழக்கும் அருமை. கொடுக்கல் வாங்கலுக்குச் சீட்டும் நாட்டும் அவசியமில்லை. வீடுகளுக்குப் பூட்டும் சாத்தும் வேண்டியதில்லை.

'தலைநகரம் பாடலிபுரம் மிகவும் பெரிய நகரம்; பதினைந்து மைல் பரப்புள்ளது. நகரைச் சுற்றி மரத்தாலாகிய பெரிய மதிலரண் உண்டு. அக்கோட்டைக்கு 64 பெரிய வாயில்கள்; அதன்மீது 570 சிகரங்கள். மதிலைச் சுற்றிலும் பெரிய அகழி உண்டு. அக்கோட்டைக்குள்ளே ஒரு பூங்காவுக்கு நடுவில்

அரசனது அழகிய மாளிகை. மாளிகையி னமைப்பும் அந்தமும் கண்ணைக் கவரும். அரண்மனையிலே விலை மதிக்கமுடியாத ஆடை ஆபரணங்களும் பண்டங்களும் நிரம்பி யிருக்கும்.

'பாடலிபுர நகரத்தின் பரிபாலனம் மிகவும் நேர்த்தி. நகரின் பரிபாலனத்தைக் கவனிக்க ஒரு சபை இருந்தது. அச்சபைக்கு 30 அங்கத்தினர். அவர்கள் ஐந்தைந்து பேரடங்கிய ஆறு பஞ்சாயத்தாகப் பிரிந்து, நகரின் காரியங்களைக் கவனித்து வந்தனர். பரிபாலனம் வெகு சீராக நடந்தது. சந்திரகுப்தன் சேனையிலே ஆறுலட்சம் காலாளர்; முப்பதாயிரம் குதிரைவீரர்; பத்தாயிரம் யானைவீரர்.'

சந்திரகுப்தனது காலத்திலே இந்தியாவுக்கும் கிரீஸுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. இந்தியாவின் சரக்குகள் ஏராளமாக ஐரோப்பாவுக்குச் சென்றன. வியாபாரம் பெருக இங்கே செல்வம் குவிந்தது. சக்கரவர்த்தி என்றும், ராஜாதி ராஜன் என்றும் சந்திரகுப்தன் பெயர்பெற்றான். மதிமந்திரியான சாணக்கியன் உடனிருந்து உதவிபுரிந்து வந்தான். பெரிய வல்லரசு கண்ட முதல் இந்தியச் சக்கரவர்த்தி அவனே. சுமார் கி. மு. 321ல் அரியணை ஏறி, கி. மு. 297ல் அவன் காலமானான்.

மந்திரி சாணக்கியன் மகா சமர்த்தன்; அரசியலில் அதிவல்லவன்; அர்த்த சாஸ்திரத்தில் நிபுணன். அரசியலை விவரித்து அவன் எழுதியுள்ள அர்த்த சாஸ்திரம் என்னும் நூலை இப்போதும் பலர் கொண்டாடுவர்.

கேள்விகள் :—1. ஸெலுகஸ் படை கொண்டு வந்ததேன்? 2. சந்திரகுப்தனுக்கு ஸெலுகஸ் எவ்வாறு நேசமானான்? 3. மகஸ்தினஸ் என்பவன் யாவன்? 4. பாடலிபுர நகரை ஐந்து வாக்கியங்களில் வர்ணித்து எழுதுக. 5. சாணக்கியன் எழுதிய நூல் எது?

16. அசோகன் (கி. மு. 272 - 232)

சந்திரகுப்த சக்கரவர்த்திக்குப் பின்பு, அவன் மைந்தன் பிந்துசாரன் 25 வருஷம் ஆட்சி புரிந்தான். பிந்துசாரனுக்குப் பின்பு அவன் குமாரன் அசோகன் பட்டத்துக்கு வந்தான்; கி. மு. 261ஆம் கலிங்க நாட்டுடன் யுத்தம் நிகழ, இவன் தண்டுகொண்டு சென்று, அதனை வென்றான்.

'இச் சண்டையிலே இலட்சம் மக்கள் மடிந்தனர்; ஒன்றரைலக்ஷம் ஜனங்கள் அடிமைகளாயினர். இன்னும் பன்மடங்கான பேர் பசியினாலும் பஞ்சத்தினாலும் பரிதவித்தனர்' என்று அசோகனே கூறுகிறான். அதுகண்டு இவன் மனம் தளர்ந்து கலங்கினான்; ஆயுதங்கொண்டு ஆளுவதினும் அன்பு கொண்டு ஆளுவதே நலமெனத் தீர்மானித்தான்; மக்களின் உடலை வசஞ் செய்வதினும் உள்ளத்தை வசஞ்செய்து உத்தமராக்கக் கருதினான்; இதற்கிணங்க அன்புநெறி கொண்டு, அறவழியில் ஆளத் தொடங்கினான்.

அப்போது புத்த மதத்தில் இவனுக்குப் பற்று மிகுந்தது. உடனே அசோகன் அம் மதத்தைத் தழுவினான்; வேட்டையாடலை வெறுத்தான்; ஊன் உணவை நீக்கினான்; எளிய வாழ்க்கை மேற்கொண்டான். பின்பு, புத்தர் பிறந்த இடம், ஞானம் பெற்ற இடம், போதம்புரிந்த இடம் முதலிய இடங்களுக்கு இவன் யாத்திரை போனான்; வழியிலே ஆங்காங்கு யாத்திரிகரும் பிறரும் தங்குவதற்குச் சத்திரங்களும் சாவடிகளும் கட்டினான்; அத்தலங்களில் கோபுரங்களும் ஸ்தூபிகளும் அமைத்தான்.

ஜனங்களின் நலத்தை மதித்து, சாலையின் இருமருங்கிலும் இவன் நிழல் தரும் மரங்கள் வைத்



அசோகன் நாட்டிய கல்தூணின் சிகரம்

தான்; தோட்டம் துறவுகள் அமைத்தான்; நீர் நிலைகள் வெட்டி வைத்தான்; தண்ணீர்ப் பந்தல்கள் நிருமித்தான்; ஆடுமாடுகளுக்கும் நீர் கிடைக்க வசதி செய்தான்; வைத்தியசாலைகளை நாடெங்கும் நிறுவி னன்; மிருகங்களுக்கும் வைத்திய உதவி புரிய வசதி தேடினன்; இவ்வாறு தர்மராஜ்ய ஸ்தாபனம் செய்து தனிப்பெருமை கொண்டான்.

இன்சொல்லே விளைநிலமாகவும், ஈதலே வித்தாகவும், வன்சொல் எனும் களையைப் போக்கி, வாய்மை என்னும் எருவிட்டு, அன்பு என்னும் நீர் பாய்ச்சி, அறம் எனும் பயிரே காண அனைவருக்கும் அசோகன் உபதேசம் புரிந்தான். ஊர்தோறும் சென்று போதிக்க உபதேசிகளையும் அமர்த்தினன்; உபதேசங்களை எந்நாளும் எல்லோரும் பார்த்து அறிந்து நடக்கும்படி நாடெங்கும் கல்லில் செதுக்கியும் வைத்தான். கல்மேல் எழுத்தைச் சிலாசாஸனம் என்பர். அந்நாளில் வழங்கிவந்த பிராகிருத பாஷையிலே அச்சாஸனங்களெல்லாம் அமைந்துள.

அசோகனது சிலாசாஸனங்களிலே சிலவற்றின் முக்கிய சாரம் இது:—'தாய்தந்தையர் தெய்வமாவர். அன்னவருக்கு மக்களனைவரும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். உயிர்களிடம் அன்பும் இரக்கமும் கொள்ளவேண்டும். ஆசிரியரிடம் அனைவரும் பக்தி விசுவாசம் வைக்கவேண்டும். உற்றார் உறவினரிடம் நேசபாசங் காட்ட வேண்டும்.'

அத்தகைய மகாவாக்கியங்களும் உபதேசங்களும் செதுக்கப்பட்ட கல்தூண்களை இந்தியாவிலே பல இடங்களில் இன்றும் காணலாம். புத்தமதத்தை எங்கும் பரப்ப வேண்டி, இலங்கை, எகிப்து, சிரியா, அரேபியா, கிரீஸ் முதலிய தேசங்களுக்குத் தூதுவரை இவன் அனுப்பினன்; புத்த ஞானிகளை வர

வழைத்து மதநூல்களை யெல்லாம் தொகுத்தான். இவன் காலத்திலே புத்த மதமும் அதன் உயரிய கொள்கைகளும் நாற்றிசையிலும் பரவின.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 FEB 1942
MADRAS

அசோகனது சோதரன் மகேந்திரன், சோதரி சங்கமித்திரை இவ்விருவரும் இலங்கை சென்று புத்த மதபோதம் புரிந்தனர். மகத சாம்ராஜ்யம் இவன்

காலத்திலே வடக்கே இமயம் முதல், தெற்கே மைசூர் ராஜ்யம் வரையில் நீண்டிருந்தது. தர்ம ராஜன், தர்மப்பிரபு என்றே அசோக மகாராஜனை அனைவரும் துதித்து வந்தனர்.

கேள்விகள் :—1. அசோகன் அருள் கொண்டதற்கு முதல் காரணம் யாது? 2. புத்த மதத்தைத் தழுவியதும், அசோகன் கொண்ட குணங்கள் யாவை? 3. ஜன நன்மைக்கு அவன் என்னென்ன செய்தான்? 4. சிலாசாஸனம் என்றால் என்ன? 5. புத்த மதத்தை எங்கும் பரப்ப அவன் என்ன செய்தான்?

---

17. மௌரியரின் வீழ்ச்சி

சந்திரகுப்தன், பிந்துசாரன், அசோகன் ஆகிய மூவரும் சுமார் நூறு வருஷகாலம் பரிபாலனம் பண்ணி வந்தனர். அப்போது இந்துஸ்தானம் பலவகையிலும் தலைசிறந்து நின்றது. வாணிபமும் வேளாண்மையும் பெருகியிருந்தன; கலைகள் பலவும் வளர்ந்தோங்கின; தர்மோபதேசம் எங்கும் நிரம்பி நின்றது. மக்கள் குணசீலராக விளங்கினர்.

அசோகனுக்குப் பின்வந்த அரசரோ பற்பல விதத்திலும் தகுதி யற்றிருந்தனர். ஆதலினால் வர வர மௌரிய வல்லரசு தலைசாயத் தொடங்கியது. அதற்கு உட்பட்டிருந்த நாடுகள் பலவும் தனித்தனி பிரிந்துபோகத் தலைப்பட்டன.

கலிங்க நாடு தனியரசு கொண்டது. கோதாவரிக்கும் கிருஷ்ணைக்கும் இடையே ஆந்திரர் சுயராஜ்யம் கொண்டனர். பஞ்சாப், சிந்து, ஆப்கானிஸ்தானம் முதலிய தேசங்களை அன்னிய கிரேக்கர் வசஞ்செய்து கொண்டனர். ஆகவே ஒரு சிறிய பூமியையே கடைநாள் மௌரியர் ஆண்டுவந்தனர்.

மௌரியரில் கடைசி யரசன் பிருகத்திரதன். இவனும் பஞ்சையாக இருந்தான். இவனிடம் சேனைத்

தலைவனாக இருந்தவன் புஷ்யமித்திரன். அவன் ஓர் வேதியன். இத்தேசம் சீர்குலைதல் கண்டு, அரசனை அகற்றி அரியணை ஏறினான் புஷ்யமித்திரன்.

புஷ்யமித்திரன் சுங்க வமிசத்தைச் சேர்ந்தவன். அரியணையில் அமர்ந்ததும், அரசைப் பெருக்க அவன் முயலாநின்றான். அப்போது, பஞ்சாப், சிந்து முதலிய நாடுகளை ஆண்டுவந்த மிளிந்தன் அல்லது மினாந்தர் எனும் கிரேக்கவரசன் மகதத்தின் மீது படை கொண்டுவந்தான். உடனே புஷ்யமித்திரன் ஒரு பெருஞ் சேனையுடன் சென்று, மினாந்தரை முறியடித்தான். கிரேக்கரின் வசமா யிருந்த சில பிரதேசங்கள் புஷ்யமித்திரனிடம் சிக்கின.

புஷ்யமித்திரன் புத்திரனான அக்கினிமித்திரன் என்பவனும் தெற்கு நோக்கிச் சென்று, பல பிரதேசங்களை வசஞ்செய்து வந்தான். அவ்வெற்றிகளுக்கு அடையாளமாக ஓர் அசுவமேதம் புரிந்தான் புஷ்யமித்திரன். அவனது காலத்திலே ஆரிய வேதமார்க்கம் மறுபடியும் தலையெடுத்தது. யாகயக்ஞங்களும் மீண்டும் பிரபலமாயின. கி. மு. 72-ஆம் வரையில் சுங்க வமிசத்தார் சிறப்பாக அரசுபுரிந்து வந்தனர். அவ்வமிசத்தின் கடைசி வேந்தன் தகுதியற்றவனாக இருந்தான். அதனால் தேசம் சீர் கெடலாயிற்று. அதுகண்டு சகியாத வேதிய மந்திரியான வாசுதேவன் என்பான் அவ்வரசனை மாய்த்துச் சிம்மாசனம் ஏறி நன்கு அரசாண்டு வரலானான்.

வாசுதேவனும் அவனது கன்வ சந்ததியாரும் சுமார் எண்பது வருஷகாலம் வேந்தராக விளங்கினர். பின்பு மகதராஜ்யம் நகமும் பல்லுமிழந்த சிங்கம்போல் இருந்ததேயன்றி வேறில்லை. தனியரசுகொண்ட ஆந்திரரோ சாதவாகனர் என்னும் பெயருடன் நாளடைவில் பேரரசுகொண்டு விளங்க

லாயினர். அக்காலத்தில் பற்பல அன்னியர் நம் தேசத்தின் வடமேற்கிலே வந்து குடியேறி, ஆங்காங்கே அரசு கொண்டிருந்தனர்.

அவர்களில் **யவனர், சாகர், பார்த்தியர்** ஆகிய இவர்களை முக்கியமாகச் சொல்லலாம். அவர்களுக்குப் பின்பு, குஷான் எனும் வமிசத்தினர் வந்தனர். அவ் வமிசத்தைச் சேர்ந்த **கனிஷ்கன்** நம் தேசத்தின் வடமேற்கிலே பேரரசு கொள்ளலானன்.

கேள்விகள் :—1. மௌரியரின் ஆட்சியிலே நம் தேசம் சிறந்த வகை யாது? 2. மௌரிய வல்லரசு சாய்ந்ததேன்? 3. புஷ்யமித்திரன் எங்ஙனம் சிறப்புற்ருன்? 4. வாசுதேவன் யாவன்? 5. வடமேற்கே அரசுகொண்டிருந்த அன்னியர் யார்?

---

18. கனிஷ்கன் (கி. பி. 125—153)

குஷானரின் ஆதி வாசஸ்தலம் மத்திய ஆசியா. அவர்கள் அங்கிருந்து படையுடன் கிளம்பிவர, ஆப்கானிஸ்தானம், பஞ்சாப், சிந்து முதலிய பல நாடுகள் அன்னார் வசமாயின. அவர்களில் முதல் அரசன் பெயர் **காட்பிஸஸ்.** அவன் வழிமுறையில் வந்த அரசரில் மிகப் பிரசித்தி பெற்றவன் **கனிஷ்கன்.**

வடஇந்தியாவிலே அக்கனிஷ்கன் நனி பெரிய ராஜ்ய மொன்று கண்டான். மத்திய ஆசியாவிலுள்ள **பாமிர்** பீடபூமி முதல் தெற்கே விந்திய பர்வதம் வரையில் அவன் ராஜ்யம் பரவி யிருந்தது. அதன் தலைநகரம் தற்போது பஞ்சாபிலே **பேஷாவர்** என வழங்கும் **புருஷபுரம்.**

காஷ்மீர நாட்டை அவன் ஜயித்துப் பிடித்துக் கொண்டான். அதன் அறிகுறியாக அங்கே **கனிஷ்கபுரம்** எனும் அழகிய நகரை நிருமித்தான். அப்பால் அவன் சீனத் துருக்கிஸ்தானத்தின்மீது படை

கொண்டு சென்றான். முதலில் அவனுக்குத் தோல்வி கிட்டிற்று. ஆயினும் மறுமுறை அவன் ஜயங் கொண்டு காஷ்கர், யார்க்கண்டு, கோடன் எனும் மாகாணங்களை வசமாக்கிக் கொண்டான். அவனது ராஜ்யத்தின் பெரும்பாகம் இந்தியாவுக்கு வெளியே யும் வெகுதூரம் பரவி யிருந்தது.

கனிஷ்கன் பௌத்த மதத்தில் பெரும் பற்றுக் கொண்டவன். புருஷபுர நகரில் 400 அடி உயர முள்ள பெரிய ஸ்தூபி கட்டினான்; அதன் அருகில் பெரிய புத்தமடம் ஒன்றும் அமைத்தான்; புத்த மதத்தில் வல்லவரான ஐந்நூற்றுவரைக் கூட்டி,



கனிஷ்கன் நாணயம்

அம்மதக் கொள்கைகளைச் சீர்செய்தான். தன் பெயரால் நாணயங்கள் அச்சடித்து வழங்கினான். அவன் காலத்தில் புத்தருக்கு ஆலயங்கள் பல, நாடெங்கும் எழுந்தன; ஆடம்பரமான உற்சவங் களும் ஆங்காங்கே நடக்கத் தலைபட்டன.

புத்தமதப் பெரியார்களையும் வித்துவான்களை யும் கனிஷ்கன் பெரிதும் ஆதரித்தான். **புத்த சரிதம்** என்னும் சமய நூலை **அசுவகோஷர்** என்னும் புலவர் வரன்முறையாக எழுதிவைத்தார். ஆயுர்வேத வைத்திய சாஸ்திரத்தில் மேதையான சரகர் என் பவர் அவன் காலத்தில் இருந்தவர். **நாகார்ச்சுனர்**

எனும் பௌத்த சமயாச்சாரியரும் சற்று முன்பின்னாக அவன் காலத்தவரே என்பர் பலரும்.



அவனுக்குப்பின் குஷான் வமிசமும் ராஜ்யமும் குன்றிவிட்டன. ஆயினும் குஷான் அரசர் கி. பி.

ஐந்தாம் நூற்றுண்டுவரையில் காபூலேயும் பஞ்சாபையும் ஆட்சி செய்துவந்தனர். அப்பால் ஹூணரால் அன்னுர் அழிவுண்டனர்.

கேள்விகள் :—1. குஷானரின் ஆதி வாசஸ்தலம் யாது? 2. கனிஷ்கனது தலைநகரம் எது? 3. காஷ்மீர நாட்டைக் கனிஷ்கன் ஜயித்ததற்கு அடையாளம் என்ன? 4. புத்த மதத்துக்குக் கனிஷ்கன் புரிந்த ஊழியம் யாது? 5. கனிஷ்கனது காலத்திலிருந்த பெரியோர்களில் இருவரைச் சொல்லுக.

---

19. சந்திரகுப்தன்

குஷான் வமிசத்தினருக்குப் பின், வட இந்தியாவில் குப்த குலத்தார் தலையெடுத்தார்கள். அவ்வேந்தரில் முதல்வன் பெயர் **சந்திரகுப்தன்** (இவன் வேறு, மௌரிய குல சந்திரகுப்தன் வேறு). இவன் ஒரு குறுநில மன்னவன். இவன் மனைவி **குமாரதேவி.**

பாணி பிடித்தவள் பாக்கியம் என்பர். குமாரதேவி **லிச்சாவியர்** எனும் பிரபல போர்வீர வகுப்பைச் சேர்ந்தவள். அவ்வகுப்பினரின் உதவியால் பாடலிபுரம் சந்திரகுப்தன் வசமாயிற்று. பின்னர் அவன் திக்கு விஜயஞ் செய்ய, வட இந்தியாவிலே மற்றுஞ் சில பிரதேசங்கள் அவன் வசமாயின.

கி. பி. 320-ல் அவன் முடி தரித்துக்கொண்டான். அதற்கு அடையாளமாகத் தன் பெயராலும் மனைவியின் பெயராலும் நாணயங்கள் அச்சடித்து வழங்கினுன். அவன் பட்டமேறிய காலம் முதல், **குப்த சகாப்தம்** ஒன்று ஆரம்பமாகி வட இந்தியாவிலே நெடுநாள் வழங்கிவந்தது.

அவனுக்குப் பல மனைவியரும் புத்திரரும் இருந்தனர். குமாரதேவியின் மைந்தன் சமுத்திர குப்தனிடமே அவனுக்குப் பிரியம் அதிகம். இவனே இள

வரசாகவும் இருந்தவன். இவனுக்கே முடி சூட்ட வேண்டுமென்று அனைவரும் விரும்பினர். அவ் விதமே சந்திரகுப்தனுக்குப் பின், சமுத்திரகுப்தன் சிம்மாசனம் ஏறினன்.

கேள்விகள் :—1. குமாரதேவி யார்? 2. லிச்சாவியர் யாவர்? 3. சகாப்தம் என்றால் என்ன? 3. குப்த சகாப்தம் எதனின்று தொடங்கியது? 5. இப்பொழுது உலகில் பெரும்பாலும் வழங்கு வது என்ன சகாப்தம்?

---

20. சமுத்திரகுப்தன் (கி. பி. 326-375)

சமுத்திரகுப்தன் மகா பலவான்; மிக்க வீர தீரம் படைத்த வன். அவன் திக்கு விஜயஞ் செய்யப் புறப்பட் டான்; முதலில் வடஇந்தியாவிலிருந்த பல நாடுகளை வென்றான்; பின்பு தட்சிணத்தின்மீது படையுடன் சென்று, அங்கிருந்த பதினோரரசர்களை வென்று, அடிப்படுத்தினான்; அதன்பின் தெற்கே காஞ்சீபுரம் வரையில் வந்து ஜயக்கொடி நாட்டினான்.

மத்திய மாகாணங்கள், கலிங்கநாடு இவற்றின் அரசர்களையும், ஆங்கிருந்த முரட்டு ஜாதியாரையும் அவன் அடக்கினான்; காமரூபம், நேபாளம், ராஜ புதனம் முதலிய பல பெரிய நாடுகளையும் கப்பங் கட்டுமாறு செய்தான். வடக்கே இமயத்திலிருந்து தெற்கே காஞ்சிவரை அவன் செங்கோல் பரவியது.

பெருமித வெற்றி பெற்றதன் அடையாளமாக அவனும் ஓர் அசுவமேதம் புரிந்தான்; சக்கர வர்த்தி என்னும் பட்டமும் சூடிக்கொண்டான்; பொன் நாணயமும் அச்சடித்து வழங்கினான். அவ னது வீரச்செயல்களை எல்லாம் கவிஞரொருவர் பாட்டாகப் பாடிக் கல்லில் செதுக்கி வைத்துள்ளார். சமுத்திரகுப்தன் சங்கீதத்தில் மிகவும் நிபுணன்;

வீணை வாசிப்பதில் கை தேர்ந்தவன் ; கவிபாடும் ஆற்றலும் படைத்தவன் ; கவிவாணரையும் கல்விமான்களையும் ஆதரித்தவன் ; குடிமக்களின் நலத்தில் நாட்டம் மிகக் கொண்டவன்.

அவனது புகழ் பரவவே, இலங்கை வேந்தன் **மேகவர்ணன்** என்பான் மிகுந்த காணிக்கையனுப்பி அவனது நட்பை நாடினன். புத்தகயா நகரிலே பௌத்த மடாலயம் ஒன்று மேகவர்ணன் கட்டலானான். பௌத்த குருமாரும் துறவியரும் அம் மடத்திலே ஆயிரக்கணக்கில் வசித்து வந்தனர்.

காந்தார நாட்டை ஆண்டுவந்த குஷான் அரசன் தனது தூதனை அனுப்பி, சமுத்திரகுப்தனிடம் நேசம்பூண்டான். மத்திய ஆசியாவிலே ஆக்ஸஸ் பிரதேசத்தை ஆண்டுவந்த அரசனும் தோழமை வேண்டலும், சமுத்திரகுப்தனது தூதன் அவ்வரசனது சபையில் பெருமிதம் பெற்றான். மிகவும் பிரசித்திபெற்ற இந்தியச் சக்கரவர்த்திகளில் அவனும் முன்வைத் தெண்ணத் தக்கவன்.

கேள்விகள் :—1. சமுத்திர குப்தன் வென்ற நாடுகளில் நான்கு கூறுக. 2. மேகவர்ணன் யாவன்? 3. இவை இந்தியாவின் எப்பாகத்தில் உள ?— காமரூபம், காந்தாரம், நேபாளம், மாளவம். 4 சமுத்திரகுப்தன் காலத்து அசுவமேதம் மீண்டும் நடந்ததிலிருந்து நாம் ஊகித்தறியக் கூடியது என்ன?

---

21. விக்கிரமாதித்தன் (கி. பி. 375-413)

சமுத்திரகுப்தனுக்குப் பின் அவன் மைந்தன் இரண்டாவது சந்திரகுப்தன் சிம்மாசனம் ஏறினான். நாட்டுக் கதைகள் வியந்து கூறும் **விக்கிரமாதித்தன்** இவனே. இந்தச் சந்திரகுப்த வேந்தனும் தன் தந்தையைப் போலவே மிக்க பராக்கிரமம் வாய்ந்தவன். இவ

னும் திக்கு விஜயம் செய்யப் புறப்பட்டான். மாளவம், கூர்ஜரம், ஸௌராஷ்டிரம் என்னும் நாடுகள் இவன் வசமாயின. அவ்விதம் எங்கும் வெற்றி பெற்றதனால், விக்கிரமாதித்தன் என்று இவனுக்குச் சிறப்புப் பெயர் வந்தது.

விக்கிரமாதித்தன் காலத்திலே மேலைக் கடல் கரையின் மூலம் பிற தேசங்களுடன் கப்பல் வியாபாரம் பெருத்தது; தேசத்தில் தொழில்கள் வளர்ந்



விக்கிரமாதித்தன் நாணயம்

தோங்கின; செல்வம் இங்கே திரண்டு குவிந்தது. மக்களோ கல்வி கேள்விகளில் வல்லவராக விளங்கினர். தேசத்திலே திருடர் பயம் கிடையாது.

விக்கிரமனும் பெரிய கல்விமான்; கவிவாணருக்கு அள்ளி அள்ளிக் கொடுத்தான். இவன் சபையிலே மகா கவிகள் பலர் வீற்றிருந்தனர். அவர்களில் ஒன்பதின்மர் மிகவும் சிறந்தோர். அவர்களை நவரத்தினங்கள் என்பர். ஒன்பதின்மரிலும் சிறந்தவன் காளிதாஸ மகா கவி. அவன் இயற்றிய சாகுந்தலம் எனும் நாடகம் கற்பனைக் களஞ்சியம்.

நவரத்தினங்களில் மற்றொருவர் வராஹ மிஹிரர் என்பவர். இவர் பெரிய வான சாஸ்திரி. இவர் இயற்றிய நூல் பிருகத் ஸம்ஹிதை எனப்படும். இன்னொருவர் அமரம் எழுதிய அமரசிம்மர். வேறொரு

வர் வைத்திய சாஸ்திரத்தில் வல்லவரான தன்வந்திரி. வியாகரண சாஸ்திரத்தில் மேதையான வரருசி என்பவர் இன்னும் ஒரு புலவர்.



விக்கிரமாதித்தன் காலத்திலே சீன தேசத்திலிருந்து பாஹியான் என்பவர் இந்தியாவுக்கு வந்து, குப்தரின் ஆட்சியைக் கண்டு அதிசயித்தும், தேசத்

தின் உயர்வைக் கண்டு வியந்தும் எழுதியிருக்கிறார். விக்கிரமாதித்தன் காலத்திலே கௌசாம்பி நகரும், உஜ்ஜயினிப் பட்டணமும் குப்த குலத்தாரின் ராஜ தானிகளாக விளங்கின.

கேள்விகள் :—1. விக்கிரமாதித்தன் வென்ற நாடுகள் எவை? 2. அவைகளை வென்றதால் எங்ஙனம் வர்த்தகம் பெருகியது? 3. அவனது சபையில் இருந்த புலவர் மூவரைக் கூறுக. 4. சாகுந் தலம், அமரம், பிருகத் ஸம்ஹிதை இவற்றை எழுதியவர் யவர்? 5. அந்நாளில் இங்கு வந்த சீனர் யார்?

---

22. குப்தர் குலைதல்

விக்கிரமாதித்தனுக்குப் பின் அவன் மகன் குமாரகுப்தனும் சுமார் நாற்பது வருஷம் தந்தையைப் போலவே வல்லரசனாக விளங்கலானான். இவனும் அசுவமேத யாகம் ஒன்று புரிந்து, மகாராஜாதிராஜன் என்னும் பட்டம் சூடிக்கொண்டு சிறந்தான்.

அப்பால் ஸ்கந்தகுப்தன் அரசு எய்தினன். அந்நாளில் வடமேற்கெல்லை வழியே ஹூணர் என்னும் கொடியர் படைகொண்டு கூட்டம் கூட்ட மாக வந்தனர். அவர்களை எல்லாம் இவன் முறி யடித்து வெற்றிக் கம்பம் நாட்டினான். பாட்டனைப் போல் இவனுக்கும் விக்கிரமார்க்கன் என்னும் பட்டப் பெயர் கிட்டியது.

மறுபடியும் ஹூணர் திரண்டுவந்து போர் தொடுத்தனர். பராக்கிரமத்துடன் ஸ்கந்தகுப்தன் சமர் செய்து, வீரசுவர்க்கம் புகுந்தான். இதன்பின் சாமானிய அரசரேபோல் குப்தவேந்தர் வாழ்ந்து வர நேர்ந்தது.

கடை நாளிலே குப்த குல வேந்தரில் குறிப் பிடத்தக்கவன் நரசிம்மகுப்தன் எனும் பாலாதித்தன்.

கடுகு சிறுத்தாலும் காரம் போகாது என்பது போல் இவனும், கோலாகலம் கொண்டு நின்ற ஹூணரைப் பழிவாங்க மறக்கவில்லை. பல அரசரின் துணைகொண்டு, சமயம் நோக்கி ஹூணரை எதிர்த்து, இவன் வெற்றிமாலை சூடினான். இவனுக்குப்பின், குப்தவமிசம் மங்கத்தொடங்கியது.

குப்தர் காலத்தைப் பொன் காலம் என்பர். தேசத்தை அவ்வளவு சிறப்பாக அன்னார் ஆண்டு வந்தனர். மக்களுக்குள்ளே சமரஸமும் சாந்தியும் நிரம்பி நின்றன. எங்கும் ஆலயங்கள் பல எழுந்தன. மகா பாரதம், ராமாயணம், பகவத் கீதை, மநுதர்ம சாஸ்திரம் முதலிய பலவும் பெயர்த் தெழுதப்பெற்றுப் பிரபலம் அடைந்தன. கிராமங்கள் தோறும் கல்வி கேள்விகளில் வல்லவர் நிரம்பி யிருந்தனர். அன்னார் மக்களுக்கு அறிவும் ஞானமும் புகட்டிவந்தனர்.

சிற்பவேலை சிறக்கும் வண்ணம் குப்தவரசர் பேருதவி புரிந்தனர். ஓவியக் கலையும் அக்காலத்தே ஓங்கி நின்றது. குப்த வேந்தரில் பலரும் விஷ்ணு பக்தராயினும், புத்த குருமாரையும் புத்த மடாலயங்களையும் ஆதரித்து வந்தனர். **நாளந்தா** என்னும் பிரசித்தி பெற்ற சர்வகலாசாலையை நரசிம்ம குப்தன் கட்டுவித்தான். குப்தரின் ஆட்சி பரவி யிருந்த இடங்களி லெல்லாம் கல்விப் பொருளும் செல்வப் பொருளும் நிரம்பி யிருந்தன.

கேள்விகள் :—1. குமாரகுப்தன் யாவன்? 2. ஹூணர் என்பார் யார்? 3. குப்தர்காலம் பொன்காலம் என்பதற்கு நான்கு ஆதாரங்கள் சொல்லு. 4. நாளந்தா சர்வகலாசாலையைக் கட்டினவன் யார்? 5. குப்தவேந்தர் எந்த மதத்தினர்?

23. ஹர்ஷன் (கி. பி. 606-647)

குப்த வல்லரசு சிதறியதும், வட இந்தியாவிலே பற்பல சிறிய ராஜ்யங்கள் முளைத்தன. அவற்றில் ஒன்று தானேசுவரம். கி. பி. 600-ல் அதன் அரசனாக இருந்தவன் பிரபாகர வர்த்தனன். ஹூணருக்கும் அவனுக்கும் பன்முறை சண்டை மூண்டது. சமர்முனையில் பெருவெற்றியடைந்து, ராஜாதி ராஜனாகவே பிரபாகர வர்த்தனன் விளங்கினான்.

பிரபாகர வர்த்தனனுக்கு மைந்தர் இருவர் இருந்தனர். மூத்தவன் ராஜ்ய வர்த்தனன்; இளையவன் ஹர்ஷ வர்த்தனன். ஒரு சண்டையிலே மூத்தவன் பகைவரின் வஞ்சனையால் கொலையுண்டான். ஆதலினால், இளையவனான ஹர்ஷன் கி. பி. 606-ல் சிம்மாசனம் ஏறினான். அப்போது அவனுக்கு வயது சுமார் இருபதுக்குள் இருக்கும்.

பட்டஞ் சூடிக்கொண்டதும், ஹர்ஷன் ஒரு சேனையுடன் புறப்பட்டான்; மூத்தவனைக் கொன்ற பகையரசனை உயிர்வாங்கிப் பழி தீர்த்தான். தங்கை புருஷனாகிய கன்னோசி நாட்டரசனைப் பகைவரில் சிலர் வஞ்சனையாக மாய்த்துவிட்டனர்; அவள் வேற்றரசனுக்குப் பயந்து நாடுதுறந்து, காட்டில் பதுங்கிக் கிடந்தாள். அத்தங்கை ராஜேசுவரியையும் அவன் மீட்டுவந்தான்; நடுநாயகமான கன்னோசியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான்.

பின்பு ஹர்ஷன் திக்கு விஜயஞ் செய்யச் சதுரங்க சேனையுடன் சென்றான்; வடஇந்தியா முழுவதையும் வென்றான். இமயம் முதல் தெற்கே நருமதை நதிவரையில் அவன் செங்கோல் பரவிற்று.

தட்சிணத்தின் மீதும் படையெடுக்க அவன் விரும்பினான். அப்போது தட்சிணத்தை ஆண்டு

வந்த பேரரசன் புலிகேசி எனப்படுவான். இவன் சாளுக்கியப் பெருவீரன். இருவர் சேனையும் நருமதை நதிக்கரையில் சந்தித்தன. ஹர்ஷனுக்கு அதில்



வெற்றி கிட்டவில்லை. பின்பு இரு வேந்தரும் சமாதானம் கொண்டு நேசர் ஆயினர்.

ஹர்ஷன் மகா பண்டிதன்; ஊண் உறக்கத்தையும் மறந்து மக்களின் நலத்தையே கவனித்து வந்தவன். அவனது மதம் பௌத்த மதம். அதனால் அவன் காலத்தில் மீண்டும் பௌத்த மதம் புத்துயிர் பெற்றது. பிற மதங்களிடம் அவன் சமரஸமே கொண்டு நின்றான்; பௌத்த ஆலயங்களுடன் சிவன் கோயில்களும் கட்டிவைத்தான்.

அடிக்கடி ஹர்ஷன் பண்டித மகாசபை கூட்டுவான்; பண்டிதர்களுக்குச் சம்மானம் வழங்குவான்; தேசமெங்கும் அவன் சத்திரஞ் சாவடிகள் கட்டிவைத்தான்; தர்ம வைத்தியசாலைகள் ஏற்படுத்தினான். அவன் காலத்திலே சீன தேசத்திலிருந்து **யுவான் சுவாங்** என்னும் பௌத்த துறவி இங்கு வந்தார். இவர் தேச முழுதும் சுற்றிப்பார்த்து ஹர்ஷனது ஆட்சியைப் புகழ்ந்து எழுதியுள்ளார்.

ஹர்ஷன் நாணயம்

கங்கையும் யமுனையும் சந்திக்கும் இடமாகிய பிரயாகை நகரிலே ஐந்து வருஷத்துக்கு ஒரு தரம் ஹர்ஷன் பெரிய திருவிழா ஒன்று நடத்துவான். சிற்றரசரும் படைத்தலைவரும் பிறரும் அங்கேவந்து கூடுவர். ஜனங்களும் இலட்சக்கணக்கில் அங்கே வந்து சேர்வர். பௌத்த, சைவ, ஸௌர மத பண்டி

தர்களில் பலரும் வித்வத் சபைகூடித் தர்மார்த்த தத்துவங்களைக் குறித்துத் தர்க்கம் நடத்துவர்.

புத்தர், சிவன், சூரியன் ஆகிய தேவர்களுக்கு அபிஷேக ஆராதனைகள் நடக்கும். எழுபத்தைந்து நாள் அத்திருவிழா நடைபெறும். தினம் ஹர்ஷன் தானதர்மங்கள் பல வழங்குவான். முந்தைய ஐந்து வருஷங்களில் சேர்ந்த திரவியம் அனைத்தும் அவ் விழாவில் தானமாகிவிடும். தனது ஆடை யணிகளை யும் அவன் வழங்கிவிடுவான். தனக்கென வாழாது, பிறர்க்கெனவே வாழ்ந்த பெருமான் அவன்.

ஹர்ஷனும் நல்ல கல்விமான். வடமொழியில் அவன் இரண்டு நாடகங்கள் எழுதியுள்ளான். ஹர்ஷனது சரிதத்தைப் பாணகவி அழகாக எழுதி நமக்கு உதவியுள்ளார்.

கேள்விகள் :—1. ஹர்ஷன் ஆண்ட இடமெது? 2. முடி சூடிக்கொண்டதும் ஹர்ஷன் புரிந்த இரு செயல்கள் யாவை? 3. ஹர்ஷ ராஜ்யம் ஏன் தட்சிணத்தில் பரவவில்லை? 4. அக்காலம் இங்கு வந்த சீனர் யார்? 5. ஹர்ஷ சரிதம் யார் எழுதியது? 6. பிரயாகை எங்குளது? 7. அங்கு ஹர்ஷன் நடத்திய விழாவை ஆறு வாக்கியங்களில் விரித்தெழுது.

---

24. ராஜபுத்திரர்

தானேசுவர தீரன் ஹர்ஷ மகாராஜன் காலமான பின்பு, அவன் பேரரசு சிதைவுண்டது. வடஇந்தியா விலே குழப்பமும் கலகமும் ஏற்பட்டன. அப்போது ராஜபுத்திரர் என்போர் அங்கே தோன்றினர்.

ராஜபுத்திரரைக் குறித்துப் பலர் பலவாறு சொல்லுவர். அன்னவர் கலப்பற்ற சுத்த ஆரியர் என்பர் சிலர்; ஆதிகால க்ஷத்திரிய சந்ததியார் என்றும், சூரிய சந்திர வமிசத்தினர் என்றும் ராஜ புத்திரரின் பரம்பரை நூல்கள் கூறும்.

ஆதிமுதல் நமது தேசத்திற்குக் கிரேக்கர், பார்த்தியர், சாகர், ஹூணர், குஷானர் முதலிய பற்பல அன்னியர் வந்தனர் அல்லவா? இங்கேயே தங்கிவிட்ட அன்னூர் இந்நாட்டாரின் நடை உடை பாவனைகளை மேற்கொள்ளவே நாளாவட்டத்தில் நாட்டு மக்களாயினர். அவர்களே ராஜபுத்திரர் என்னும் பெயருடன் தேசத்தையும் மதத்தையும் காக்க முன்வந்து கிளம்பினர். இதுவே சரித்திர ஆசிரியரில் பலர் கருத்து.

அவர்களின் உற்பத்தி குறித்து ஒரு புராண கதையும் உண்டு. முன்னம் **பரசுராமர்** என்னும் வேதிய ரொருவர் இருந்தார். அவரது தந்தையான **ஜமதக்னி** முனிவரை க்ஷத்திரியர் கொன்று போட்டனர். அதற்குப் பழியாக க்ஷத்திரியரை அப்பரசுராமர் அழித்தார். அதனால் க்ஷத்திரிய வமிசங்கள் ஒழிந்துபோயின. அதுகண்டு, மதியூகிகள் கவலை கொண்டு, ஆபு மலையின் சிகரத்திலே ஒரு வேள்வி இயற்றினர். போர்க்குல மக்கள் பலர் அவதரிக்க வேண்டும் என்பதே வேள்வியின் கருத்து. அவ் வேள்வித் தீயிலிருந்து நான்கு வீரபுருஷர் தோன்றினர். அவ்வீரரின் சந்ததியாரே ராஜபுத்திரர்.

அவர்களின் வரலாறு எங்ஙனமாயினும் சரி, வட இந்தியாவிலே பற்பல இடங்களில் அவர்கள் அரசுகொண்டு ஆண்மை செலுத்தினர் என்பது திண்ணம். இயற்கையிலேயே அவர்கள் வெகு வீரம் படைத்தவர்கள்; மகா தைரியசாலிகள்; சரீர வன்மையில் சாலச் சிறந்தவர்கள்; தெய்வ பக்தி நிரம்ப வாய்ந்தவர்கள்.

அவர்களுக்கு மானமே பூஷணம்; சத்தியமே கவசம்; போரே பரம தொழில்; பேராண்மையும் பெருந்தன்மையுமே குண விசேஷங்கள். போரில்

புகுந்தால் வெற்றிமாலை அல்லது வீரசுவர்க்கம் எய்துவதே அவர்களின் கோட்பாடு. நன்றியறிவுக்கு அவர்கள் நல்ல உறைவிடம்.

அக்குல மாதரும் வீராங்கனைகள். மானமும் கற்புமே உயிரினும் சிறந்தனவாக மதித்து, அம் மாதர் நடப்பர். பகைவன் கையில் சிக்கி, மானம் குலைந்து வாழ அவர்கள் விரும்பார். வேறு வகை யின்றேல் தீ மூட்டி, அதில் குதித்து ஆவியை விடுவர். இதற்கு ஜோஹர் என்று பெயர்.

சுதந்திரத்திலே ராஜபுத்திரருக்குப் பற்று மிகுதி. அடைக்கலம் புகுந்தோரைக் காப்பதற்குத் தம் ஆருயிரையும் அவர்கள் வழங்குவர்; பகை மூண்டு விட்டால், பழிவாங்கத் தவறார். ஓர் ஐந்நூறு வருஷம் தேசாபிமானங்கொண்டு, அன்னியருடன் அவர்கள் ஓயாமல் போர்புரிந்து வந்தனர். இத் தகைய ராஜபுத்திரரின் அரசுகளைக் குறித்து, அடுத்த அதிகாரத்தில் சுருக்கமாக ஆராய்வோம்.

கேள்விகள்.—1. ஆபு மலையில் வேள்வி நடந்ததேன்? 2. ராஜபுத்திரரின் இயற்கைக் குணங்கள் எவை? 3. ஜோஹர் என்றால் என்ன? 4. ராஜபுத்திரரிடமிருந்து நீ என்ன பாடம் கற்றுக் கொள்வாய்?

---

25. ராஜபுத்திர ராஜ்யங்கள்

ராஜபுத்திரர் கண்ட ராஜ்யங்களில் மாளவம், அஜமேரு அல்லது ஆஜ்மீர், டில்லி, கன்னோசி அல்லது கானோஜ், சித்தூர் என்பன முக்கியமாம். கி. பி. 10, 11 ஆகிய நூற்றாண்டுகளில் ராஜபுத்திரரே மாளவ நாட்டை ஆண்டுவந்தனர். அந்த அரசரில் சிறந்தவன் போஜன்; இவன் ஒப்பற்ற கல்விமான்; கவிஞரை ஆதரித்தவன். இவன் கட்டிய போஜபாலம் எனும் ஏரி ஒரு சிறு கடல்போல் விசாலமானது.

அதன் ராஜதானி தாரா நகரம். இப்போது அதன் ஒரு பாகமே போபால் சமஸ்தானமாக இருந்து வருகின்றது.

விந்தியமலைக்கு அருகே அரவல்லி எனும் மலையொன்று உண்டு. அதன் அருகே அஜமேரு ராஜ்யம் உளது. அந்த அஜமேரு அரசரில் ஒருவன் பிருதிவி ராஜன். இவன் டில்லி, அஜமேரு ஆகிய இரண்டு அரசுகளையும் ஆண்டுவந்தான். டில்லியிலிருந்து அரசு செலுத்திய கடைசி இந்து சக்கரவர்த்தியும் இவனே.

கன்னேசி என்பது கங்கை, யமுனை ஆகிய இரு நதிகளுக்கும் இடையே யுள்ள பிரதேசம். கி. பி. ஏழாம் நூற்றாண்டு முதல் பன்னிரண்டாம் நூற்றாண்டுவரையில் ராஜபுத்திரர் ஆங்கு அரசு செலுத்தினர். அப்பிரதேசத்தை ஆண்ட அரசரில் சிறந்தவன் யசோவர்மன். கடைசியரசன் ஜயசந்திரன். இவன் தாயாதிக் காய்ச்சல்கொண்டு, அன்னிய ஆப்கானியரை இத் தேசத்திற்கு வரவழைத்து, தலைக்குக் கொள்ளி விலைக்கு வாங்கிக்கொண்டான். அதனால் டில்லியரசும் அழிந்தது; கன்னேசியும் அப்படியே மறைந்து போயிற்று.

ராஜபுதனத்திலே சித்தூர், மார்வார் முதலிய ராஜ்யங்கள் இன்றும் உள்ளன. சித்தூரை இப்போது உதயபுரி என்றழைப்பர். சித்தூர் ராஜபுத்திரரை இராமபிரானது சந்ததியார் என்பர். சென்ற ஆயிரம் ஆண்டுகளாக வாழையடி வாழையாய் அங்கே ராஜபுத்திர ஆட்சி நடந்துவருகிறது. சித்தூர் வேந்தரில் முதல்வன் குகன். இவன் வமிசத்தார் ஆதி முதல் அன்னியருடன் அருஞ்சமர் ஆற்றிவந்தனர். தேசபக்தியில் சித்தூர் வேந்தரைப் போல் சிறப்பு வாய்ந்தோர் இல்லை என்னலாம்.

இந்து மதத்திற்கும் தேசத்துக்கும் ஆபத்து நேர்ந்த காலத்தில் மார்தட்டி நின்ற மகாபுருஷர் ராஜபுத்திரர். பராக்கிரமமும் பேராண்மையும் அன்னார் படைத்திருந்தும், ஒற்றுமையின்றி ஓயாமல் தமக்குள் பூசலிட்டுவந்தனர். அதனல் சுதந்தரத்தை அவர்கள் இழக்க நேர்ந்தது. தேசமும் அன்னியரின் ஆட்சிக்கு உட்படலாயிற்று.

கேள்விகள் :—1. போஜபாலம் என்பது என்ன? 2. டில்லியிலிருந்து அரசு செலுத்திய கடைசி ஹிந்து சக்கரவர்த்தி யார்? 3. ஜயசந்திரன் தலைக்குக் கொள்ளி விலைக்கு வாங்கிக் கொண்டது எப்படி?

---

26. தட்சிண ராஜ்யங்கள்

விந்திய மலைக்குத் தெற்கே கிருஷ்ணு நதிவரையில் உள்ள மேட்டுப் பாங்கான பூமியே தட்சிண பீடபூமி. இதன் வடக்கே விந்திய மலையும் நருமதை நதியும், தெற்கே துங்கபத்திரை, கிருஷ்ணு ஆகிய நதிகளும், மேற்கே அரபிக்கடலும், கிழக்கே வங்காள விரிகுடாவும் எல்லைகளாம்.

வட இந்தியாவிலிருந்து ஆரியர் தெற்கு நோக்கி வந்து, நதிகளின் கரையோரமாகப் பற்பல இடங்களிலும் தங்கலாயினர். தட்சிண பீடபூமியில் அவ்விதம் ஆரியர் குடியேறியபின், அவர்களில் சிலர் இன்னும் தெற்கு நோக்கிச் சென்று, பாலாறு, பெண்ணுறு, காவிரி, வைகை முதலிய நதிகள் பாயும் பிரதேசங்களிலும் பரவினர்.

இவர்களே ஆதியில் சேர, சோழ, பாண்டிய ராஜ்யங்களை ஏற்படுத்தினர் என்பர் சிலர். தென்னிந்தியாவிலிருந்த பூர்வீக மக்களே அம்மூவரசுகளையும் கண்டனர் என்பர் வேறு சிலர். பல்லாண்டுகளுக்கு முன்னமேயே ஆரியர் தெற்கிலும்

பரவினர் என்பதும், வட இந்தியாவுக்கும் தென் னிந்தியாவுக்கும் தொன்று தொட்டு மிக நெருங்கிய தொடர்பு உண்டென்பதும் நிச்சயம்.



தக்காண அரசுகள்

சந்திரகுப்த மௌரியன், அசோகன், சமுத்திர குப்தன் முதலிய பேரரசரின் சரிதங்களும் சரி, அக்

காலத்தில் பிரபலமா யிருந்த காவியங்களும் சரி, அப்போது நம் தேசத்துக்கு வந்துபோன அன்னிய தேச யாத்திரிகர் எழுதியுள்ள நூல்களும் சரி, இவை யெல்லாம் தெற்கே குமரிவரையில் வடநாட்டினர் தொடர்பு கொண்டிருந்தனர் என்றே கூறும்.

தட்சிணம் அல்லது தக்காணத்தில் ஆதிமுதல் அநேக ராஜ்யங்கள் இருந்தன. ஆந்திரர், பல்லவர், சாளுக்கியர், ராஷ்டிரகூடர் முதலிய வமிசத்தார் இங்கு அரசு செலுத்தி வந்தனர்.

கேள்விகள்—1. தட்சிண பீடபூமியின் தெற்கெல்லை எது? 2. தட்சிண பீடபூமியில் அரசுகொண்டிருந்த மக்கள் யார் யார்?

27. ஆந்திரர்

தட்சிணத்திலிருந்த புராதன ராஜ்யங்களில் ஆந்திர ராஜ்யமும் ஒன்றாகும். சந்திரகுப்த மௌரியனது காலத்திலே கோதாவரி, கிருஷ்ணா நதிகளுக்கு இடையே ஆந்திரர் அரசு கொண்டிருந்தனர். மௌரியருக்கு அடுத்தபடி ஆந்திரரே வல்லரசர். அவர்களிடம் பெரிய சேனை யிருந்தது. அவர்களின் யானைப் படை வெகு பிரபலம் என்று மகஸ்தினஸ் எழுதியுள்ளான். ஆந்திர ராஜ்யத்தின் தலைநகரம் ஸ்ரீகாகுளம் (அல்லது சிகாகோல்). ஆதியிலே அவர்கள் சுயவரசு கொண்டிருந்தனர். அப்பால் சந்திரகுப்த மௌரியனுக்கு அடங்கி அன்னார் கப்பங் கட்டி வாழ நேர்ந்தது.

அசோகனது காலத்திற்குப் பின்பு, அவர்கள் முன்போல் சுயாதீனம் கொண்டனர். அமராவதி நகரம் அப்போது அவர்களின் ராஜதானி ஆயிற்று. பின்னர் அவர்களது ராஜ்யம் மேற்கிலும், கிழக்கிலும் கடல்வரையில் பரவியது. மௌரிய வல்லரசின்

பலம் குன்றவே, மகதமும் அவர்களின் வசமா யிற்று. சாதவாகன வமிசத்தைச் சேர்ந்தவர்களா தலின், சாதகர்ணி என்னும் பெயராலும் அவர்களை அழைப்பது உண்டு. அவ்வரசரில் ஹாலா, விலி வாயகுரன், புலமாயி, யக்ஞஶ்ரீ இவர்களை மிக முக்கிய புருஷர் என்னலாம்.

ஹாலா என்பான் பெரிய கல்விமான், கவிஞு னும் ஆவான். விலிவாயகுரன் என்பவன் சாகர், யவனர் முதலிய அன்னியருடன் அரும்போர் புரிந்து, வெற்றிமாலை சூடி, நாற்றிசையிலும் அர சைப் பெருக்கினுன். புலமாயி காலத்தில் ஆந்திர அரசின் சில பிரதேசங்கள் கை தவறின. யக்ஞஶ்ரீ அப்பிரதேசங்களில் சிலவற்றை மீட்டான்.

ஆந்திரரின் காலத்திலே தட்சிணம் பல்வளமும் சுரந்து நின்றது. புத்த மதம் அங்கே பிரபலமா யிருந்தது. துறவிகள் வசிப்பதற்காகப் பாறைகளி லும் மலைகளிலும் குகைகள் குடையப்பட்டன. அவர் களின் சம்ரக்ஷணைக்காகப் பல கிராமங்கள் மானி யமாக விடப்பட்டன. பைடணபுரி, நாசிகை, கல்யாண், வானுவசி முதலிய நகரங்கள் சிறந்திருந்தன.

கேள்விகள் :—1. ஆந்திரரைக் குறித்து மகஸ்தினஸ் எழுதி யிருப்பது யாது? 2. ஆந்திரரின் ராஜதானிகள் எவை எவை? 3. ஹாலா எனும் அரசனைப்பற்றி உனக்குத் தெரிந்ததை எழுது. 4. ஆந்திர அரசர், துறவிகட்கு என்னென்ன செய்தனர்?

---

28. சாளுக்கியர்

அயோத்தியிலிருந்து கிளம்பிய ராஜபுத்திர மரபினரே சாளுக்கியர் என்று புராணங்கள் கூறும். அவர்களிடம் மதச்சமரசம் மிகுதி. அவர்கள் வைஷ்ணவர்கள். ஆயினும் அவர்கள் பல சிவா லயங்களும் கட்டி வைத்தனர்.

சாளுக்கியரில் மூன்று பிரிவார் முக்கிய மானவர். (i) பாதாமி (அல்லது வாதாபி) யிலிருந்து அரசாண்ட மேலைச் சாளுக்கியர். (ii) கல்யாணி நகரிலிருந்து அரசு செலுத்திய கல்யாணி சாளுக்கியர். (iii) வேங்கி நகரி

அஜந்தா குகை ஓவியங்களில் ஒன்று

லிருந்து பரிபாலனம் பண்ணிய கீழைச் சாளுக்கியர்.

மேலைச் சாளுக்கியர் :—இப்பிரிவினரில் முதலாம் புலி கேசின் என்பான் (550 கி. பி.) பல்லவரை வெற்றி

கொண்டான் ; வாதாபி (அல்லது பாதாமி) நகரை வசஞ்செய்து கொண்டான்; அசுவ மேத யாகம் ஒன்று புரிந்து அரும்புகழும் பெற்றான்.

இரண்டாம் புலிகேசின் (608 கி. பி.) என்பானே மேலைச் சாளுக்கியரில் தலைசிறந்தவன். ஹர்ஷனை எதிர்த்து நின்றவன் இவனே. நான்கு திக்கிலும் இவன் தண்டுகொண்டு சென்று, தென்னிந்தியா முழுமையும் அடிப்படுத்தினான். இவன் புகழ் பாரசீகம் வரை எட்டியது. குஸ்ரு எனும் பாரசீகக் கொற்றவன் இவன் நட்பை நாடி, நிருபமும் காணிக்கையும் அனுப்பினன். இவன் ஆண்ட பிரதேசங்கள் செழித்துக் கொழித்தன என்று யுவான் சுவாங் எழுதியிருக்கிறார். அஜந்தா குகையிலுள்ள சித்திரங்களில் பல இவன் காலத்தனவாம்.

இவன் மைந்தன் **விக்கிரமாதித்தனும்** தந்தையைப் போல் பெரு வீரன். பல்லவரது காஞ்சிமா நகரை இவன் கைக்கொண்டான். சேர, சோழ, பாண்டிய ராஜ்யங்களையும் இவன் வசஞ்செய்தான் என்பர்.

இரண்டாம் புலிகேசின் (609. கி. பி.) வேங்கி நாட்டினை வென்று, தனது சகோதரன் **குப்ஜ விஷ்ணு வர்த்தனனை** அங்கிருந்து ஆண்டுவர நியமித்தான். இவர்களைக் **கீழைச் சாளுக்கியர்** என்பர். இவர்களில் இசை பரப்பிய அரசர் பலர். அன்னாரில் ஒருவன் **விஜயாதித்தன்**. இவன் 108 சண்டை செய்தவன் ; 108 சிவாலயங்களும் கட்டியவன். ஏனைய அரசர் சோழவேந்தருடன் மணங்கொண்டு அக் குடும்பத்தோடு ஐக்கியமாயினர்.

கேள்விகள் :—1. சாளுக்கியரின் மதம் யாது? 2. அவர்களில் எத்தனை பிரிவார் உண்டு? 3. ஹர்ஷனுடன் போரிட்ட சாளுக்கிய மன்னன் யாவன்? 4. விக்கிரமாதித்தன் பெரு வீரன் என்பது எப்படி? 5. குஸ்ரு என்பவன் யாவன்?

29. ராஷ்டிரகூடர்

புராண இதிகாசங்களிலே பாரத பூமியை ஐம்பத்தாறு தேசங்களாக வகுத்திருந்தனர். அவற்றுள் ஒன்று **மகாராஷ்டிரம்**. அங்கிருந்த ஜனங்களை ராஷ்டிரகூடர் என்பர். சிறிது காலம் ராஷ்டிர கூடர் மேலைச் சாளுக்கியருக்கு உட்பட்டிருந்தனர். அப்பால் அவர்கள் தனியரசு கொண்டு, கி. பி. 754 முதல் 973 வரை வரையில் தட்சிணத்தில் இசை பரப்பினர். அவர்கள் ராஜபுத்திரரிலே யது குலத்தவர். தற்காலம் மொர்க்கண்டு எனப்படும் **மாயூர கண்டி** அவர்களின் தலைநகரம். அப்பால் **மான்ய கேதம்** என்பது தலைநகராயிற்று.

ராஷ்டிரகூட வேந்தரில் ஒருவன் **தந்தி துர்க்கன்**. இவன் கம்பீரமான தோற்றம் வாய்ந்தவன்; கருட பார்வை கொண்டவன். சாளுக்கியரை இவன் ஜயித்தான்; தட்சிணத்தின் வடபாகம் அனைத்தையும் வசஞ் செய்து இசை கொண்டான்.

மற்றோர் அரசன் பெயர் **கிருஷ்ணன்** (760. கி.பி.). இவன் காலத்திலே அரசு இன்னும் அகன்றது; செல்வம் குவிந்தது. **எல்லோரா**விலே இவன் கட்டிய **கைலாஸ நாதர்** கோயிலின் அழகு கண்ணைப் பறிக்கும். ஆலயம் முழுதும் ஒரே பாறையில் குடைந்தும் செதுக்கியும் சிற்ப வேலையின் சிகரம்போல் வேலைப்பாடாக அமைந்துளது.

துருவன் எனும் ஓர் அரசன் விந்திய மலைக்கு வடக்கிலும் வெற்றிக்கொடி தூக்கினன். அப்பால் மிகவும் பிரசித்தி பெற்ற அரசன் **அமோக வர்ஷன்**. இரண்டாம் புலிகேசியைப்போல் இவன் பராக்கிரமம் வாய்ந்தவன்; அரசையும் வெகுவாகப் பெருக்கிய வன்; ஜைன மதத்தில் பற்று மிகுந்தவன். கடை

நாளில் மகனுக்கு முடி சூட்டிவிட்டு, ஒரு துறவிபோல் இவன் சிறிதுகாலம் வாழ்ந்து வந்தான்.

அமோக வர்ஷனுக்குப் பின் ராஷ்டிர கூடருடைய பலம் குன்றியது. கல்யாணி சாளுக்கியரைச் சேர்ந்த தைலப்பன் என்பான் அவர்களைப்



எல்லோரா கைலாசநாதர் ஆலயம்

போரில் புறங்காண, சாளுக்கியர் பிரபலம் எய்தினர். கல்யாணி நகரிலிருந்து அரசாண்டமையால் அவர்களைக் கல்யாணி சாளுக்கியர் என்பர். இவர்களோ இருநூறு வருஷம் எடுப்பாக இருந்தனர். இவர்களில் விக்கிரமாங்கன் என்பவன் மிகவும் கீர்த்தி வாய்ந்தவன். அவனுக்குப் பின் இச் சாளுக்கியர் மங்கி நாளடைவில் மறையலாயினர்.

துவாரசமுத்திரத்தில் ஹொய்சால வமிசத்தினரும், தேவகிரியில் யாதவ வமிசத்தினரும் சில காலம் சிறப்புற்றிருந்தனர். அன்னாரும் ஓயாத போரினால் இளைத்து மகம்மதியர் வந்ததும் மங்கி மறைந்தனர்.

கேள்விகள் :—1. ராஷ்டிரகூடரின் ஜன்ம பூமி எது? 2. தந்தி துர்க்கனது குணங்கள் என்ன? 3. கைலாஸநாதர் ஆலயம் கட்டியது யார்? 4. புலிகேசினைப் போன்ற ராஷ்டிரகூட வேந்தன் யாவன்? 5. கல்யாணி சாளுக்கியர் என்று பெயர் வந்தது ஏன்?

---

30. பல்லவர்கள்

பல்லவர்கள் பாரசீக தேசத்தவர் என்பர் சிலர்; ஆந்திர அரசருக்கு உட்பட்டிருந்த சிற்றரசர் என்பர் வேறு சிலர்; இப்போது தென்னிந்தியாவில் திகழும் கள்ளர், வன்னியர் இவர்களின் முன்னோர் என்பர் இன்னும் சிலர். பல்லவர் அனைவருக்கும் வர்மா எனும் பட்டப் பெயர் உண்டு.

அவர்கள் சுமார் கி. பி. 300-ஆ முதல் கி. பி. 740-ஆ வரையில் காஞ்சியிலே ஆண்டு வந்து அரும் புகழ் அடைந்தவர்கள். அவர்களில் ஒரு சிலரைப் பற்றிய விவரங்களே புலப்படுகின்றன. சமுத்திரகுப்தன் தெற்குநோக்கி வந்த காலத்திலே காஞ்சியைப் பரிபாலித்து வந்த பல்லவ வேந்தன் பெயர் **விஷ்ணுகோப வர்மன்.**

கி. பி. 600—625-ஆ அரசு செலுத்தியவன் **மகேந்திர வர்மன்.** ஆற்காடு, செங்கல்பட்டு, திருச்சினப்பள்ளி இந்த இடங்களில் மலைக்கோயில்கள் கட்டியவன் இவனே. இவன் காலத்தில் **மகாபலிபுரத்திலே** பாறைகளில் செதுக்கிய சிற்ப வேலைகள் அற்புதமானவை. இவனுக்கும் இரண்டாம் புலிகேசினுக்கும் பெருஞ் சண்டை மூண்டது. இதில் பல்லவனே ஜயம் அடைந்தான்.

மகேந்திரனது மைந்தன் **நரசிம்மவர்மன்** (கி.பி. 625-645). பல்லவரில் இவனே மிகவும் சிறந்தவன். புலிகேசினுக்கும் இவனுக்கும் பிரமாதமான யுத்தம்

நடந்தது. அதில் புலிகேசினை இவன் மாய்த்தான்; அவனது தலைநகரமான வாதாபியையும் வசஞ் செய்து கொண்டான். இவன் புகழ் தக்காணத் திலும் தென்இந்தியாவிலும் பரவிற்று. இவன் காலத்தில் தான் யுவான்சுவாங் காஞ்சி வந்து நெடுநாள் தங்கி யிருந்தார். காஞ்சியைக் குறித்து அவர் கண்ணால் கண்டதை எழுதி வைத்துள்ளார். அதன் முக்கியமான சாரம் இது :—



மகாபலிபுரம் ரதக்கோயில்

“பூசாரம் மிகவும் செழுமை. விவசாயமோ வெகு நேர்த்தி. இங்கே தானியங்களும் பழங்களும் புஷ்பங்களும் மிகுதி. மக்கள் மகா யோக்கியர்; சத்திய சந்தருமாவர். கல்விமான்களுக்கு எங்கும் சிறப்பு அதிகம். காஞ்சியிலே நூற்றுக் கணக்கான புத்த மடங்களி லிருந்த துறவியர் பதினயிரவர். இந்து ஆலயங்கள் எண்பதுக்கு மேலுமிருக்கும். காஞ்சி மிகவும் அழகான பெரிய நகரம்.”

நரசிம்மனது காலத்திற்குப் பின்பு சாளுக்கியருக்கும் பல்லவ அரசருக்கும் அடிக்கடி சண்டை நிகழலாயிற்று. கி. பி. 720-ஆல் நந்திவர்மன் வேந்தனுகத் திகழ்ந்தான். இவனது காலத்திலே சாளுக்கியர், பல்லவரை வெற்றிகொண்டு காஞ்சியில் புகுந்தனர் கோலாகலமாக; ஆயினும் நகருக்கு ஊறு செய்யவில்லை. இதன் பின்பு, பல்லவரின் அரசு மங்கத் தலைப்பட்டது. அபாரஜித்தன் எனும் கடைசி பல்லவ வேந்தனை ஆதித்த சோழன் ஜயங் கொண்டான். அதன்பின் சோழருக்கு உட்பட்டே பல்லவர்கள் வாழ்ந்து வர நேர்ந்தது.



மகாபலிபுரம் பாறைக்கோயில்

பல்லவ வேந்தரில் சிலர் ஜயினர், சிலர் சைவர், சிலரோ வைஷ்ணவர். வடமொழி, தென்மொழி இரண்டும் இவர்களின் காலத்தில் தென்னிந்தியாவிலே பெரிதும் வளர்ந்தோங்கின; ஆரியவேதமார்க்

கம் பரவிற்று. கவிகள் ஆதரவு பெற்றனர்; நாயன்மார்களும் ஆழ்வார்களும் பேராதரவும் பெருமையும் பெற்றனர். பக்தி மார்க்கம் பெருகியது.

கேள்விகள்:—1. மகேந்திர வர்மன் சிறப்பு எய்தியதற்குக் காரணம் யாது? 2. காஞ்சியைக் குறித்து யுவான் சுவாங் சொல்லியுள்ளது யாது? 3. யார் காலத்தில் பல்லவரின் அரசு மங்கியது?

31. தமிழகம்

துங்கபத்திரை நதிக்குத் தெற்கே கன்னியா குமரி வரை உள்ள பூமி தமிழகம். இதன் வடக்கெல்லை வேங்கட மலை; தெற்கெல்லை குமரிமுனை; கிழக்கிலும் மேற்கிலும் கடல். இத்தமிழகம் மிக்க தொன்மையும் பெருமையும் வாய்ந்தது.

ஏறக்குறைய நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னம் சின்ன ஆசியாவில் சாலமன் என்னும் ஓர் அரசன் இருந்தான். அவன் குபேர சம்பத்தும் இந்திர போகமும் கொண்டவன். அவ்வேந்தனது மாளிகையை நம் தமிழகத்தின் பொருள்களே அலங்கரியா நின்றன. யானைத் தந்தம், கருங்குரங்கு, தோகை மயில், ரவை சல்லாத்துணி முதலியன கப்பல் கப்பலாக இங்கிருந்து அவன் சபைக்குச் சென்றன.

அதன்பின்பு கிரேக்க ராஜ்யத்துக்கும் இங்கிருந்து மிளகும் முத்தும் மரகதமும் மஸ்லினும் மூட்டைமூட்டையாகப் போயின. அப்பால் உரோமாபுரிக்கும் ஏராளமான சரக்குகள் இங்கிருந்து போக, அவற்றிற்கு ஈடாக அங்கிருந்து தங்கமும் வெள்ளியும் இங்கே வந்து குவியலாயின. நிலமகளின் நெற்றித் திலகமென அனைவரும் தமிழகத்தை மதித்தனர்.

வடஇந்தியாவின்மீது கிரேக்க வீரவேந்தன் படைகொண்டு வந்தானென்று முன்னம் படித்

தோம். கிரேக்கரையும் உரோமரையும் யவனர் என நம் தமிழ் நூல்கள் சாற்றும். வர்த்தகம் செய்யவும், தமிழ்வேந்தரின் சேனையில் சேவகம் புரியவும் தமிழகத்துக்கு வந்த யவனர் கணக்கிலர். சோழ, பாண்டிய அரசரின் சேனையில் யவனவீரர் பலர் சேவித்து நின்றனர். காவிரிப்பூம் பட்டினத்திலே யவன வீதியெனத் தனியே ஒரு வீதியும் இருந்தது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உரோமாபுரியை ஆண்ட ஸீஸர் சபையிலே தமிழக வேந்தரின் தூதர் சிறப்பாக வீற்றிருந்தனர்.

அக்காலத்திலே தமிழகத்தின் மேலைக் கடல் கரையிலும் கிழக்குக் கடல் கரையிலும் மிகப் பெரிய துறைமுக நகரங்கள் இருந்தன. அவற்றுள் முசிரி, தொண்டி, காவிரிப்பூம் பட்டினம், கொற்கை, கீழக்கரை முதலியன முக்கியமானவை. தமிழகக் கப்பல்கள் சரக்குகளுடன் சதா புறப்பட்டுச் சென்றமை ஒரு புறமிருக்க, அயலகக் கப்பல்களும் இங்கே வந்து போனவண்ணமா யிருந்தன.

தமிழகம் முன்னம் பதின்மூன்று நாடுகளாக இருந்தது. ஆயினும் சிறந்து நின்ற ராஜ்யங்கள் மூன்று. அவை சேர, சோழ, பாண்டிய ராஜ்யங்களாம். அம் மூவேந்தரும் நேர்மையுடன் ஆட்சிபுரிய, ஐம்பெருங் குழுவினரும் எண்பேராயத்தினரும் உடனிருந்து ஆலோசனை கூறி வந்தனர். நீதிநெறி பிறழாமல் ஆட்சி நடந்து வந்தது.

கேள்விகள் :—1. தமிழகத்தின் நான்கெல்லைகள் யாவை? 2. சாலமன் அரண்மனையை அலங்கரித்த தமிழ்ச் சரக்குகள் எவை? 3. யவனர் என்போர் யார்? 4. பண்டைக் காலத்திலே சிறப்பாயிருந்த தமிழகத் துறைமுகங்கள் எவை? 5. தமிழ் மூவேந்தர் யார்?

32. தமிழரின் அரசியல்

இடைக் காலத்திலே தமிழரசர் தங்கள் ராஜ்யங்களை மண்டலம், நாடு, கோட்டம், கிராமம் என்று பிரித்திருந்தனர். கிராமங்கள் சுயாட்சி கொண்ட குட்டிக் குடியரசுகளாகவே விளங்கின. மகா மண்டலேசுவரன் எனப்படும் மாகாண கவர்னருக்கு அக் குடியரசுகள் கணக்கு வழக்கு ஒப்புவிக்கும். ஒவ்வொரு கிராமத்திலும் ஓர் ஆலயம், அக்கிரகாரம், பல வீதிகள், பயிர் நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள், மந்தை வெளிகள் இருக்கும்.

கிராமங்கள்தோறும் கிராமசபைகள் உண்டு. கிராம பரிபாலனத்தை அச்சபைகளே கவனித்து நடத்தும். சபையின் அங்கத்தினரை ஜனங்களே தேர்ந்தெடுப்பர். மாதரும் அங்கத்தினராக இருக்கலாம். பூ சொத்தும், வேதப் பயிற்சியும், நன்னடக்கையுமே அங்கத்தினருக்கு உரிய யோக்கியதைகள். குற்றவாளிகள், பித்தர், இளைஞர் இவர்கள் அங்கத்தினராக வரமுடியாது. கிராம அதிகாரிகளை அச்சபையே நியமிக்கும். வரி விதித்தல், வசூலித்தல், செலவழித்தல் எல்லாம் அச்சபையின் வேலை.

அரசுக்குரிய வருமான இனங்கள் பலவாம். அவற்றுள் நிலவரி முக்கியமானது. நிலங்களின் இயல்பையும் வளமையையும் நன்கு ஆராய்ந்தே வரி விதிக்கப்படும். அடுத்தபடி கடல்சுங்கம் முக்கிய வரி. நீர் வரி, தொழில் வரி முதலியனவும் உண்டு. வருவாயில் ஆறிலொரு பங்கே அரசிறையாம். கல்வி வளர்ச்சியில் அரசர் தக்க கவனஞ் செலுத்தினர். கல்வி ஸ்தாபனங்களுக்கு வேண்டிய பணம் அரசர் உதவினர்; வேத விற்பன்னர்களுக்கு மானியம் பல வழங்கினர். வைத்தியர், பாடகர், கவிஞர் இவர்

களுக்கும் மானியம் உண்டு. ராமாயணம், பாரதம் சொல்வோருக்கு விசேஷ உதவி கிட்டும். மதத்தையும் கல்வியையும் பரப்பும் மடாலயங்களுக்கும் ராஜாங்க ஆதரவு மிகுதி. சங்கீதம், நடனம், சிற்பம், ஓவியம் முதலிய கலைகளை அரசரும் பிரபுக்களும் போற்றி வளர்த்தனர்.

சமூகம் மிகச் சீராக இருந்தது. வேதியர், வேளாளர், செட்டிகள் என்ற பாகுபாடுகள் உண்டு. ஆயினும் ஜன ஒற்றுமை மிகுதி. செல்வநிலையைத் தழுவிப் பிரபுக்கள், பணியாளர் என்ற பிரிவுகள் இருந்தன. ஆயினும் இரு பிரிவாருக்கும் இடையே பிரியம் அதிகம். கூத்தும் பாட்டும் சதுரங்கமும் மக்களின் பொழுதுபோக்கினுக்கு உரிய சாதனங்கள். கோழிச் சண்டை, கடாச் சண்டை இவையும் உண்டு. மாதரோ மனைகளில் கிளிகள் வளர்த்தும், பந்து, அம்மானை ஆடியும் பொழுது போக்குவர். அரசிகளும் பிரபுக்களின் மனைவியரும் கூத்து, பாட்டு இவற்றில் பயில்வதுண்டு.

எல்லாரும் ஆதியில் பேசிய பாஷை பழந்தமிழ். நெடுநாட்களுக்குப் பின்பே, அது தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவம் என்று கிளைகள் பல கொண்டது. ஆதியிலே மதுரையில் இருந்த தமிழ்ச் சங்கம் தமிழ்மொழியை வளர்த்து வந்தது. அரசரும் பிரபுக்களும் தமிழ்மொழிக்குப் பேராதரவு புரிந்து வந்தனர்.

கேள்விகள் :—1. கிராம சபை என்பது என்ன ? 2. அதனை நியமிப்பது யார் ? 3. கிராம சபைக்குரிய அங்கத்தினர்களின் யோக்கியதைகள் எவை ? 4. தமிழ் மாதர் எங்ஙனம் பொழுது போக்குவர் ? 5. தமிழ் மொழியிலிருந்து கிளைத்த பாஷைகள் யாவை ? 6. தமிழ்ச் சங்கம் இருந்த நகரம் எது ?

33. சோழ ராஜ்யம்

தமிழகத்தில் சோழ ராஜ்யம் காவிரி நதியின் வடபால் அமைந்தது. தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு, வட ஆற்காடு, நீலகிரி, கோயமுத்தூர் இந்த ஜில்லாக்கள் கொண்டதே சோழ ராஜ்யமாம்.

ஆதியிலே திருவாரூர் அதன் தலை நகரம். அப்பால் திருச்சிக் கடுத்த உறையூர் தலைநகராயிற்று. உறையூரைச் சுற்றி அக்காலத்தில் மதிள்சுவரும் அகழியும் ஓர் அரணும் இருந்தன. ராஜ்யத்தின் வர்த்தகமும் தொழிலும் பெருகவே, காவிரி நதியின் முகத்துவாரத்தில் இருந்த காவிரிப்பூம் பட்டினம் உப தலை நகரமாகவும் முக்கிய துறைமுகமாகவும் விளங்கியது. புகார் என்றும் அதற்கு ஒரு பெயர் உண்டு. இப்போது அது ஒரு சிற்றூராகவே உளது. அப்போது அந்நகரின் அருகே காவிரி நதி மிக்க ஆழமாக இருந்தது. அதனால் அந்நதிக்குள் கப்பல்கள் வந்து போயின. வந்து போகும் கப்பல்களிலிருந்து சாமான்கள் இறங்குவதற்கும் ஏறுவதற்கும் மேடைகளும் பண்ட சாலைகளும் இருந்தன.

சரக்குகளில் சோழராஜனது புலி முத்திரை பொறிக்கப்பட்ட பின்பே, அவை வர்த்தகருக்குக் கிட்டும். காவிரியின் கரையோரமாக யவன வர்த்தகரின் பண்டசாலைகளும் விடுதிகளும் நிரம்பியிருக்கும். பற்பல பாஷைகள் பேசும் அயலகத்தார் பலர் அந்நகரில் குடியேறியிருந்தனர். கப்பல்கள் மயங்காதிருக்கக் கலங்கரை விளக்கம் வானையளாவி நிற்கும். கொஞ்ச காலம் காஞ்சிமா நகரமும் ராஜதானியாக விளங்கிற்று. அப்பால்தான் அங்கே பல்லவர் அரசு கொண்டனர்.

சோழவேந்தர் சூரியகுலத்தைச் சேர்ந்தவர்கள். ஏறக்குறைய வேதகாலத்தில் சோழ மன்னவனாக இருந்தவன் **மநுச்சோழன்**. இவனே திருவாரூரைத் தலை நகராகக் கொண்டவன். இவன் மிக்க நீதிமான். இவனுக்கு ஒரே பிள்ளை. அம்மைந்தனை அருமையாக இவன் வளர்த்து வந்தான்.

ஒரு நாள் அம்மைந்தன் தேரேறிச் சென்றான்; வழியிலே ஒரு பசுங்கன்றின்மீது தேரேறி விட்டது. அதுகண்ட தாய்ப் பசு அலறி யழுதது. ஆவின் கன்று இறந்தமை கண்டு அரசகுமாரன் கலங்கினான். கன்றின்மீது தேரேற்றிய மைந்தனைத் தேர்க் காலில் இட்டுச் சிதைப்பதே சரியென்று அரசன் துணிந்தான். தவறிழைப்பவன் தன் மைந்தனேயாயினும், தக்க தண்டனை விதிக்கும் மனுச் சோழனது நேர்மை கண்டு அனைவரும் வியந்தனர்.

மகனைத் தேர்க் காலில் வைத்து ஊருமாறு அவ்வரசன் ஓர் அமைச்சனை ஏவினான். அவன் அது செய்யாமல், தானே தன்னுயிரை விட்டான். உடனே அரசன் தானே சென்று, தன் அருமை மகனைத் தேர்க்காலில் கிடத்தித் தேரை ஓட்டினான். அது சமயம் கடவுள் தோன்றி ஆன்கன்றையும் அரசன் மைந்தனையும் பிழைப் பூட்டி, அரசனுக்கு அருள் சுரந்து சென்றார்.

இனி **காந்தன்** என்னும் சோழ வரசன் அகஸ்தியரின் உதவி கொண்டு, காவிரி நதியை அமைத்து வைத்தான். இதனால் நாட்டில் நீர்வளம் மிகுந்தது.

கேள்விகள் :—சோழராஜ்யத்தில் அடங்கியிருந்த ஜில்லாக்கள் எவை? 2. சரக்குகளில் புலி முத்திரை பொறிக்கப்பட்டதின் கருத்து யாது? 3. கலங்கரை விளக்கம் என்பது என்ன? 4. மனுச்சோழன் எவ்விதம் சிறந்தான்? 5. தமிழகத்துக்குக் காந்தன் செய்த உதவி யாது?

34. கரிகால் பெருவளத்தான்

கரிகால் பெருவளத்தான் என்னும் சோழ அரசன் மிகவும் சிறந்த வீரன். சின்னவயதிலே இவன் அரண்மனையில் தாயாதியர் தீவைத்தனர். தீப்பற்றி இவன் கால் கருகியதால் **கரிகால் சோழன்** என்னும் பெயர் பெற்றான். இவன் பல யுத்தங்கள் செய்து, சேரவரசனையும் பாண்டிய மன்னனையும் ஜயித்தான்; இலங்கைத் தீவின்மீதும் படைகொண்டு சென்று, வெற்றிக்கொடி நாட்டினான்.

கொஞ்ச காலம் ஆனதும், குறுநில மன்னர் ஒன்பதின்மரும், இன்னும் சிலரும் சேர்ந்து இவனுடன் போருக்கு வந்தனர். அவர்களையும் இவன் முறியடித்து வாகை சூடினான்; குறும்பர் எனும் ஒரு ராஜ வமிசத்தாரையும் அடக்கினான்; காஞ்சிமாநகரையும் வசஞ்செய்து, அதனை அழகுபடுத்தினான்.

இவன் காலத்திலே காவிரி நதிக்குக் கரைகள் இல்லை. அதனால் மாரியிலே வெள்ளம் புரண்டுவந்து பல பிரதேசங்களையும் பாழ்படுத்தும். அது பற்றியே தஞ்சை, திருச்சி இரண்டினுக்கும் புனல் நாடு என்று பெயர் உண்டு. இவன் அந்நதிக்கு நூறு மைல்தூரம் இரு புறமும் கரைபோட்டு வெள்ளப் பாழைத் தடுத்தான்; பல கால்வாய்களையும் வெட்டி வைத்தான். அதனால் நாடு செழித்தது; விளைவும் பெருகியது. ஜனங்கள் சுகமேவாழ, வளத்தையெல்லாம் பெருக்கி வைத்ததனால், பெருவளத்தான் என்று இவனை அழைத்தனர்.

இவன் குடும்பம் புலமை வாய்ந்த குடும்பம். இவன் மாமன் ஒரு பெரும் புலவன். இவன் மகள் ஆதிமந்தி என்பவள் புலமைமிக்கவள். பிள்ளைகளாகிய கிள்ளிவளவன், நலங்கிள்ளி, மாவளத்தான் என்

போரும் புலமை வாய்ந்தவர். இவனும் அறிவில் மிக்கவன்; பண்டிதர்களையும் பாவலர்களையும் ஆதரித்தவன். தமிழ்மொழி தழைக்க இவனும் இவன் குடும்பமும் பேருபகாரம் புரிந்தனர்.

அக்காலத்திருந்த **பரணர், நற்கீரர், மாமூலர்** முதலிய புலவர்கள் இவன்மீது பாடியுளர். இவனது வீரம், வண்மை, நீதி, சூழ்ச்சித் திறமை, ஆட்சி வன்மை முதலிய குணங்கள் போற்றத்தக்கன. கி. பி. முதல் நூற்றாண்டிலே இங்ஙனம் கரிகால் பெருவளத்தான் புகழ் நிறுவினன்.

அப்பால் இவன் மகன் **கிள்ளி வளவன்** அரசனாயினன். தாயாதிகளில் பலர் சேர்ந்து, இவன் அரசைப் பறித்துக்கொள்ளக் கிளம்பினர். சேரவரசனான செங்குட்டுவனது துணைகொண்டு, அவர்களை இவன் வென்றான். பின்பு அப் பகைவருக்கு உதவி புரிந்த திருக்கோவலூர்த் தலைவனான **மலையமான்காரி** என்பவன் மீது இவன் தண்டுகொண்டு சென்று, அவனைக் கொன்று, அவன் இளங் குமரரையும் தேர்க்காலில் இட்டுக்கொல்ல முயன்றான். அப்போது **கோவூர் கிழார்** எனும் புலவர், அது அடாது என்றார். அம்மொழி கேட்டு, இவன் அப்பாதகச் செயல் செய்யா தொழிந்தனன்.

இவனும் புலவர்களை நன்கு ஆதரித்தவன்; நாட்டையும் மேலும் வளம்படுத்தியவன். இவனைக் குறித்தும் சிறப்பாகப் பல புலவர்கள் பாடியுளர். இவனுக்குப் பின்பு பல அரசர் ஆண்டனர். அவர்களின் வரலாறுகள் நன்கு தெரிந்தில.

அசோகன் புத்த மதத்தைப் பரப்ப எங்கும் தூதரை அனுப்பினன் அல்லவா? அத்தூதரில் சிலர் தமிழகம் வந்து புத்த மதத்தைப் பரப்பினர். சமண மதமும் பரவிற்று. புகார், உறையூர், காஞ்சி

முதலிய இடங்களில் அருகன் கோட்டமும் புத்த சைத்தியங்களும் எழுந்தன. முனிவர்களும் பெருகலாயினர். ஆயினும் அரசரும் மக்களும் சமயச் சழக்கு கொள்ளாமல், சமரஸமே பூண்டு நின்றனர். ஒன்பதாம் நூற்றாண்டு வரையில் சோழர் விவரம் புலப்படவில்லை. அப்பால் சோழரிலே பேரரசர் கிளம்பலாயினர்.

கேள்விகள் :—1. புனல் நாடு என்பது எது? 2. பெருவளத்தான் என்று கரிகாலன் பெயர் பெற்றதேன்? 3. கரிகாலன் குடும்பமே புலமை நிரம்பிய குடும்பம் என்பது எப்படி? 4. கரிகாலன் மீது பாடியுள்ள புலவர் யார் யார்? 5. கோவூர் கிழாரின் புத்திமதி கேட்டுக் கிள்ளிவளவன் செய்த காரியம் யாது?

---

35. இடைக்காலச் சோழர்

ஒன்பதாம் நூற்றாண்டில் சோழவேந்தர் மீண்டும் தலையெடுத்துச் சிறப் பெய்தினர். காஞ்சிப் பல்லவரில் கடையவனான அபாரஜித்தன் என்பவனை ஆதித்த சோழன் வென்றானென மேலே சொன்னோம். இடைக்காலச் சோழ வமிசத்துக்கு அந்த ஆதித்த சோழனே முதல்வன்.

பராந்தகன் : ஆதித்தன் மைந்தன் பெயர் பராந்தகன். இவன் பராக்கிரமம் வாய்ந்தவன்; இவன் பெரிய சேனை திரட்டி, முதலில் பாண்டி நாட்டின் மதுரையை வசஞ்செய்து கொண்டான்; பின்பு இலங்கையின்மீதும் சென்றான். இவன் அரசியலையும் மிக்க சீராக்கினான். இவன் காலத்தில் கிராமங்கள்தோறும் பஞ்சாயத்து சபைகள் இருந்தன. கிராம பரிபாலனம் அனைத்தையும் அச்சபைகளே கவனித்து வந்தன. இவன் மகா சிவ பக்தன்; சிதம்பரத்திலுள்ள நடராஜ சந்நிதியைப் பொன்

மயமாக்கினன். அதனல் அந்நகரம் **பொன்னம்பலம்** என்னும் பெரும் பெயர் பெற்று விளங்கலாயிற்று.

ராஜ ராஜன்: அப்பால் கி. பி. 985-ஆ ராஜராஜ சோழன் என்பான் அரியணையில் ஏறினன். இவன் பேராண்மையும் பெருவலிமையும் படைத்தவன். இவன் காலத்தில் சோழ ராஜ்யம் தென்னிந்தியா வெங்கும் பரவியிருந்தது. முதலாவதாகப் பாண்டிய அரசனை இவன் போரில் வென்றுன். அதன்பின், இவன் சேரனது நட்பை நாடி, ஒரு தூதனை யனுப்பினன். சேர வரசனே அத்தூதனை அவமதிக்கலானன். அதுகண்டு இவன் மனம் பொறுக்கவில்லை.

சேரனிடம் கப்பல்படை இருந்தது. ஆதலின் இவனும் கப்பல்படை ஒன்றை வெகு ரகசியமாக அமைத்து வந்தான். அமைத்ததும், அப்படை கொண்டு ஒருநாள் இவன் பயணமாயினன். கன்னியாகுமரி முனையைச் சுற்றிக்கொண்டு மேலைக்கடல் கரைக்கு அப்படை சென்றது. அப்போது சேரவரசனது கப்பல்படை ஸ்தலம் **கந்தலூர்**. திடீரென்று அந்த ஸ்தலம் சென்று, சேரரின் கப்பல்படையைத் தாக்கினன் ராஜராஜன். சேரன்படை தோற்றழிந்தது. அதன்மேல் சேரவரசன் விதியின்றி இவனுக்கு உட்பட்டு வாழலானன்.

பின்னர் இவன் திக்கு விஜயஞ் செய்யப் புறப்பட்டனன். **வேங்கி ராஜ்யமும் கலிங்க** ராஜ்யமும் இவனுக்கு அடிபணிந்தன. குடகுநாடும் இவனுக்குக் கப்பம் கட்டி நின்றது. இலங்கையும் இவனுடைய ஆட்சிக்கு உட்படலாயிற்று.

அவ்விதம் அரசை நன்கு பெருக்கிய பின்னர், இவன் தெய்வப்பணியில் இறங்கினன். தஞ்சாவூரிலுள்ள **பிருகதீசுவரர்** ஆலயம் இவன் கட்டியதே.

அதன் கோபுரம் 200 அடி உயரம். கோபுரத்தின் உச்சியிலே ஒரே பாறையில் செய்த விமானம் ஒன்றுண்டு. அவ்விமானம் 80 டன் எடையுள்ளது. அவ்வளவு கனத்த கல்லை 200 அடி உயரம் ஏற்றியது அருமை யல்லவா? மேலும் அவ்வழகிய கோபுரம் சச்சதுர வடிவம்; மூலஸ்தானத்தின்மீது அமைந்துள்ளது. அதன் நிழல் கீழே விழுவதில்லை என்பர். அன்றியும் அழகிய வேலைப்பாட்டுடன் கண்ணைக் கவரும் வகையில் அக்கோபுரம் விளங்கும்.



தஞ்சை பிருகதீசுவரர் கோயில்

அந்த ஆலயத்தின் முன்புறத்திலே பெரிய நந்தி ஒன்றுளது. அதுவும் ஒரே கல்லினால் ஆனது.

அதன் நீளம் சுமார் 18 அடி; உயரம் 12 அடி; அகலம் 7 அடி. ஆலயத்தின் சுவர்களிலும் தூண்களிலும் ராஜராஜனது திக்குவிஜய விவரங்கள் எல்லாம் தீட்டப் பெற்றுள்ளன.

இவன் மகா சிவ பக்தனுயினும் சமய சமரசம் மிகுந்தவன். நாகப்பட்டினத்திலே பௌத்த ஆலயமொன்றுக்கும் இவன் பணவுதவி புரிந்தனன்.



கங்கை கொண்ட சோழபுரம் கோயில்

ராஜேந்திரன்:—ராஜராஜன் மைந்தன் பெயர் ராஜேந்திரன். இவனுக்குக் **கங்கை கொண்ட சோழன்** என்றும் ஒரு பெயர் உண்டு. இவன் வங்காள விரிகுடாவைக் கடந்து, பர்மாவிலே பெரு நாட்டின் தலைநகரான **கடாரம்** என்பதைக் கைப்பற்றினுன்;

அந்தமான் தீவுகளையும் அடிப்படுத்தினன்; கங்காநதி தீரம் வரையில் வெற்றிக் கொடி தூக்கியதனல், கங்கைகொண்டான் எனும் பெயரும் பெற்றான்.

அதன் அடையாளமாகத் திருச்சி ஜில்லாவிலே கங்கை கொண்ட சோழபுரம் என்னும் புதிய நகர மொன்று இவன் நிருமித்தான்; அதனை யடுத்து ஒரு பெரிய ஏரியும் அமைத்தான்; ஆலய மொன் றும் எழுப்பினன். அந்நாளிலே அந்நகரம் சிறந்து விளங்கிற்று. இவன் மகள் **அம்மங்க தேவி** கீழைச் சாளுக்கிய அரசனை மணந்துகொண்டாள். அதனால் இரண்டு வமிசத்துக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. சோழவரசும் பலம் எய்தியது.

குலோத்துங்கன் :—இவன் ராஜேந்திரனது பேரன். முதலில் இவன் கீழைச் சாளுக்கிய நாட்டின் அரசன் ஆயினன்; அப்பால் கி. பி. 1070-ஸ் சோழ வேந்தனுகவும் முடிதரித்தான். **கலிங்கத்துப் பரணி** என்னும் தமிழ் நூல் இவன் கலிங்கநாட்டை வென்றதையே கூறும். இவன் ராஜரீகம் நேர்மை வாய்ந்தது. **கம்பர், ஒட்டக்கூத்தர்** முதலிய கவிஞர் இவன் காலத்தி லிருந்தனர்.

இவனுக்குப் பின் வந்த அரசர் பராக்கிரமம் வாய்ந்திருக்கவில்லை. ஆதலினால் **விஜயநகர** ஸாம்ராஜ்யம் சோழராஜ்யத்தைத் தன்னுட் கொண்டு விட்டது. பாளையக்காரர் என்போரே ஆங்காங்கு தலைமை தாங்கி வந்தனர்.

கேள்விகள் :— 1. சிதம்பரத்தைப் பொன்னம்பலமாக ஆக்கியவன் யார்? 2. சேரனை, ராஜராஜன் வென்றது எப்படி? 3. பிருகதீசுவரர் ஆலயத்தைக் குறித்து மூன்று விசேஷங்கள் சொல்லு. 4. கங்கை கொண்ட சோழபுரம் உண்டான காரணம் யாது? 5. சோழரும் சாளுக்கியரும் தொடர்பு கொண்டது எப்படி?

36. பாண்டிய ராஜ்யம்

பாண்டிய ராஜ்யம் என்பது மதுரை, ராமனுதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்கள் கொண்ட பாகமாம். நம் தமிழகத்திலே முதன் முதலாக வல்லரசினைத் தோற்றுவித்தவர் பாண்டியரே. பண்டு என்ருல் பழமை என்று அர்த்தம். பண்டு என்பதனடியாகப் பாண்டியன் என்னும் பெயர் வந்தது. பாண்டியன் என்ருல் பராக்கிரமம் உடையவன் என்று பொருள்.

தமிழகத்திலே பாண்டிய ராஜ்யத்துக்கு மற்ெருரு தனிப் பெருமையும் உண்டு. தமிழகத்தின் பொதுமொழி தமிழ். அம்மொழியினை ஆதிமுதல் வளர்த்தோர் பாண்டியரே. ஆதியிலே தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்னும் முச்சங்கங்கள் பாண்டிய நாட்டில் தோன்றித் தமிழை வளர்த்தன. தமிழ்மொழிக்குத் தாயகம் பாண்டியே.

பாண்டிய ராஜ்யத்தின் தலைநகரம் மதுரை. பழைய மதுராபுரியைக் கடல் கொண்டுவிட்டது. தற்போதுள்ள மதுரை இடைக்காலத்தில் தோன்றியதாம். பாண்டிய நாட்டின் பிரதான துறைமுகம் கொற்கை. அஃது தாமிரவர்ணி நதியின் முகத்துவாரத்தில் இருந்தது. அதன் அருகேதான் கடலில் முத்துக் குளிப்பர். முத்தும் பவழமுமே முன்னம் பாண்டிய ராஜ்யத்தின் முக்கிய வருவாயாகும். ஆதலின் அத்துறைமுக நகரிலே இளவரசன் தங்கியிருந்து முத்துக் குளிப்பைக் கண்காணிப்பான். சிறிது காலஞ் சென்றதும், கொற்கையிலிருந்து கடல் தூர விலகிவிட்டது. அப்போது காயல் பட்டணம் துறைமுகமாயிற்று. நாளடைவில் காயல் நகரிலிருந்தும் கடல் விலகிப்போய் விட்டதனுல், அதனையும் கைவிட நேர்ந்தது.

பாண்டியர் சந்திர வமிசத்தைச் சேர்ந்தவர்கள். ஆதி பாண்டிய அரசரிலே ஒருவன் இமயம் வரையில் சென்று புகழ் பரப்பினுன். பார்வதிதேவி மலையத் துவஜ பாண்டியன் மகளாக வந்து அவதரித்தாள் என்றும், பரமசிவன் வந்து அத்தேவியை மணந்து கொண்டா ரென்றும் புராணங்கள் கூறும். எந்தப் பதியிலும் ஆண்டவன் பெயரை முதலில் சொல்லியே ஆலயத்தை அழைப்பர்; முதலில் ஆண்டவனுக்குத் தான் பூஜையும் நடக்கும். மதுரையிலோ அம்மை யின் பெயரை முன்னிட்டே, ஸ்ரீமீனுட்சி கோயில் என்பர். மேலும் அங்கே பூஜை, நிவேதனம் முத லில் அந்த அம்மைக்குத்தான்!

புராண இதிகாச காலங்களில் பாண்டிய நாடு பெருமிதங் கொண்டிருந்தது. பஞ்ச பாண்டவரில் ஒருவனுன அர்ச்சுனன், பாண்டியன் மகளொருத் தியை மணம் புரிந்துகொண்டான். பாண்டவருக்கும் கௌரவருக்கும் இடையே மூண்ட பாரதப் போரில் பாண்டிய மன்னன் பஞ்சவருக்குத் துணைபுரிந்தான். இராமபிரானும் பாண்டிய நாடு சேர்ந்து, சேதுவில் அணை கட்டியே இலங்கை சென்ருர்.

கேள்விகள்:—1. பாண்டிய ராஜ்யத்துக்குள்ள தனிப் பெருமை யாது? 2. ஆதியிலே பாண்டியரின் துறைமுகங்கள் எவை? 3. மீனுட்சி கோயிலில் ஏனைய கோயில்களில் இல்லாத விசேஷம் யாது? 4. பாண்டவருக்கும் பாண்டியருக்கு முள்ள சம்பந்தம் யாது?

37. பாண்டிய வேந்தர்

பாண்டிய வேந்தரின் பரம்பரையைக் குறித்துத் திருவிளை யாடல் புராணத்தில் விவரங்கள் காணப்படும். சரித்திர வாயிலாகப் புலப்படும் அரசரில் நெடுஞ் செழியன் என்பவனே முதலாவன்.

நெடுஞ் செழியன் கி. பி. முதல் நூற்றுண்டில் இருந்தவன். இவன் வடக்கு நோக்கிச் சென்று, தக்காணத்திலே பல வேந்தர்களை ஜயித்தான். சிலப்பதிகாரம் என்னும் காவியத்திலே இவனைப்பற்றிய விவரம் காணப்படும். அதன் சாரம் இது :—

" காவிரிப்பூம் பட்டினத்திலே கோவலன் எனும் வணிக இளைஞன் இருந்தான். சொத்தை யெல்லாம் இழந்த பின், வர்த்தகம் புரிய அவன் மதுரை சேர்ந்தான். மனைவியின் காலணியான சிலம்பொன்றை விற்க அவன் கடைத்தெரு சென்றுன். பாண்டியனது பொன்கொல்லன் அச்சிலம்பைக் கண்டு உள்ளூர அதிசயித்தான். அரசியின் சிலம்பொன்றை அக்கொல்லன் கவர்ந்தவன். அக்குற்றம் தன்னைச் சேராதிருக்க அவன் கருதி, அரசன் முன்னே சென்று, சிலம்பைத் திருடிய கள்வன் கோவலனே என்று கூசாமல் பழி சுமத்தினன்.

" நெடுஞ் செழியனும் ஆராயாமல் அதனை நம்பி, அக் கோவலனைக் கொல்லுமாறு கட்டளை யிட்டான். அஃதறிந்த கோவலன் மனைவி கண்ணகி என்பாள், அரசன் முன்னே சென்று, அவன் பிசகை அறிவுறுத்தினள். ஆராயாமல் கொலைப் பாவம் செய்தேனே என்று வருந்திய பாண்டியன் நெடுஞ் செழியன் அக்கணமே உயிரை விட்டான். அரசியும் அரசனுடன் உயிர் துறந்தனள். பின்னர் மதுராபுரியை அக் கண்ணகி தன் கற்பின் வல்லமையால் எரித்து விட்டாள்." பிழை செய்பவரைத் திருத்தும் அரசனே பிழை புரிவதா என்று எண்ணிய எண்ணத்திலேயே கணப்போதில் உயிரை விட்ட பாண்டியனது மானமே மானம்!

இரண்டாம் நெடுஞ் செழியன் அவனுக்குப் பின் மிக்க புகழ்பெற்றவன். சின்ன வயதில் இவன் பட்

டத்துக்கு வந்தான். அதுகண்டு இவன் அரசை அப கரித்துக் கொள்ளக் கிள்ளிவளவன் என்னும் சோழன் படைகொண்டு வந்தனன். அவனைப் பாண்டிய சேனாதிபதி முறியடித்து ஓட்டிவிட்டான். பின்பு, தக்க வயது வந்ததும், இவன் பெரும் படையுடன் சென்று, சோழன், சேரன், மைசூர் வேந்தன் ஆகிய மூவரையும் போரில் வென்றான். தலையாலங்கானம் என்னும் இடத்தில் அப்பெரும் போர் நடந்தது. அப் போரைக் குறித்து நந்தமிழ்ப் புலவர்களில் பலர் பாராட்டிப் பாடியிருக்கிறார்கள். 'தலையாலங்கானத் துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ் செழியன்' என்று இவனைப் பெருமையாக அழைப்பர்.

போர் வீரரிடம் நெடுஞ் செழியன் மிக்க அன்பு உள்ளவன். உதாரணமாக ஒரு புலவர் சொல்வது இது :—"ஒரு நாள் நள்ளிரவு; மழை கொட்டுகிறது; வாடைக் காற்று வீசுகிறது; நெடுஞ் செழியன் புறப்பட்டான் காயமுண்ட வீரர்களைக் கண்டு ஆறுதல் கூற. போரிலே காயமுண்டு வைத்திய சாலையில் கிடக்கும் ஒவ்வொரு வீரரையும் தளகர்த் தர் சுட்டிக் காட்டினர். இவன் ஒவ்வொருவரின் அருகிலும் சென்று, காயத்தைப் பார்த்து, ஆறுத லாக அன்புரை வழங்கினான். நெடுங்காலம் இவன் கீர்த்தியுடன் அரசாண்டு புலவருக்கும் பிறருக்கும் பேருபகாரியாக விளங்கினான்."

உக்கிரசேனன் :—மற்றொரு பாண்டியன் உக்கிர சேனன். திருவள்ளுவர் தமது திருக்குறள் எனும் உயர்ந்த நீதி நூலை இவன் சபையில்தான் அரங்கேற் றினார். திருக்குறளை உலகிலே பலர் தம் தம் பாஷை யில் மொழி பெயர்த்துப் படித்துணர்ந்து இன்றும் இன்புறுகின்றனர். இவன் காலத்தில் தமிழிலே நூல்கள் பல தோன்றின; புலவர்களும் பெருகினர்.

கூன்பாண்டியன் :—இன்னொருவன் கூன்பாண்டியன். இவன் சமண மதத்தைத் தழுவி நின்றான். இவன் மனைவி அதுகண்டு பொறுக்கவில்லை ; திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரை அவள் வருவித்து, அரசனை மீண்டும் சைவ மதத்தில் சேர்த்ததாகப் **பெரிய புராணம்** எனும் தமிழ்நூல் கூறுநிற்கும்.



மதுரை திருமலை நாய்க்கன் மகால்

ஜடாவர்மன் :—மதுரையிலுள்ள மீனாட்சி கோயிலைப் பாண்டிய மன்னரே அழகுற அமைத்தனர். ஜடாவர்மன் என்னும் பாண்டியன் காலத்தில் தமிழகம் முழுதும் பாண்டியருக்கு உட்பட்டிருந்தது.

ஸ்ரீரங்கம் கோயிலில் இவன் மண்டபங்கள் கட்டிக் கோபுரத்துக்குப் பொன்தகடும் வேய்வித்தான்.

திருமலை நாய்க்கர் :—இவனுக்குப் பின் நாளடைவில் பாண்டிய ராஜ்யம் வலிகுன்றியது. பதினாலாம் நூற்றாண்டிலே விஜய நகர ஸாம்ராஜ்யத்துக்கு இது உட்பட்டுவிட்டது. விஜய நகரம் வலி குன்றியதும், மதுரையில் தலைவர்களா யிருந்த நாய்க்கர் என்னும் வமிசத்தினர் மதுரைப்பதியை ஆண்டு வந்தனர். அந்த அரசரில் சிறந்தவர் திருமலை நாய்க்கர். இவர் மீனாட்சி யம்மையின் ஆலயத்தைப் புதுப்பித்தார்; புது மண்டபம் கட்டினார்; தெப்பக் குளம் வெட்டினார்; பெரிய அரண்மனையும் அமைத்தார்.

மங்கம்மாள் :—நாய்க்க வமிசத்தில் வந்த ராணி மங்கம்மாளும் மீனாட்சி கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்தாள்; சத்திரம் சாவடிகள் கட்டினாள்; நேர்மையாகவும் அரசாண்டாள். ராணி மங்கம்மாள் என்னும் பெயர் அங்கே மிகவும் பிரபலம். நாய்க்க மன்னர் பலரும் சுமார் இருநூறு வருஷகாலம் ஆட்சி செலுத்தி வந்தனர். அப்போது மதுரைப்பதி பலவகையிலும் சிறப்புப் பெற்றது.

கேள்விகள் :—1. சரித்திர வாயிலாகப் புலப்படும் முதல் பாண்டியன் யார்? 2. கோவலன் மதுரை சென்றதேன்? 3. பொன் கொல்லன் கோவலன்மீது பழி சுமத்தியதேன்? 4. தலையாலங்கானத்தில் யார் யாருக்கிடையே போர் மூண்டது? 5. நெடுஞ் செழியனது அன்பை உணர்த்த ஓர் உதாரணம் கூறுக. 6. திருமலை நாய்க்கர் மதுரையை எங்ஙனம் அழகு செய்தார்?

---

38. சேர ராஜ்யம்

சேர ராஜ்யம் மேலைக் கடல் கரையில் விளங்கியதாகும். திருவாங்கூர், கொச்சி, மலையாளம் இம் மூன்றும் கொண்டதே அந்த ராஜ்யம். ஆதியில் அதன்

தலைநகரம் வஞ்சி. கரூர் என்றும் அதனைச் சொல்லு வர். கொடுங்கோளூர் எனவும் அழைப்ப துண்டு.

முன்னம் முசிரி பெரிய துறைமுகமாக விளங்கி யது; அது பெரியாற்றின் முகத்துவாரத்தில் இருந் தது. அயல் நாடுகளான பாரசீகம், அரேபியா, கிரீஸ், இத்தாலி முதலிய தேசங்களுடன் முன்னம் அங்கே பெருத்த வியாபாரம் நடந்துவந்தது. சேரர் மிக்க தொல்குடியைச் சேர்ந்தோர். வடக்கே குருக்ஷேத் திரத்தில் மகாபாரத யுத்தம் நடந்ததல்லவா? அப் போர் நடந்த பதினெட்டு நாளும் அத்தனை பெயருக் கும் உதியஞ் சேரல்—பெருஞ் சோற்று உதியன் என் னும் அரசன் ஊண் கொடுத்து உதவினன் என்பர்.

அவன் மைந்தன் இமயவரம்பன் நெடுஞ் சேர லாதன் காலத்தில் தமிழகம் முழுதும் சேரர் ஆட் சிக்கு உட்பட்டிருந்தது. வடநாட்டிலும் இவன் தண்டுடன் சென்று, தரணியில் கீர்த்தி பெற்றான். அதன் அடையாளமாக இமயமலையிலே தனது வில் குறியிட்டான் என்று தமிழ் நூல்கள் கூறும். அன் னிய யவனரையும் போரிலே இவன் புறங்கண்டு வெற்றிபெற்றான்; போர்வேந்தனாக விளங்கியது போலவே கொடை வேந்தனாகவும் விளங்கினன்.

நெடுஞ் சேரலாதன் மகன் சேரன் செங்குட்டு வன். ஒரு நாள் அச் சேரலாதன் தனது சபையிலே வீற்றிருந்தான். அவனது இருபக்கத்திலும் மூத்த மைந்தன் செங்குட்டுவனும் இளைய மைந்தனும் இருந் தனர். சாமுத்திரிகா லட்சணம் நன்கறிந்த ஒருவன் அப்போது அரசவைக்கு வந்தான்; அரச குமாரர் இருவரையும் ஏறிட்டுப் பார்த்தான்; இளையவனுக்கே அரசுரிமை கிட்டும் என்றான்.

அது கேட்டதும் மூத்தவனும் செங்குட்டுவனது முகம் வாட்டமடைந்தது. அதுகண்ட இளையவன்

உடனே எழுந்து, "எந்தாய்! இந்த அறிஞர் கூறியது சரியன்று; மூத்த மைந்தனுக்கே அரசுரிமை கிட்டுதல் இயற்கை. இளையவன் முடிதரித்தல் ஒண்ணுது. என் அண்ணனுக்கு எத்தகைய கலக்கமும் வேண்டாம். இப்போதே நான் உலக இன்பம் துறந்து சந்நியாசி ஆகிறேன்," என்று கூறித் துறவி வேடம் பூண்டனன். அது கண்டும் கேட்டும் அனைவரும் அதிசயித்தனர். அவ்விதம் துறவு பூண்ட அரச குமாரனை இளங்கோவடிகள் என்பர். தமிழுக்கு மணியாரம் போன்ற சிலப்பதிகார நூலை இயற்றியவர் இந்த இளங்கோவடிகளே.

சேரலாதனுக்குப் பின் செங்குட்டுவன் சிம்மாசனம் ஏறினன். சோழவரசனும் மிக்க இளையவனுமான கிள்ளிவளவனுக்கு எதிராகத் தாயாதியர் கலகமாக எழுந்தபொழுது, சேரன் செங்குட்டுவனே அவனுக்குத் துணை சென்று உதவினன்.

இவனது தாயின் பெயர் நற்சோணை. அவள் கங்கா ஸ்நானம் செய்ய விரும்பினள். உடனே அவளை ஆடம்பரத்துடன் அழைத்துச் சென்று கங்கா ஸ்நானம் செய்வித்தான். அப்போது வடநாட்டரசரில் சிலர் இவனை ஏளனமாகப் பேசினர். இவன் அதுகேட்டு அவர்களைப் போரிலே ஜயித்துப் புகழ்மாலை பெற்றான்.

பத்தினிக் கடவுளான கண்ணகிக்கு ஆலயமொன்று இவன் கட்டுவித்தான். இதற்கு இமயமலையிலிருந்து கல் கொணர்ந்தான் என்பர். மேலும் இவன் கல்வி கேள்விகளில் சிறந்தவன்; வித்துவான்களை ஆதரித்தவன்; குடிமக்களின் நலத்தில் கருத்து மிகக் கொண்டவன்.

பின்னர் சேர ராஜ்யம், சோழ ராஜ்யத்திலே அடங்கிவிட்டது. நாளடைவில் சோழ, பாண்டிய

அரசுகள் அடியோடு மறைந்துவிட்டன. ஆயினும் சேர அரசோ மறையவில்லை. சேர அரசின் ஒரு பாகமான திருவாங்கூரில் இன்றும் ஓர் அரசர் இருந்து ஆட்சி புரிந்துவருகிறார்.

கேள்விகள் :—1. பெருஞ் சோற்று உதியன் என்று பெயர் வந்ததேன்? 2. இளங்கோ துறவு பூண்டதேன்? 3. பத்தினிக் கடவுள் என்பது யார்? 4. சேர அரசு இன்றும் மறையவில்லை என்பது எப்படி?

---

39. சமயாச்சாரியர்

ஆதியிலே ஆரியர் கண்டது வேத மார்க்கம். அதுவே இத் தேசமெங்கும் பிரபலம். அதனை இப்போது இந்து மதம் என்பர். இடை நடுவில் சமண மதம் முளைத்தது; புத்த மதமும் எழுந்தது. அசோகன், கனிஷ்கன், ஹர்ஷன் முதலிய பேரரசர் புத்த மதத்தைப் பெரிதும் போற்றி வந்தனர். அதனால் புத்த மதம் பொங்கிப் பரவியது.

ஆதியிலே இந்து மார்க்கத்தில் ஆலயங்கள் ஏற்படவில்லை. சமண, புத்த மதங்களோ ஆலயங்களை உண்டாக்கித் தேர் திருவிழாக்களை நடத்தி, ஜன சமூகத்தின் உள்ளத்தைக் கவரத் தொடங்கின.

அம்மதங்கள் தென்னிந்தியாவிலும் பிரபலம் அடையலாயின. அதுசமயம் பல்லவ வேந்தரில் பலரும் நேர்த்தியான ஆலயங்கள் சமைத்தனர்; புராண, இதிகாசங்களை எழுதுவித்தனர். அப்போது தென்னிந்தியாவில் அன்பே சிவம் என்னும் சைவ மதம் தோன்றலாயிற்று. நாயன்மார்கள் தெய்வங்களைத் தமிழ்ப் பாக்களில் துதித்தனர்; ஜனங்களிடம் தெய்வ பக்தியை வளர்த்தனர். பண்ணுடன் கூடிய அப்பாக்களைக் கேட்டு மக்களில் பலரும் பரவசங்கொண்டு பக்தி வலையில் சிக்கினர்.

அந்நாயன்மார்களில் நால்வரான அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் பாடிய தேவார, திருவாசகம் தமிழகமெங்கும் சிவன் கோயில்களிலே இசையுடன் ஓதப்படுவதை இன்றும் பார்க்கலாம்.

ஆழ்வார்கள் என்போர் தோன்றி வைஷ்ணவ சமயத்தையும் பெருக்கிவந்தனர். விஷ்ணு பக்தியில் மிகவும் சிறந்தவர்களே ஆழ்வார்கள் எனப் படுவர். அந்த ஆழ்வார்கள் பன்னிருவர். அவர்களோ ஏழு, எட்டு, ஒன்பதாவது நூற்றூண்டுகளில் வாழ்ந்தவர்கள். ஆழ்வார்கள் பாடிய பாமாலையே நாலாயிரப் பிரபந்தம் எனப்படும். விஷ்ணுவின் கோயில்களிலே இசையுடன் பிரபந்தங்களை நாள் தோறும் இன்றும் ஓதிவருவதைப் பார்க்கலாம். நாதமுனிகள் என்பவர் அப் பிரபந்தத்தைத் தொகுத்து, ஆழ்வார்களுக்கும் திருவிழாக்கள் நடத்த ஏற்பாடு செய்தார்.

பல்லவ வேந்தரும் தமிழரசரும் பிரபுக்களும் பக்திவலையில் பட்டு, நாயன்மார்களையும் ஆழ்வார்களையும் போற்றி வந்தனர். சைவ, வைணவ சமயங்கள் பக்திநெறியையே பெரிதும் புகட்டுவனவாம். வேதாந்த ஞான மார்க்கத்தை எடுத்துரைக்க மதாச்சாரியர்கள் மூவர் அவதரித்தார்கள். அவர்கள் ஸ்ரீமத் சங்கராச்சாரியார், ஸ்ரீமத் ராமானுஜாச்சாரியார், ஸ்ரீமத் மத்துவாச்சாரியார்.

சங்கரர் :—சேரநாட்டிலே காலடி என ஓர் ஊர் உண்டு. அங்கே சிவகுரு என்று ஒருவர் இருந்தார். அவர் மனையாளின் பெயர் ஆரியாம்பிகை. அத் தம்பதிகளுக்கு சங்கரர் எனும் குழந்தை பிறந்தது. பதினறு வயதுக்குள் சங்கரர் சகல நூல்களையும் ஓதாமல் ஓதி யுணர்ந்தார். துறவில் அவர் மனஞ்சென்றது. தாயின் அநுமதி கொண்டு, இளமையிலேயே

அவர் துறவு பூண்டார். பின்பு பல இடங்களிலும் சென்று, ஆங்காங்குள்ள பெரியார்களிடையே ஞான மார்க்கத்தை வற்புறுத்தி வந்தார்.

அவரது புத்திகூர்மை கண்டு அனைவரும் அதிசயித்து, அவரைப் புகழ்ந்து போற்றினர். அவரது போதத்தின் முக்கிய சாரம் இது :—



காலடி—சங்கரர் பிறந்த தலம்

நமது உடம்பு அழியும். ஆன்மா அல்லது ஜீவன் என்றும் அழியாது. மேலும் ஆன்மா பல பிறவிகள் கொள்ளும். அந்தந்தப் பிறவியின் பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப, மறுபிறப்பு உண்டாகும். நற்குண நற்செயல்களே புரிந்து வந்தால், உயர்ந்த பிறப்புக் கிட்டும். உடம்பு அழிந்ததும், உடலைச் சுட்டெரித்து விடுவர். ஆன்மாவை அவ்விதம் சுட்டெரிக்க முடியாது.

அகிலம் வல்ல ஆண்டவன் பரமாத்மா. அப்பரமாத்மாவின் ஓர் அம்சமே நம் உயிர். ஆதலின் நம்மை நாம் அறிதல்வேண்டும். அறியின், ஆன்மா பரமாத்மாவிடம் ஐக்கியம் ஆகிவிடும். இதுவே முக்தி

யாம். பரமாத்மாவும் ஜீவாத்மாவும் ஒன்று. இரண்டுக்கும் பேதம் இல்லை. இதுவே சங்கரரின் சித்தாந்தம். இதனையே அத்வைதம் என்பர். அத்வைதம் என்றால் இரண்டற்றது என்று அர்த்தம். இந்த உண்மையை உணர விரும்பின், ஈசனை முழு மனதுடன் தியானித்து வழிபடவேண்டும் என்று அவர் போதித்தார்; உபநிஷதங்களுக்கும் உரை எழுதினார். நாட்டிலே பற்பல இடங்களில் மடங்களை அமைத்து, அந்த உண்மையைப் பரப்பினார்.

எல்லாரும் அவரை லோக குரு, சங்கராச்சாரிய சுவாமிகள் என்று பெருமையாகப் பேசினார்கள். காஞ்சிமா நகரிலே அவர் ஏற்படுத்திய காமகோடி பீடம் மிகவும் சிறந்தது. அப்பீடத்தில் இன்றும் ஒருவர் இருந்து, அந்த உண்மைகளை மக்கள் அனைவருக்கும் உணர்த்தி வருகிறார்.

ராமானுஜர் :—இவர் செங்கல்பட்டு ஜில்லாவிலுள்ள ஸ்ரீ பெரும்பூதூர் என்னும் ஊரில் அவதரித்தவர். 11-ஆம் நூற்றாண்டின் துவக்கம் இவரது அவதார காலம் என்பர். இவர் காஞ்சியில் யாதவப் பிரகாசர் என்னும் குருவிடம் பாடங்கேட்டு வந்து சின்னாளிலேயே ஸகல கலா வல்லவர் ஆனார். அது கண்டு பலர் பொறாமை பூண்டனர். அதனால் இவர் ஸ்ரீரங்கம் சென்று, அங்கே சில காலம் வாழ்ந்தார். மறுபடியும் காஞ்சி சேர்ந்து, இல்லறம் நடத்தினார்; சிறிது நாளைக்கெல்லாம் துறவறம் பூண்டுவிட்டார். துறவறத்திலே இவர் நிகரற்று விளங்கலானார். அதனால் யதிராஜர் எனும் சிறப்புப் பெயர் உண்டாயிற்று. பின்பு இவர் மீண்டும் ஸ்ரீரங்கம் சென்று வாழலானார். அங்கே இவருக்குத் துன்பம் நேர்ந்தது. அதனால் இவர் மைசூர் சேர்ந்து, வசிக்க நேர்ந்தது. அப்பால் ஸ்ரீரங்கம்

சென்று, அரங்கநாதன் திருப்பணியைக் கவனித்து வந்தார். இவரும் சங்கரரைப்போல் ஊர் ஊராகச் சென்று போதம் புரிந்தார். இவரது போதத்தின் முக்கிய சாரம் :—

"ஜீவாத்மாபரமாத்மாவின் தன்மையை அடைந்தாலும் என்ன ? அடைந்த பின்னும் பரமாத்மாவுக்குத் தொண்டுபுரிதல் வேண்டும். இஃதே ஜீவாத்மாவின் தொழில்." இதனை விசிஷ்டாத்துவைதம் என்பர். அதாவது அத்வைதத்தினும் உயர்ந்தது என்பதாம்.

ஞான நெறியை சங்கரர் வற்புறுத்த, ராமானுஜரோ பக்தியினாலும் கருமத்தினாலும் பரமாத்மாவுக்குத் தொண்டாற்றிப் பேரானந்தம் எய்தலாம் என்று வற்புறுத்தினர். இவரும் பல மடங்களைக் கட்டித் தமது கொள்கையைப் பரப்பினர். இவருக்கு உடையவர், பாஷ்யகாரர் எனவும் பெயர்கள் உண்டு. ஸ்ரீ பெரும்பூதூரிலே இவருக்கு ஓர் ஆலயம் உளது.

ஸ்ரீ மத்வர் :—இவர் தென் கன்னடம் ஜில்லாவிலே உடுப்பி என்னும் தலத்தில் பிறந்தவர். இவர் காலம் பதின்மூன்றும் நூற்றாண்டு என்பர். இவரும் இளமையிலேயே எல்லாம் அறிந்தவரானர். இவருக்கு ஆனந்ததீர்த்தர் என்றும் பெயர் உண்டு. இவரை வாயு பகவானது அம்சம் என்பர். இவரும் ஜீவாத்ம, பரமாத்ம லட்சணங்களை ஆராய்ந்து அறிவுறுத்தியவர். இவருக்கு ஆஞ்சனேயரிடம் பற்று மிகுதி. ஜீவாத்மா வேறு, பரமாத்மா வேறு என்பது இவர் கொள்கை. தொண்டுபுரிந்து பரமாத்வை ஜீவாத்மா அடையலாம் என்றார் இவரும். இவருடைய சித்தாந்தம் தூவைதம் எனப்படும்.

இவரும் ஊர் ஊராகச் சென்று, தமது சித்தாந்தத்தை எங்கும் நிலைநாட்டினர்; பற்பல மடங்கள் அமைத்து, வேதாந்தக்கல்வியைப் பரப்பினர். சங்கர

ரரும் ராமானுஜரும் சொல்லியவற்றை இவர் இன்னும் இலகுவாக்கினர் என்னலாம்.

இம்மூவர் போதனைகளின் பயன் ஒன்றேயாம். மனத்தை அடக்கி, அறிவது அறிந்து, அஞ்சுவது அஞ்சி, நன்னெறியில் நின்று, தொண்டுபுரிந்து ஆண்டவனை அடைதல் வேண்டும் என்பதே இவர்களது போதனையின் பொதுவான சாரமாம்.

கேள்விகள் :—1. ஸ்ரீ சங்கரர் எந்த நாட்டில் பிறந்தார்? 2. பரமாத்மா என்பது யார்? 3. யாதவப் பிரகாசர் என்பவர் யார்? 4. ஸ்ரீ ராமானுஜர் மைசூர் போனதேன்? 5. உடையவர் என்பது யார்? 6. உடையவர் பிறந்த தலம் எது? 7. உடுப்பியில் அவதரித்த பெரியார் யார்?

40. பாரத ஜோதி

பல்வகை வளமும் சுரப்பது நமது பாரத பூமி. ஆனது பற்றியே ஆதியில் ஆரியரும் அப்பால் அன்னியர் பலரும் இங்கு வரலாயினர். கிரேக்க வேந்தன் அலெக்சாந்தர் வந்த காலையில், எல்லைப்புறத்திலே சின்னஞ்சிறிய தனியரசுகளே இருந்தமையால், அக் கிரேக்க வீரனை எதிர்த் தடிக்க முடியவில்லை. இது கருதியே வல்லரசு கொண்டு குலவினன் சந்திர குப்த மௌரியன்.

அந்நாளிலே வேத, உபநிஷதங்களின் உயர்ந்த கருத்துக்களை இங்கிருந்து கிரேக்கர் பலர் கற்றுச் சென்று, கிரீஸிலே பரப்பினர்; கிரீஸிலிருந்து அக் கருத்துக்கள் உரோமாபுரிக்குச் செல்ல, அங்கிருந்து ஐரோப்பா வெங்கும் பரிமளித்தன. அசோகனே ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா முதலிய இடங்களுக்கு மத போதகரை யனுப்பி, ஞானச் சுடர் கொளுத்தினன். சீனா, ஜப்பான், இலங்கை இந்த இடங்களிலும் பாரத ஜோதி வீசியது.

சுதந்திரத்திலே நம்மவருக்கு நாட்டமுண்டென மௌரியரும் குப்தரும், ஹர்ஷனும் புலிகேசியும், ராஜபுத்திரரும் தமிழரும் நிலைநாட்டினர். நாட்டின் நலங்கெடுக்கும் ஹூணர் முதலியோரை மறித்து மடக்கி, ஆண்மையும் திண்மையும் காட்டின ஆரியா வர்த்த அரசுகள் பலவும்.

மக்களது மனத்தின் மாசையெல்லாம் துடைக்க வேண்டி, மகாவீரரும் கௌதம புத்தரும் நாயன் மாரும் ஆழ்வாரும் ஆச்சாரியர்களும் கிளம்பினர்; அறக்கொடி தூக்கினர்; அன்புக்கொடி நாட்டினர்; எல்லாரும் ஓர் இனம் என்று நினைவூட்டினர்.

ஜனங்கள் சுகமே வாழவும், தேசம் சிறந்து நிற் கவும், சந்திரகுப்த மௌரியன்முதல் ராஜராஜன் வரையில் எல்லா அரசரும் கல்வி கேள்விகளைப் பரப்ப வழிதேடினர்; கலாசாலைகளையும் கல்விக் கழகங்களையும் ஆதரித்தனர்; கவிஞரையும் புல வரையும் போற்றினர்; ஏனைய கலைகளான சிற்பம், ஓவியம் முதலியவற்றையும் கைதூக்கி விட்டனர்; ராமாயண, பாரத, புராணப் பிரசங்கங்களையும் பாட்டு கூத்துக்களையும் பிரபலஞ் செய்தனர்.

நீர் நிலவளங்களை ஆதி முதல் அரசர் பெருக்கி வந்தமையால், விவசாயம் ஓங்கியது; வியாபாரம் செழித்தது; வர்த்தகம் கொழித்தது. நம் தேசச் சரக்குகள் பாரெங்கும் பரவிப்பெருகின. நகரங்கள் பெருத்தன; துறைமுகங்கள் திகழ்ந்தன; கப்பல் கட்டுந்தொழிலும் ஓட்டுந்தொழிலும் உயர்வெய்தின.

நம்மவர் அயலகஞ் சென்று வாழ, கிழக்கிலும் வடக்கிலும் தொலைதூரம் தமிழரின் ஒளி வீசியது. தமிழ் வேந்தரின் காலத்திலே இலங்கைத் தீவும் பர்மா நாடும் இங்கிருந்து கலையுணர்ச்சி பெற்றன. நமது சிற்பம், ஓவியம், சமயம் முதலியன முதலில்

பர்மாவிலே பரவ, அங்கிருந்து சியாம் (இப்போது தாய்லாந்து), கம்போடியா நாடுகளுக்கும் எட்டின. இவ்விரண்டு இடங்களிலும் வழங்கும் எழுத்துக்கள் நந் தமிழ் மொழியின் எழுத்துக்களைப் பின்பற்றி எழுந்தனவேயாம்.

கம்போடியாவிலே தென்னாட்டுக் கோயில்களைப் போன்ற ஆலயமொன்றை ஸூர்யவர்மன் என்பான் பன்னிரண்டாம் நூற்றாண்டில் அமைக்கலானான். ஆங்கே ஆட்சி செலுத்திய அரசர்களின் பெயர்களெல்லாம் தென்னிந்தியாவின் சாயலையே காட்டும். மகாபாரதமும் ராமாயணமும் கம்போடியாவில் மட்டுமல்லாமல், சுமத்ரா, ஜாவா முதலிய தீவுகளிலும் பிரபலம் எய்தின. அத்தீவுகளில் தமிழர் குடியேறி அருளாண்மை செலுத்திய பல அடையாளங்கள் இன்றும் அங்கே உள.

ஜாவா எனும் சாவகத்தீவிலே உள்ள சிற்ப, ஓவியத் தொழில்கள் பலவும் தமிழகம் தந்த தனமெனவே தோற்றும். பாரதநாட்டினர் பல திசையிலும் சென்று, புண்படுத்தாது பண்படுத்தியே புகழும் பெருமையும் நிலைநாட்டினர். இந்த அரிய உண்மைகளை எல்லாம் மனத்துட்கொண்டே நமது பாரதியார் பின்வருமாறு பாடியுள்ளார்:—

சிங்களம் புட்பகம் சாவக—மாதிய
தீவு பலவினுஞ் சென்றேறி—அங்கு
தங்கள் புலிக்கொடி மீன்கொடியும் நின்று
சால்புறக்கண்டவர் தாய்நாடு!

சீனமிசிரம் யவனரகம்—இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசிக்—கலை
ஞானம் படைத்தொழில் வாணிபமும் மிக
நன்று வளர்த்த தமிழ்நாடு!

சுபம்!

2253

BALAR DESA CHARITHRAM Book-III

BY SUNDARA SUBRAHMANYAM

JAYAM & CO. NUNGUMBAKKAM

Copyright] MADRAS [Price As. 7